# பூ மனமே தாழ் திறவாய்


அருணா நந்தினி



## உள்ளே...


| | | |
|---|---|---|
| 1. | பூ மனமே தாழ் திறவாய் | 5 |
| 2. | மன்னிக்க மாட்டாயா? | 131 |


# பூ மனமே தாழ் திறவாய்



## 1

காதலனுக்காக பூங்காவில் காத்துக்கொண்டிருந்தாள், வினிதா.

அவன் வரவில்லை.

பெருமூச்சுவிட்டாள். இந்தக் காதல் நிறைவேறுமா? எல்லாம் கனவாய், கதையாய் போய்விடுமா?

ஒரே பிடிக்குள் அடங்கும் இந்தச் சின்ன இதயம், ஓராயிரம் கனவுகளையும் கற்பனைகளையும் சுமந்துகொண்டிருக்கிறது.

என் இதயம் இன்னும் கொஞ்ச நாள்தான் துடிக்கும்.... ஆறு மாதமோ, பத்து மாதமோ?

அதற்குமேல் நம்பிக்கை இல்லை.

வேதனையில் அவள் மனம் கனத்துப்போனது.

மரணம்... எத்தனை பயங்கரமானது! எப்போது வரும் என்று தெரியாதவரை அதைப்பற்றி யோசிப்பது இல்லை..

இதோ... 'உனக்கு தேதி குறித்தாகிவிட்டது' என்று அறிந்ததும் ஏதோ ஒரு பீதி... பயம்.. நடுக்கம்..

தன் பெற்றோரிடம் மருத்துவர் சொன்னபோது அவள் அடைந்த அதிர்ச்சி...

தன் வாழ்நாளுக்கு வரம்பு கட்டியாகிவிட்டது என்ற உண்மை தெரிவதைவிட மிகப்பெரிய கொடுமை, வேறு ஏதுமில்லைதான்.

தன்னை வெளியில் போகச் சொல்லிவிட்டு, பெற்றோரிடம் மருத்துவர் ஏதோ பேச விரும்புகிறார் என்பதை உணர்ந்தாள். அது என்ன என்று தெரிந்துகொள்ளும் ஆவல் வந்தது. மெல்ல பூனை நடை நடந்து வந்து திரைமறைவில் நின்று கொண்டாள்.

கேட்டது நல்ல செய்தியாக இல்லை.. 'வினிதா அதிக நாட்கள் உயிர் வாழப்போவதில்லை... மூளையில் கட்டி இருக்கிறது.'

அந்த நிலையிலும் அவளுக்கு விரக்தி கலந்த சிரிப்புத்தான் வந்தது. எத்தனை படங்களில் பார்த்திருக் கிறாள். கதாநாயகியையோ, கதாநாயகனையோ அனுதாப பாத்திரமாய் மாற்ற, எவ்வளவு சுலபமாய் மூளையில் கட்டி... இல்லையென்றால் இதயத்தில் ஓட்டை... இரத்தப் புற்று நோய் என்று சொல்லி விடுவார்கள்.

Uploaded by Naghu



வினிதாவே அதைக் கிண்டல் செய்திருக்கிறாள். 'அது எப்படியடி அத்தனை சுலபமாய்ச் சொல்லி விடுகிறார்கள். கதாபாத்திரத்தைச் சாகடிக்கணும்னா இப்படி ஏதாவது ஒரு சினிமாத்தனம்!' அப்படி பழித்ததற்குக் கூலியாய், அவளுக்கே விதி அதைக் கொடுத்துவிட்டதா?

அவள், அழ முயற்சித்துத் தோற்றுப்போனாள். இதுவரை அவள் அழுததில்லை. அழுவது அவளுக்குப் பிடிக்காத ஒன்று.

அம்மாவும் அழுதாள். அது அவளுக்கும் தெரியும். பெற்ற வயிறு இல்லையா.. பரிதவிப்பு.. வேதனை...

வினிதா வெளிக்காட்டிக் கொள்ளவில்லை. தனக்குத் தெரியும் என்று அம்மாவுக்குத் தெரிந்துவிட்டால் அவ்வளவு தான்.

இப்போது மறைவில் அழும் அம்மா, அப்புறம் வெளிப்படையாகவே அழத் தொடங்குவாள்... வேண்டாமே.

அப்பா, உள்ளத்து உணர்ச்சிகளை அடக்கத் தெரிந்தவர். அம்மா, அப்படியில்லை... தனிமையில் அழுதுவிட்டு, மகளைக் கண்டதும் பொய்ப் புன்னகையை உதட்டில் ஒட்டிக்கொண்டு வளைய வருவாள்.

அவள், வீட்டினுள் நுழைந்ததும், அவளுக்காகவே காத்திருக்கும் தாய், ஓடிவருவாள்.

'ஏன் தாமதம்.. உனக்குப் பிடிச்சதா சமைத்து வைச்சிருக்கேன். உருளைக்கிழங்கு மசாலா வறுவல்... வெங்காய சாம்பார்... வா. நானே பிசைந்து கையில் கொடுக்கிறேன்' இதைச் சொல்லும் போதே குரல் கரகரக்கும். இன்னும்

எத்தனை நாளுக்கு? நோய் என்னைக் கொல்கிறது. வேதனை, அம்மாவைக் கொல்கிறது...

'நாக்குக்கு இத்தனை சுவை ஆசை கூடாதுடி.. கொஞ்சம் நாக்கை அடக்கப் பார்... போகிற இடத்தில் எது எப்படி இருக்குமோ?' என்று பேசமாட்டாளா?

இந்த அனுதாபமும், அதீத கவனிப்பும் வினிதாவுக்கு பிடிக்கவில்லை.

அப்பா மட்டும் என்ன... அவரும்தான் அவளுக்குப் பிடித்தவற்றையெல்லாம் வாங்கிக் கொட்டுகிறார்.

'நீ பெரியவள் வினி... உனக்கே வேண்டும் என்று அடம்பிடித்தால் எப்படி... உன்னைப் பார்த்து அவர்களும் பிடிவாதம் பிடிக்கமாட்டார்களா' என்று இப்போது அதட்டமாட்டாரா?

Uploaded by Naghu

அவர்களது பச்சாதாபமும் அனுதாபமும் அவளைத் திணற வைத்தன.

அவர்களது அன்பு, அவளை மூச்சுமுட்டச் செய்தது.

'அய்யோ.. வேண்டாம்.. நிறுத்துங்களேன்' என்று அலறவேண்டும் போல் தோன்றியது.

'அம்மா... என்னைத் திட்டும்மா.. அப்பா என்னுடன் கோபப்படுங்கப்பா... சந்தியா, கோகுல் தயவுசெய்து என்னிடம் சண்டை போடுங்களேன்' மனம் புலம்பியது.

"ஏம்மா.. மணி எத்தனை?" வெத்தலையைக் குதப்பிக் கொண்டு யாரோ ஒரு அம்மாள் கேட்க, மணிக்கட்டைத் திருப்பிப் பார்த்தாள்.

"மணி ஆறு."



'இனி அவன் வரப்போவதில்லை. எப்படி வருவான்? இந்த அல்பாயுசுக்காரியைப் பார்த்து என்ன பயன்? ஊகூம்..'

அப்போது அவன் வந்தான். அவளுக்கு வியப்பு!

"மன்னிச்சிடு வினி! ரொம்ப தாமதமாயிடுச்சா" என்றவன், அருகில் அமர்ந்தான்.

"அதிகமில்லை.. ஒரே ஒரு மணித்துளிதான் தாமதம்" என்றாள்.

அவன் 'பக்' கென்று சிரித்தான்.

மறுவினாடி புன்னகை மறைந்து, வேதனையின் சாயல் முகத்தில் படிந்தது.

"வினி.. நீ உன்னதமானவ.. ஐ லைக் யூ.. உன் நிலையில் வேறு யார் இருந்தாலும் மூலையில் முடங்கி, கண்ணீர் விட்டுக்கொண்டு இருப்பாங்க. ஆனால், நீ.. இப்போதும்.." அவன் முடிக்கவில்லை.

"ஏன் கிருஷ்ணா.. வெறும் 'லைக்' தானா! லவ் பண்ணலையா.. இனி அது முடியாது.. இல்லே.."

அவன் முகம் கோணியது.

"வினி.. என்னம்மா.. நீ.."

"சும்மா ஒரு தமாஷ்தான் கிருஷ்... முடியப்போகும் கதைக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டிய நேரம் நெருங்குது. கதை சரியான்னு இனி ஆராய்ச்சி பண்ணிப் பயனில்லை... இல்லையா கிருஷ்.." வேதனையை மறக்க கலகலவென்று சிரித்தாள், அவள்.

"வினி.. இப்போதே உன்னை மணந்துகொள்ள நான் தயார்... என் காதல் இன்னும் சாகலைம்மா.. அதற்குச் சாவே

இல்லை வினி.." அவளது கரங்களைப் பற்றிக்கொண்டு சொன்னான், கிருஷ்ணா.

"வேண்டாம் கிருஷ்ணா... உங்களுக்கு நீண்ட.. ஆரோக்கியமான, நல்ல எதிர்காலம் இருக்கு.. உங்க வீட்டில் நீங்கள் ஒரே பிள்ளை. உங்களைப் பெற்றவர்கள் மனம் கலங்கக்கூடாது... அன்றைக்கே நான் தீர்மானித்துவிட்டேன். நம் தொடர்பு வெறும் நட்போட முடிந்துவிட வேண்டும். ரெயில் சிநேகிதம் மாதிரிதான் இதுவும்.."

"வினி..."

"நான் சொல்வதை முழுக்கக் கேட்டுவிட்டு பிறகு நீங்க பேசுங்க கிருஷ்ணா.. பயணத்தில் சந்தித்துப் பிரியும் பயணிகள் போல 'குட்பை' சொல்லிவிட்டு, நான் போகப் போறேன்... என் நினைவை நீங்கள் இரண்டு நாளில் மறக்க வேண்டும். அதன்பிறகு உங்கள் எதிர்காலத்தைப் பற்றிச் சிந்தித்துச் செயல்படுங்கள் கிருஷ்ணா..."

"நம் காதலை அத்தனை மட்டமாகவா எடை போட்டு விட்டாய் வினி... நீ எத்தனை காலம் வாழ்வாய்.. பத்து நாளா... பத்து மாதமா...இல்லை பத்து.."

"நிறுத்து கிருஷ்ணா... அதற்குமேல் சாத்தியம் இல்லை. பத்து மாதத்துடன் முடித்துக் கொள்ளுங்கள்..."

"சரி.. நீ பத்து மணி நேரமே வாழ்ந்தாலும் அது எனக்கு போதும். நீயும் நானும் சேர்ந்து அந்தப் பத்து மணி நேரம் வாழ்ந்தாலும் அதுவே எனக்கு மகிழ்ச்சிதான் வினி.."

"பிறகு.. பிறகு என்ன கிருஷ்ணா? இதையே நினைத்துக் கொண்டு மீதி வாழ்க்கையைக் கழிப்பீர்களாக்கும்.. எதார்த்தமாக யோசியுங்க... இன்றோ.. நாளையோ...



மறுநாளோ என்று சாவை எதிர்நோக்கிக் காத்திருக்கும் ஒருத்தியை மணந்துகொண்டு, அவள் நோயோடு நீங்களும் போராடி.. அவள் இறந்தபின்பு இது சினிமா இல்லை... வாழ்க்கை! நிழல் இல்லை... நிஜம்! நாம் இருவரும் வெறும் நண்பர்கள் தான்... மனைவியைத் தேடுங்கள்.. நான் உயிருடன் இருக்கும்போதே நீங்கள் கல்யாணம் செய்து..."

"நிறுத்து வினி.. நாம் நண்பர்களாக இருந்துவிட வேண்டும்... அவ்வளவுதானே.. சரி..அப்படியே செய்ய லாம். இன்னொருத்தியை மணப்பது பற்றி இப்ப எதுவும் பேசாதே.. எழுந்திரு.. இருட்டிவிட்டது.. உன் வீட்டில் தேடுவாங்க... வா.." கரம் நீட்டி, அவளை எழுப்பினான்.

ஒட்டியிருந்த மண் துகள்களை உதறிவிட்டு அவனுடன் நடந்தாள்.

Uploaded by Naghu

"எவ்வளவு சீக்கிரம் இருட்டிவிட்டது."

"அதானே!"

"சாவு திடீர் என்று வந்து நம்மை சூழ்ந்துகொள்வது போல.." முணுமுணுத்தாள், அவள்.

"என்ன முணுமுணுப்பு..?"


"நேரமாகிவிட்டது.. பஸ் கிடைக்கணும் என்றுதான்.."

'பளீர்' என்று தலைக்குள் வலி!

சீக்கிரம் வீட்டுக்குப் போகவேண்டும்.. வலி அதிக மாவதற்கு முன் வீட்டில் இருக்க வேண்டும். முதலில் அடக்கி வாசித்த வலி இப்போதெல்லாம் சம்மட்டி அடியாக விழுகிறது... நல்ல வேளையாய் பேருந்தும் உடன் வந்து நின்றது. ஏறிக்கொண்டாள்.

கிருஷ்ணாவின் கையசைப்புக்கு விடை தர முடிய வில்லை. அந்த அளவுக்கு வலி வேதனை.

இருக்கையில் சாய்ந்து கண்களை மூடினாள்.



## 2

**வா**சலில் அம்மா, தவம் கிடப்பதை தூரத்தில் இருந்து கவனித்தாள், வினிதா. மனதில் வேதனை.

ஏற்கனவே மகள், தனியாக நேரம் கழித்து வருகிறாள் என்ற தவிப்பு. கூடவே, சாவை எதிர்நோக்கி இருக்கும் மக ளுக்கு ஏதும் ஆகிவிடுமோ? என்ற பயமும் சேர்ந்து கொண்டது.

'ச்சே.. கிருஷ்ணாவுடன் பேசிக்கொண்டிருந்ததில் நேரம் போனதே தெரியாமல் இருந்தாகிவிட்டது... இது தப்புதான்' - நினைத்தாள், வினிதா.

வயிற்றில் நெருப்புக் கட்டிக்கொண்டிருக்கும் எல்லா தாய்களைப் போல அவளைப் பார்த்ததும் ''ஏம்மா இத்தனை தாமதம்'' என்று கேட்டாள், தாய்.

சிரித்துக்கொண்டே ''உண்மையைச் சொல்லட்டுமா, பொய் சொல்லட்டுமா?'' என்றாள் வினிதா.

''இதென்னம்மா விளையாட்டு.. இதில் உண்மை என்ன, பொய் என்ன?''



''அம்மா... நான், என் நண்பர் கிருஷ்ணாவோடு பேசிக்கொண்டிருந்தேன்.. நேரமானது தெரியவில்லை..''

ஒளித்து வைக்க நினைத்த உண்மை.. ஆனால், சொல்லி விட்டாள்.

வேறு நாளாய் இருந்தால் ''என்ன கொழுப்பு உனக்கு? யாரு அவன்.. அந்த கிருஷ்ணா?'' என்று குதித்திருப்பாள். ஆனால், இன்று நிலைமையே வேறு.

'இனி இருக்கும் கொஞ்ச காலத்தை நிம்மதியாக, மகிழ்ச்சியாக அவள் கழிக்கட்டுமே' என்று நினைத்தது, தாய் உள்ளம்.

அதைப் புரிந்தவளாய் மனதினுள் சிரித்துக்கொண்டாள், வினிதா.

தந்தை மட்டும் என்ன... அவரும்தான் நல்ல மனதுடன் ஏற்றுக்கொண்டார். அவரைப் பொறுத்தவரை மகளின் மகிழ்ச்சிதான் இப்போது முக்கியமாக இருந்தது.

''அப்பா... இன்னிக்கு என்னோடு 'செஸ்' ஆடப் போகிறீங்க. என்னிடம் தோற்கப் போகிறீங்க'' என்று பய முறுத்தியவாறே சதுரங்கக் காய்களை எடுத்து அடுக்கினாள்.

அப்பாதான் குரு. அவரிடம் கற்றுக்கொண்ட விளை யாட்டு. வழக்கமாகத் தோற்பது அவள்தான். தந்தையைத் தோற்கடிக்க எவ்வளவோ முயன்றும் அவளால் அது இயலவில்லை.

''திரும்பத் திரும்ப முயற்சி செய் வினி. வெற்றி கிடைக்கும். ஒண்ணு தெரியுமா? என் நண்பன்தான் எனக்கு குரு. அவனோட ஆடி யாராலும் வெல்ல முடியாது. அவன்

கிட்டே நிறைய தடவை தோற்றுப்போயிருக்கிறேன். ஒவ்வொரு தடவையும் தோற்கும் போதும் வேறு முறையில் முயன்று பார்ப்பேன். கடைசியில் அவனையே வென்று காட்டினேன். அதேமாதிரி நீயும் என்னைத் தோறகடித்துக் காட்டணும்'' தந்தை அடிக்கடி சொல்லும் அறிவுரை இது.

அதே தந்தை இன்றைக்கு அரை மனதுடன் ஆடினார். வேண்டும் என்றே கவனக்குறைவுடன் சதுரங்கக் காய்களை நகர்த்தினார்.. வேண்டும் என்றே மகளிடம் தோற்றுப் போனார்.

''அடேங்கப்பா.. வினிக்குட்டி.. அப்பாவையே தோற் கடித்து விட்டாயே! இதேமாதிரி திறமையா விளையாடு'' மகளைப் பாராட்டினார், வாழ்த்தினார்.

வினிதாவிற்கு இந்த வெற்றி, பிடிக்கவில்லை. இது, அப்பாவாக விட்டுக்கொடுத்தது! உள்மனம் அதை ஏற்பதாக இல்லை.

''கௌசல்யா.. இன்றைக்கு உன் பெண் என்னை ஜெயித் துட்டா பார். இன்றைக்கு இனிப்பு செய், எல்லோரும் சாப்பிடலாம்'' பெருமையுடன் சொல்வது போல சொன்னார்.

அம்மாவும் விடவில்லை. அவளுக்குப் பிடித்த காரட் அல் வாவைச் செய்தாள். அவள் முன் தட்டில் நிறைய வைத்தாள்.

தம்பி வெகுளியாய், ''அம்மா.. அக்காவுக்கு மட்டும் நிறைய'' என்று இழுத்தபோது, தாய் கண்களால் வெட்டி, வாயை மூடவைத்ததைக் கவனித்தாள்.

''எனக்கு எதுக்கும்மா இத்தனை? இந்தாடா.. தட்டைக் காட்டு'' என்றவள், கொஞ்சம் இனிப்பை எடுத்துத் தம்பியின் தட்டில் வைத்தாள்.



அப்பா, வேண்டும் என்றே தோற்றுப்போனதும், அம்மா தன்னை அதிகமாய் கவனிப்பதும் அவளுக்கு வேதனை யாக இருந்தது.

'போதும்.. நிறுத்துங்க' என்று கத்த வேண்டும் போலத் தோன்றியது.

கோபத்தில் கத்திவிடலாம். அதன் பின்பு?

அம்மா அழத் தொடங்கிவிடுவாள்.

இப்பவும் அம்மா, இராத்திரியில் தனியாக அழுகிறாள்... மறுநாள் அவள் முகத்தைப் பார்த்தால் தெரிந்துவிடும்.

அப்பா, தன்னை நினைத்து உருகுவதும் நன்றாகத் தெரிந்தது.

ஒரு வாரத்தில் அம்மாவும், அப்பாவும் பத்து வயது கூடிப் போய்த் தெரிந்தார்கள்.

அம்மா, ஒடுங்கிப் போனாள்.

அப்பாவின் சட்டை, உடம்பில் தொளதொளப் பையாய் தொங்கியது.

உள்ளுக்குள்ளே உருகிக்கொண்டிருக்கும் தன் பெற் றோரைக் காணும்போது, அவர்களுக்காகவாவது, ஆண் டவன் தனக்கு கூடுதல் ஆயுளைக் கொடுத்திருக்கக்கூடாதா என்று ஏங்கினாள்.

''அந்தப் பையன் யாரும்மா?''

அம்மாவின் குரலில் நினைவுகளைத் தள்ளினாள்.

''யாரும்மா?''

''அதுதான் கிருஷ்ணா.. யார் அவன்?''

''என் பிரண்ட்.''

''அக்கா... பாய்பிரண்டா?'' அப்பாவியாய்க் கேட்டான், தம்பி.

''உஷ்... கோகுல்! பேசாம சாப்பிடு. உனக்கு எதுக்குப் பெரியவர்கள் பேச்சு? சாப்பிட்டாச்சுன்னா எழுந்து போ'' அப்பா அதட்டினார்.

''பெரியவர்கள் பேச்சு.. எப்போதும் அதையே சொல்லி துரத்திவிடுங்க..'' முணுமுணுத்தவாறு எழுந்து சென்றான், கோகுல்.

''நீ சொல்லும்மா'' மகள்புறம் திரும்பினாள், கௌசல்யா.

''அம்மா.. கிருஷ்ணாவும் நானும் ஒருத்தரையொருத்தர் விரும்பினோம். அவர் என்னைத் திருமணம் செய்துகொள்ள நினைத்தார். நான்.. நான்தான்..'' உண்மையை எப்படிச் சொல்வது என்று திணறினாள், வினிதா.

''நீ என்ன சொன்னே?''

''இன்னும் ஏதும் சொல்லலைம்மா.. கிருஷ்ணாவும் தன் வீட்டில் இதுபற்றி ஏதும் சொல்லலை.''

அவன் யார்? எங்கு வேலை செய்கிறான்? பெற்றோர் யார்? பெற்றவர்கள் கேட்க, பொறுமையாய்ப் பதில் சொன்னாள்.

''ஒருநாள் அந்தப் பையனை அழைத்து வாயேன் வினி.''

'அப்பாவா இதைச் சொன்னார்?' ஆச்சரியமாய் பார்த்தாள்.



''ஆமாம் வினி.. அழைத்து வாயேன்'' அம்மாவும் சொன்னாள். அத்துடன் இந்தப் பேச்சு போதும் என்பது போல விட்டு விட்டனர்.

இரவு, தூக்கம் வராமல் புரண்டு படுத்தாள், வினிதா.

'அம்மா - அப்பாவின் எண்ணம் என்ன? திருமணம் பண்ணிப் பார்க்கனும் என்றா? அது எப்படி சாத்தியம்? தாலிக் கட்டுபவனின் எதிர்காலம் என்ன? அவன் மனம் என்ன பாடுபடும்? அதையெல்லாம் இவர்கள் உணரவில்லையே.'

'ஒருவேளை மகளின் மகிழ்ச்சி ஒன்றுதான் இவர்களின் குறியோ!'


'அவர்களது எண்ணம் எதுவானாலும் சரி.. தன்னால் ஒருவனின் வாழ்க்கை சூன்யமாகக்கூடாது' அவளின் மனதினுள் முடிவு எழுந்தது.

அவளின் பெற்றோருக்கு அந்த எண்ணம் வந்தது உண்மைதான்.

மகளுக்கு நோய் வராமல் இருந்திருந்தால், 'காதலாவது கத்திரிக்காயாவது?' என்று சொல்லி அடக்கி இருப்பார்கள்.

ஆனால், இப்போது மகளின் வாழ்க்கையில் ஒவ்வொரு நிமிடமும் முக்கியமானது. ஒருவேளை அந்தக் கிருஷ்ணா, உண்மையாகவே வினியை விரும்பினால்... அது நடக்குமா என்று யோசிக்காமல், நடக்க வேண்டும் என்று ஆசைப்பட்டார்கள்.

அந்த நினைவு தந்த நிம்மதியில் நன்றாக உறங்கிப் போனார்கள்.



## 3

வினிதா எதிர்பார்த்தது போல கிருஷ்ணாவின் வீட்டில் கடும் எதிர்ப்பு.

ஆனால், கிருஷ்ணா உறுதியுடன் இருந்தான். நிச்சயம் அவளை மணப்பதாகச் சொன்னான். விரைவில் அவளின் பெற்றோரைச் சந்திப்பதாகக் கூறினான்.

அன்றைக்கு அவனைச் சந்தித்துவிட்டு வரும்போது தலையில் கத்தியால் அடிப்பது போல் வலியும் வயிற்றைப் புரட்டிக் கொண்டு வாந்தியும் வந்தன.

வீட்டிற்கு வந்ததும் அம்மாவுக்குத் தெரியாமல் வாந்தி யெடுத்துவிட்டு முகம் கழுவிக்கொண்டு வந்தாள்.

''என்னம்மா.. தலையை வலிக்கிறதா?'' தாய் கேட்டாள்.

''எனக்குத் தலைவலின்னு உனக்கு எப்படித் தெரியும்?''

மகளின் கேள்வியில் சற்று திணறிப்போனாள், தாய்.

டாக்டர் சொன்னது தானே.. தலைவலி வரும். மண்டையைப் பிளப்பது போல இருக்கும்...

அதை நினைத்துக் கேட்டுவிட்டாள். பின், சமாளித்தவளாய், ''உன் முகம் வாடி இருக்கேம்மா... தலைவலியோன்னு கேட்டேன். கொஞ்ச நேரம் படு வினி..'' என்றாள்.



தாயைப் பார்க்கப் பாவமாய் இருந்தது. இந்த உலகத்தில் தாயன்புக்கு இணை ஏது? தாயின் அன்புக்கு விலை மதிப்பிட முடியாதுதான். அந்த நினைவில் மனம் விம்மியது.

அம்மாவின் ஆறுதலுக்காக அவள் போய் படுத்துக் கொண்டாள். சிறிது நேரத்தில் உறங்கியும் போனாள்.

அம்மா சொன்னது போல அவள் எழுந்தபோது அவளுள் புத்துணர்ச்சி ஏற்பட்டு இருந்தது.

வழக்கம் போல் மகிழ்ச்சியாய்த் தங்கையுடன் சண்டை போட்டாள். தம்பியைச் சீண்டி வம்புக்கு இழுத்தாள்.

அப்பாவிடம் சதுரங்கம் ஆடுவதற்கு அடம்பிடித்தாள்.

இருக்கின்ற கொஞ்ச நாட்களில் தானும் மகிழ்ச்சியாய் இருந்து, மற்றவர்களையும் மகிழ்ச்சிப்படுத்த வேண்டும் என்று நினைத்துச் செயல்பட்டாள். ஆனால், மற்றவர்கள் அப்படியில்லையே...

அம்மா, கண்களில் சோகத்தைச் சுமந்து கொண்டிருக்கிறாள்.

தம்பியும், தங்கையும், எதுவும் சொல்லாமல் புன்னகையுடன் ஒதுங்குகிறார்கள்.

அப்பா, அடிக்கடி விட்டத்தை அளந்துகொண்டு மோன நிலைக்குப் போய்விடுகிறார்.

'ச்சே... அம்மா, என்னைக் கோபிக்க மாட்டாளா?'

'தங்கை, மல்லுக்கு நிற்கமாட்டாளா?'

'தம்பி, வாய்க்கு வாய் பேசமாட்டானா?'

'எல்லாம் போகட்டும்... அப்பா வழக்கம் போல சதுரங்கத்தில் தன்னைத் தோற்கடிக்க மாட்டாரா?'

அன்றைக்கும் அப்படியே... வினிதாவிற்கு நன்றாகத் தெரிந்தது. தான் தோற்கும் நிலையில் இருக்கிறோம் என்று யானை... குதிரை என்று ஒவ்வொன்றாய் பறிகொடுத்து விட்டு வெறும் மந்திரியின் துணையுடன் ராஜாவைக் காப்பாற்ற முடியாமல் திணறிக் கொண்டிருக்கையில் வேண்டும் என்றே தன் ராஜாவை வெட்டுப் படும்படியாய் நிறுத்தி, அவளை வெற்றி பெற வைத்த போதுதான் அவளுக்கு எரிச்சல் வந்தது.

''என் ராஜா, மண்டையைப் போட்டாச்சும்மா.. வினி நீதான் வென்றாய்'' என்று போலி வெற்றியைக் கொண்டாடிய போதுதான், அவள் தன்னை மறந்து போனாள். தனது தீர்மானத்தை மறந்து போனாள்... அவளையும் அறியாமல் குரல் எழுப்பினாள்.

''அப்பா...'' என்று அவள் கத்தியது கண்டு திகைத்தார்.

''ஏன் எல்லோரும் இப்படி செய்கிறீங்க? எப்போதும் போல இருக்கக்கூடாதா? என்னால் தாங்க முடியலை.. எதுவும் இயல்பாகவே இல்லை. ஏன்.. ஏன்... இப்படி...? இன்னும் கொஞ்சம் காலம்தான் நான் இருக்கப்போகிறேன் என்றா..?''

அம்மாவும் அப்பாவும் விக்கித்து நின்றனர்.

சந்தியா, அதிர்ந்து போனாள்.

கோகுல், தமக்கையை வெறித்தான்.

''நீ.. உனக்கு...'' வினியின் தந்தை, பேச்சு வராமல் தவித்தார்.



''தெரியும்ப்பா.. எல்லாமே எனக்குத் தெரியும். டாக்டர் என்னை வெளியே அனுப்பியவுடன் ஆர்வத்தோட ஒட்டு கேட்டதுதான்.... அம்மா என் முன்னாடியே அழுவாள்.. அதை என்னால் தாங்கிக்கொள்ள முடியாது என்றுதான் காட்டிக்கொள்ளாமல் இருந்தேன். அப்பா.. தயவுசெஞ்சு எல்லோரும் எப்போதும் போல இருங்களேன். என்னைப் பொய்யாக வெற்றிபெற வைத்துவிடாதீர்கள்.

சந்தியா, எப்போதும் போல சண்டை போடணும். கோகுல் என்னை வம்புக்கு இழுக்கணும். அம்மா, என்னை 'ஏண்டி தடிமாடு... புத்தியிருக்கான்னு' திட்டணும். இதெல்லாம் இல்லாம நீங்க காட்டுகிற பரிதாபம்.. பச்சாதாபம் எல்லாம் எனக்கு மூச்சுமுட்டும்படி செய்கின்றன'' என்ற மகளை அப்பா நடராஜன் அன்பாய் இழுத்து அணைத்துக் கொண்டார். கண்கலங்கினார்.

கௌசல்யா, விம்மலுடன் சமையலறைக்குள் புகுந்து கொண்டாள்.

''அக்கா..'' என்று வினியின் கைப்பற்றி சந்தியா அழ, கோகுலும் அழுதான்.

அப்பாவின் அணைப்பில் இருந்து தன்னை விடுவித்துக் கொண்டாள், வினிதா.

''வேண்டாம்... யாரும் அழக்கூடாது. நான் இருக்கும் கொஞ்ச நாட்களை மகிழ்ச்சியாய்க் கழிக்கணும். அப்பா.. எல்லோருமாய் எங்கேயாவது போய் வருவோமா?'' கேட்டாள்.

''எங்கேம்மா போகலாம்? நீயே சொல்லு'' கண்களைத் துடைத்துக்கொண்டு கேட்டார்.

''எங்கேயாவது... ஜாலியாய் இருக்கணும்.. நாம் எல்லோரும் சேர்ந்து இருக்கணும்... அம்மாவைக் கூப்பிட்டு வர்றேன்.'' என்று ஓடினாள், வினி.

கௌசல்யா, சேலைத் தலைப்பினுள் முகம் புதைத்து நின்றிருந்தாள். உடல் அதிர்விலிருந்து அவள் விம்மி அழுகிறாள் என்பதை உணர முடிந்தது.

''அம்மா..'' என்று தொட்டாள்.

''வினி.. என் கண்ணே.. என்னால் தாங்க முடியலையே.. வயிற்றைப் பிசைகிறதே வேதனை'' என்று மகளைக் கட்டிக்கொண்டாள்.

தாயை இழுத்து மார்புடன் இறுக அணைத்துக்கொண்டு முதுகைத் தடவி கொடுத்தாள், மகள்.

தாய், மகளாய் மாறிக் கலங்கி அழ... மகளோ, தாயாய் மாறித் தேற்றினாள்.

''அம்மா.. நீ அழுவதை நிறுத்து. நீ அழுதால் நானும் அழுவேன்.. இனி மனதைத் திடப்படுத்திக்கொள்ளணும்.. நான் மகிழ்ச்சியா இருக்கணும்னா உன்னிடம் கண்ணீர் வரவே கூடாது..''

கௌசல்யா, கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

''வாம்மா... நாம் எங்கு போகலாம் என்று எல்லோருமா பேசி முடிவு பண்ணலாம்'' தாயின் கையைப் பிடித்து அழைத்து வந்தாள்.

''எங்கே போகலாம்?''

''ஊட்டி?''

''வேணாம்... தேக்கடி?''



''அம்மா என்ன சொல்றாங்கன்னு கேட்போம்.''

''என்னைக் கேட்டால் பழனி, மருதமலை என்பேன்.''

ஒருவழியாய் மாமல்லபுரம் என்று முடிவானது.

அந்த நேரத்தில் வாசலில் கார் வந்து நின்றது. அதிலிருந்து இறங்கியவர்கள் கிருஷ்ணாவின் பெற்றோர்கள்!

வினிதாவின் முகத்தில் வியப்பு படர்ந்தது.



## 4

கிருஷ்ணாவின் பெற்றோர்களை ஒரேயொருமுறைதான் சந்தித்திருக்கிறாள், வினி.

கிருஷ்ணாவின் தங்கை ரோகிணியின் பிறந்த நாளுக்குச் சென்றிருந்த போது பார்த்ததுதான்.

ஆனால், அவர்களின் இந்த திடீர் வருகை எதிர்பார்க்காததுதான். கிருஷ்ணாவும் எதுவும் சொல்லவில்லை.. அவனிடம் 'இந்தத் திருமணம் நடப்பது சாத்தியம் இல்லை' என்று கூறியுமா?

அவர்கள் யார் என்று அறிந்ததும் நடராஜனுக்கும் கௌசல்யாவுக்கும் திகைப்பு.

அவர்களை வரவேற்க முன்னால் சென்றாள், வினிதா.

'கிருஷ்ணாவின் பெற்றோரோ..? ஏன்? எதற்காக? ஒரு வேளை வினிதாவைப் பெண் கேட்டு வந்திருக்கிறார்களோ? அவர்களுக்கு 'அந்த' உண்மை தெரியுமா?

'ஏன் தெரியாது? வினிதா, கிருஷ்ணாவிடம் நிச்சயம் சொல்லி இருப்பாள்.'

'அது தெரிந்துமா? அப்படியென்றால்..?'

நம்பிக்கைத் துளிர்விட இருவரும் மும்முரமாய் அவர்களை உபசரிக்கத் தொடங்கினர்.

வந்தவர்கள், சுற்றிவளைக்காமல் நேரடியாய் விசயத்திற்கு வந்தனர்.

'புஸ்' என்று பொங்கி எழுந்த பாலில் துளி நீர்பட்டதும் அடங்கி விடுவது போல இருவரின் ஆசையும் அப்படியே அடங்கி ஒடுங்கிப்போனது.

''எங்களுக்கு இருப்பது ஒரே பிள்ளை. அவனுக்குக் கல்யாணம் பண்ணி வைத்துப் பேரன் பேத்திகளைப் பார்க்க வேண்டும் என்ற ஆசை எங்களுக்கு இருக்காதா? வினிதாவைக் காதலிப்பது தெரிந்து அதற்கு ஒப்புக் கொண்டது உண்மைதான். ஆனால், அவளுக்கு மூளையில் கட்டி என்றும் கொஞ்ச நாள்தான் உயிருடன் இருப்பாள் என்றும்.. இதைச் சொல்வதற்கு கஷ்டமாகத்தான் இருக்கு. இருந்தாலும் இது வாழ்க்கைப் பிரச்சினைப் பாருங்க. அதனால்தான் இப்படி வெளிப்படையாய்ப் பேச வேண்டியது இருக்கு.''

''.....''

''தயவுசெய்து தப்பாக எடுத்துக்க வேண்டாம். என் மகன் இப்பவும் உங்கள் பெண்ணைத்தான் மணப்பேன் என்கிறான். எங்களுக்கு இதில் துளியும் விருப்பமில்லை. திருமணமானவுடனே வாழ்க்கை கருகிட வேண்டுமா என்ன? அப்புறம் இரண்டாம் தாரம்னு யார் வருவா? எங்க



மகனோட வாழ்க்கை நன்றாக இருக்கவேணும்.. அது வினிதாவின் கையில்தான் இருக்கு..''

''என்னிடமா...? நான்தான் உங்கள் மகனிடம் ஏற்கனவே சொல்லிட்டேனே... அவரை மணக்கச் சம்மதம் இல்லைன்னு. பிறகு ஏன் நீங்கள்... கிருஷ்ணா அதை உங்களிடம் சொல்லவில்லையா?''

''உன் முடிவைச் சொல்லிட்டே. அவன் எண்ணத்தை மாத்திக்கலையே,... கொஞ்ச நாள் வாழ்ந்தாலும் உன்னோடுதான் வாழ்வானாம். பேத்துகிறான் மடையன். அந்தப் பேத்தலைத் தாங்காதுதான் இங்கு நாங்கள் வந்தது. நீதான் அவனுக்கு எடுத்துச் சொல்லணும்.''

பொறுமையாய்க் கேட்டாள், வினிதா. பிறகு அவர்களிடம் ''நீங்கள் கவலைப்படாமே போங்க. கிருஷ்ணாவிடம் ஏற்கனவே சொன்னது போல் மறுபடியும் உறுதியாய்ச் சொல்றேன். 'வேறு நல்ல பெண்ணாய்ப் பார்த்து திருமணம் செய்து கொள்ளுங்கள்' என்று சொல்லிவிடுகிறேன். போதுமா?'' என்றாள்.

கிருஷ்ணாவின் பெற்றோர், மனம் குளிர்ந்துபோனார்கள்.

'அவள், நல்ல பெண். குடும்பத்திற்கு ஏற்ற பெண். கடவுளுக்குத்தான் கருணை இல்லை. அவளை மருமகளாய் அடைய நமக்குத்தான் கொடுப்பினை இல்லை' நினைத்தார்கள். புகழ்ந்து விட்டுச் சென்றனர்.

வினிதா சிரித்துக் கொண்டாள்.

அவளின் பெற்றோர்கள் ஏதும் பேசாமல் நின்றிருந்தார்கள்.

'கிருஷ்ணா, தங்கள் மகளை மணந்து மகிழ்ச்சியாக வைத்துக் கொள்வான்' என்று அவர்களுக்குள் எழுந்த நப்பாசை, ஒரு நொடியில் கிள்ளியெறியப்பட்டுவிட்டது.

வினிதா, உண்மையில் வேதனை அடைந்தாளா? இல்லை இவ்வளவுதான் உலகம் என்று ஏற்றுக்கொண்டாளா தெரியவில்லை,.

''அப்பா... இப்போது மாமல்லபுரம் போறதைப் பற்றிப் பேசுவோமா? என்றைக்கு போகலாம்? எத்தனை நாட்கள் தங்கலாம்?''

பேச்சை மாற்றியது கண்டு, 'தயவுசெய்து.. அந்த விஷயம் வேண்டாமே' என்ற அவளது எண்ணம் தெரிந்தது.

அன்று முழுக்க மாமல்லபுரம் போவது பற்றிய பேச்சுத் தான்... இரவில் தூங்குவதற்கு வெகு நாழியாகியது.



## 5

பூலோக மகேந்திரபுரியாய் காட்சியளித்தது மாமல்ல புரம். ஓயாத கடல் அலைகளின் ஓசை... வந்தவர்களை ஆரவாரத்துடன் வரவேற்பது போல் இருந்தது!

நடராஜன், தனிக் குடில் ஒன்றை வாடகைக்கு எடுத் திருந்தார். இதெல்லாம் கைமீறிய விஷயம்தான். இருந்தும் மகளின் மகிழ்ச்சிதான் இப்போது மிக முக்கியம் என்று நினைத்துக் கவலையின்றிப் பணத்தைத் தண்ணீராய்ச் செலவு செய்தார்.



மனைவியிடமும் அதையே சொன்னார். ''பணம் இன்னிக்குப் போகும்; நாளைக்கு வரும், கௌசல்யா. நம்ம மகளோட மகிழ்ச்சிதான் நமக்கு இப்ப வேணும்.''

உண்மைதான்.

வினிதா, குழந்தையாகவே மாறிப்போனாள். குதூகலம் கொப்பளிக்க, அவள் குதித்துத் திரிவதைக் கண்டபோது ஒருபுறம் ஆனந்தம் என்றாலும், இவள் இன்னும் கொஞ்ச காலம்தான் இப்படி மகிழ்ச்சியாய்ச் சுற்றி வருவாள் என்ற நினைப்பு, முள்ளாகி நெஞ்சைக் கிழித்தது.

கௌசல்யா, மகளின் மீதே கண்ணாக இருந்தாள். அவள் மீது அதிக செல்லம்... அளவுக்கு மீறிய பாசம்.. தவமிருந்து பெற்று, சீராட்டி வளர்த்து ஆளாக்கிப் பின் காலனுக்குப் பலி கொடுக்க எந்தத் தாய்க்கு மனம் வரும்?

'மொட்டு மலர்ந்து மணம் வீசும் நேரத்தில் முரட்டுத் தனமாய் கசக்கி எறிய நினைக்கிறானே காலன்..'

'என் மகள்.. இவளை இழந்து நான் எப்படி இருக்கப் போகிறேன்..'

'தெய்வமே! என்னால் தாங்க முடியவில்லையே.. என்னை எடுத்துக்கொள்ளேன். இவளை வாழ விடேன்... என் ஆயுசை இவளுக்குக் கொடுத்துவிடேன்..'

சூடாய் கன்னத்தில் கண்ணீர் பரவும்போதுதான் அழுகி றோம் என்று உணர்ந்தாள். அவசர அவசரமாய்க் கண்களைத் துடைத்துக்கொண்டாள்.

தோளில் இதமாய்க் கணவனின் கரம் அழுத்த.. இனியும் அடக்க முடியாது என்று எண்ணியவளாய் கணவன் மேல் சாய்ந்து குலுங்கினாள்.

''அய்யோ.. என்னால் முடியலையே.. என் கண்ணைப் பறிகொடுத்துட்டு எப்படி இருப்பேன்?''

''உஷ்.. அதோ பார்.. அவளே எவ்வளவு மகிழ்ச்சியாய்ச் சுற்றிவருகிறாள். நீ அழுதால் அவள் வேதனைப்படுவா.. கண்ணீரைத் துடை'' என்றார், நடராஜன்.

அவருக்கு மட்டும் வேதனை இல்லையா? சுமையாய் வேதனை நெஞ்சை அழுத்திக்கொண்டிருந்தாலும் அதை வெளிக்காட்ட மறுத்தார்.

அவரது பேச்சிற்குக் கட்டுப்பட்டுக் கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள்.

இதயத்தின் அழுகையை அவளால் நிறுத்த முடியவில்லை.

மூன்று நாட்களும் பஞ்சாய்ப் பறந்துபோக, திரும்ப மனம் இல்லாமல் திரும்ப வேண்டியிருந்தது.

இந்தப் பயணம் எல்லோர் மனதிற்கும் இதமாய் இருந்தது. தவிர, நடராஜ் - கௌசல்யாவிற்கு அனுபவப் பாடத்தையும் கற்றுத் தந்தது என்பது உண்மை. இவர்கள் தங்கியிருந்த குடிலுக்கு அடுத்ததில் இருந்தவர்கள். திருச்சிவாசிகள். ஒரே குழந்தை. ஏழு வயதில் இருக்கும்போது மாமல்லபுரத்தைப் பார்க்க ஆசைப்பட்டானாம். திடீரென்று இறந்துவிட்டானாம். அவனை நினைத்து அழுது தீர்த்தார்களாம். ஒவ்வொரு ஆண்டும் அவனது பிறந்த நாளை இங்கு வந்து கொண்டாடுகிறார்களாம். ஏழு ஆண்டு பார்த்து, மகிழ்ந்து வளர்த்த குழந்தை! அதுவும் ஒரே மகன். அப்பப்பா... துக்கம் எப்படி இருக்கும்?



புகைப்படத்தில் பூவாய்ச் சிரித்த குழந்தையைக் கண்டபோது, கௌசல்யாவின் தாயுள்ளம் துடித்துப் போனது.

'இறப்பே இல்லாத வீட்டிலிருந்து கடுகு கொண்டு வா. உன் இறந்த குழந்தையைப் பிழைக்க வைக்கிறேன்'' என்றாராம், புத்தர்.

'அட முட்டாளே.. உலகில் உனக்கு மட்டும் துக்கமும் வேதனையும் இல்லை.. உன்னைப் போல ஏராளமானோர் இருக்கின்றார்கள் என்று காட்டத்தானோ இறைவன் இங்கே அனுப்பி வைத்தான்.. இதுவும் அவனது லீலையோ..'

'எங்கோ இருக்கும் நாங்கள், திருச்சியில் வசிக்கும் இவர்களைச் சந்திக்க வேண்டும் என்றால்...?' அப்படித்தான் இருக்கும்.

'நானாவது என் குழந்தையை இருபது வயதுவரை பார்த்து மகிழ்ந்துவிட்டேன். பாவம், அவர்கள் மகன், பூக்கும் முன்னே கருகிவிட்டது மொட்டு!'

அதை எண்ணி மனதைக் கொஞ்சம் தேற்றிக்கொள்ள முடிந்தது.

ஊருக்குத் திரும்பும் போது மனதின் கனம், பாதியாய்க் குறைந்து போயிருந்தது.

கிருஷ்ணாவைப் பார்க்கக்கூடாது என்றுதான் இருந்தாள். அவன் தன்னை மறந்து போக வேண்டும். அதற்குப் பிரிவு மிக அவசியம் என்று சந்திப்பைத் தவிர்த்தாள்.

ஆனால், கிருஷ்ணா விடவில்லை. அவளைப் பார்க்க வந்தான்.

இந்தக் காலத்திலும் இப்படியொரு ஆண்பிள்ளையா? ஏதோ காரணம் காட்டி உதறித் தள்ளிவிட்டுப் போகும் ஆண்களுக்கு மத்தியில் திருமணத்திற்குத் தடையாய் ஒரு காரணம் இருந்தும் அதைத் துரும்பாய் ஒதுக்கி விட்டு அவளை மணக்கத் துடிக்கிறானே இவன்! கட்டிய மனைவி நோயாளியாகிவிட்டால் அவளை ஒதுக்கிவிட்டு வேறொருத்தியைத் தேடும் ஆண்களும் உண்டு. தாலிக்கட்டாமலே.. சாகப்போகும் எனக்காகத் துடித்து, மனைவியாய் ஏற்க விரும்பும் இவன், அதிசயப் பிறவிதான்.

ஆனால், இது நடக்காது. திட்டவட்டமாய் - ஆணித் தரமாய் அவனிடம் சொன்னாள்.

''என் வாழ்க்கையில் திருமணம் என்பது நடக்கமுடியாத ஒன்று கிருஷ்ணா... தயவுசெய்து மறந்துடுங்க.''

கிருஷ்ணா வாடிய மனதுடன் சென்றான்.


'பாவம்... உண்மைக் காதலன்.. இவனைக் கணவனாய் அடையும் பாக்கியம் எனக்கில்லை..

ஏன் யாரையும் மணக்க முடியாது.. இந்தப் பிறவியில் மணவாழ்க்கை என்பது இல்லை' பெருமூச்சுவிட்டாள்.

ஆனால் இன்னும் ஒரு மாதத்தில் தனக்குத் திரு மணம் நடக்கும் என்று அவள் கனவிலும் நினைத்திருக்க மாட்டாள்.

ஆமாம், அவளுக்குத் திருமணம் நடந்தது! அவளும் மாலையை வாங்கி மனைவியாகிக் கொண்டாள்!





# 6

தன் கழுத்தில் தொங்கிய தாலியைத் தொட்டுப் பார்த்தாள், வினிதா.

அவளால் நம்பவே முடியவில்லை!

தனக்குத் திருமணமா?

தன் வாழ்க்கையில் எது சாத்தியம் இல்லை என்று நினைத்தாளோ அது நடந்துவிட்டதே!

கணவனாக கிருஷ்ணா இல்லை என்ற வருத்தம் அவளுக்குத் துளியும் வரவில்லை.

கிருஷ்ணாவின் வாழ்வு, ஒளிமயமாய் இருக்க வேண்டும் என்றுதான் ஒதுங்கிவிட்டாள்.

அத்தனை நாள் பழகிவிட்டு அவனைப் பிரிவது என்பது மனதுக்கு கஷ்டம்தான். கொஞ்ச நாட்களில் எல்லாம் மறைந்து போகும்.

வாழும் பயிர்கள் வாழவேண்டும்.

உதிரும் இலைகள் உதிர வேண்டும்.

அது, இயற்கையின் நியதி.

பழுத்த இலைகள்தான் காற்றில் உதிர வேண்டும் என்ற கணக்கு இல்லையே...

காய்கள்... பிஞ்சுகள்.. மொட்டுகள்... இளம் தளிர்கள்... எல்லாமே...

அது இறைவனின் தீர்ப்பு.

அவளும் உதிரப்போகும் இளந்தளிர். கருகப்போகும் மலர்... மண்ணில் புதையப்போகும் அழகுப் பிஞ்சு...

'இதென்ன.. மனிதனுக்குச் சாவு என்று ஒன்று நெருங்கினால் தத்துவம் எல்லாம் வந்துவிடுமா? இதுநாள் வரை இல்லாத தத்துவங்கள் எங்கிருந்து உதிக்கின்றன?

அதனால்தானோ சினிமாவில் சோகம் என்றாலே தத்துவமாய்ப் பாடுகிறார்கள்.

அவளுக்குச் சிரிப்பு வந்தது. அதைவிட சிரிப்பு வந்த விசயம், சாகப் போகிறவளுக்குத் திருமணம்!

இந்தத் திருமணத்தில் உண்மையாக மகிழ்ச்சி அடைந்தவர்கள், அவளுடைய பெற்றோர்கள்தான்.

'என் குழந்தையோட கல்யாணக் கோலத்தைக் கண்குளிர பார்த்தாயிற்று. சுமங்கலியாய் மஞ்சள் குங்குமத்துடன் போகும் பாக்கியத்தை அந்தத் தெய்வம் இவளுக்குக் கொடுத்திருக்கிறது... கடவுள் கருணையுள்ளவர்தான்.'

இருவர் மனதிலும் மகிழ்ச்சி கொப்பளித்தது. மாப்பிள்ளை ஸ்ரீதரை தெய்வம்தான் அனுப்பி வைத்திருக்கிறது என்று நினைத்தனர். அந்தத் தெய்வத்தை வாழ்த்தாமல் இருக்க முடியவில்லை. மனம் குளிர வாழ்த்தினார்கள்.

ஸ்ரீதர், தெய்வத்தைப் பழித்தான். தன் விதியை இகழ்ந்தான்.

ஆமாம்... ஸ்ரீதரும் மற்ற இளைஞர்களைப் போல கல்யாணக் கனவுகளைச் சுமந்து திரிந்தவன்தான்.



'தனக்கு வரும் மனைவி, இப்படி இருக்க வேண்டும்' என்று ஆயிரமாயிரம் கற்பனைகளில் மிதந்தவன்தான். அதற்கு ஏற்றபடி சுமா வந்தாள்.

அலுவலகத்தில் அவள் டைப்பிஸ்ட். அடிக்கடி அவளை அழைத்துக் கடிதங்களை 'டைப்' பண்ணித் தரச்சொல்ல வேண்டும்.

முதலில் அதிகாரமாய்ப் பேசியவன், அவளது 'மயில்' அழகில்.... குயில்' பேச்சில் ஈர்க்கப்பட்டு மனம் தடுமாறிப் போனான்.

அவளது வேலைத் திறமையில் மெல்ல மெல்ல கரைந்து குழைந்து போனான். அது காதலாய் மலர்ந்தது.

அவன், பதவி உயர்வு பெற்று வேறு ஊருக்குச் சென்ற பின்பும், காதல் - நாளொரு மேனியாய் வளர்ந்தது.

இரு வீட்டாரும் இந்தக் காதலுக்கு பச்சைக்கொடி காட்டிவிட்டனர்.

ஆனால், தடங்கல் இல்லாத வாழ்வு இல்லையே...

தடங்கல் வந்தது!

ஜாதக உருவத்தில் அது வந்து சேர்ந்தது!

ஸ்ரீதர் வீட்டில், ஜாதகம் பார்ப்பதில் அத்தனை நம்பிக்கை இல்லைதான்.

ஆனால் சுமாவின் தந்தை இந்த விசயத்தில் மட்டும் தீவிரம்... வீட்டை விட்டுப் படி இறங்கக்கூட பஞ்சாங்கம் பார்த்துவிட்டுத் தான் செய்வார்.

அவர், மகளின் ஜாதகத்துடன் ஸ்ரீதரின் ஜாதகத்தையும் சேர்த்து, தனக்குத் தெரிந்த ஜோசியரிடம் கொடுத்தார்.

அவர் விரல் தேய்த்து ஏதோ கணக்குப் போட்டு சொன்னார். "பையனுக்கு தோஷம் இருக்கு. அதுவும் களத்தர தோஷம்!"

அந்த ஒரு வார்த்தை, காதலர்களின் வாழ்வில் ஒரு புயலையே உருவாக்கிவிடும் என்று அவருக்குத் தெரியவில்லை.

களத்தர தோஷம் என்பது என்ன சாதாரண விசயமா?

மிகப்பெரிய தோஷம் ஆயிற்றே! முதல் மனைவி உயிருடன் இருக்கமாட்டாள். இரண்டாவது மனைவிதான் வாழ்க்கையில் அமைய முடியும்.

இதைக் கேட்ட பின்பு எந்தப் பெற்றோராவது தன் பெண்ணை கொடுக்க முன் வருவார்களா?

'சுழி'யென்று தெரிந்தும் யார் குதிப்பார்கள்?

சுமாவின் பெற்றோர்கள், 'இந்த திருமணம் வேண்டாம்' என்று சொல்லிவிட்டார்கள்.

சுமா அழுதாள். அவளால் ஸ்ரீதரை மறக்க முடியாது. அதே நேரம், ஸ்ரீதரின் ஜாதக தோஷம் அவளை அழித்துவிடும் என்று பெற்றோர் பயமுறுத்தி வைத்தார்கள். அதில் அவள் அரண்டு போனாள்.

ஸ்ரீதரும் தன் காதல் வெறும் கனவு என்று உடைந்து போய்விட்டான்.

வேறு பெண்ணை, மனைவியாய் நினைத்துப் பார்க்கவே பிடிக்கவில்லை. தன் மனதில் சுமாவுக்கு மட்டுமே இடம் உண்டு என்று உறுதியாய் நினைத்தான்.

'ச்சே.. யார் கண்டுபிடித்தார்கள் இந்த ஜாதக விசயத்தை?'



ஜாதகம், ஜோசியம் எல்லாம் பொய் என்று சொல்பவர்களும் கூட, 'ஆயுள் கெட்டியா?' என்று ஜாதகத்தை எடுத்துக் கொண்டு ஓடுகிறார்களே!

'இதெல்லாம் வெறும் புரட்டு என்று துணிந்து பேசுபவர் எத்தனை பேர்?'

மனதினுள் மறுகி மாய்ந்து போனான், அவன்.

இந்நிலையில்தான் நடராஜன், ஸ்ரீதரின் தந்தை ராஜகோபாலனை எதேச்சையாய்ச் சந்தித்தார்.

இருவரும் பழைய நண்பர்கள். சொந்த வீடு கட்டிக் கொண்டு வேறு வேறு திக்கில் சென்றுவிட்டனர். சந்திப்பும் அரிதாய்ப் போனது.

குடும்ப நலத்தை விசாரித்தபோது தன் மகளின் விசயத்தைச் சொன்னார். அப்போது நண்பனின் கண்கள் கலங்குவதைக் கண்டார், ராஜகோபாலன்.

"மனசைத் திடப்படுத்திக்கோடா. என்ன செய்வது? தெய்வசித்தம்.. சின்ன குழந்தையில் பார்த்தது... பாவம்.. அவளுக்கா இப்படி? உனக்கு இந்தத் துக்கம். எனக்கு இன்னொரு மாதிரி. என் பையன் ஆசைப்பட்டான்னு அதே பெண்ணைப் பேசி முடித்தோம். ஏதோ களத்தர தோஷமாம். அதனால் பெண் தரமாட்டேன்னு சொல்லிட்டாங்க" அலுத்துப்போய் பேசினார், அவர்.

"அது சரிதான்டா.. என் பொண்ணுக்குக் கல்யாணம் நடத்தி வைக்க முடியவில்லைன்னு எங்க வேதனை. உன் பையனுக்கு.."

பேச்சில் இடைமறித்தார், ராஜகோபாலன்.

"இரு.. இரு... நடராஜா.. ஏன் இப்படி செய்யக்கூடாது?"

"எப்படி?"


"உன் பெண்ணுக்குத் திருமணம் இல்லாமல் போகிறாளே என்று உங்க தவிப்பும் தீர்ந்தமாதிரி இருக்கும். என் மகனோட அந்த மண்ணாங்கட்டி தோஷமும் தீர்ந்தமாதிரி ஆகும். இதில் ஏதோ சுயநலமா பேசுறேன்னு நீ..."

"இல்லை கோபால்.. நீ சொல்வது ரொம்ப சரிதான். இந்த விசயமாய் நானும் வீட்டில் பேசிப் பார்க்கிறேன்."

இருவரும் வீடு சென்றனர்.

ஆனால், வினிதா உடனே சம்மதிக்கவில்லை. ஸ்ரீதரைச் சந்திக்க வேண்டும் என்றாள்.

அப்படியே சந்திக்கவும் செய்தாள்.



## 7

ஸ்ரீதருக்கு இந்த ஏற்பாடு, சுத்தமாய்ப் பிடிக்கவில்லை. சுமா இல்லாத வாழ்வு, நரகமாய்த் தெரிந்தது.

'யார் அந்த வினிதா? யாரோ அறிமுகம் இல்லாதவள், எனக்கு மனைவியா?'

'அல்பாயுசுக்காரியாம்.. அவளை மணப்பதால் என் தோஷம் தீர்ந்துவிடுமாம்.. என்ன பேத்தலோ..'

சுமாவைப் பார்த்துப் பேசினான்.



"இப்பவும் நீ உறுதியாய் நின்றால் நம் திருமணம் நிச்சயம் நடக்கும் சுமா. இல்லாவிட்டால் யாரோ ஒரு வினிதாவைக் கட்டிக்கொள்ள வேண்டியது வரும்... நல்லா யோசிச்சுப் பார் சுமா" என்றான்.

"இல்லை ஸ்ரீதர்.. ஜாதக விசயத்தில் எனக்கு நிறைய நம்பிக்கை இருக்கு. உங்களுக்குத் தெரியாது. எங்க அப்பாவோட ஒன்றுவிட்ட தங்கையின் ஜாதகத்தில் கொஞ்ச காலம்தான் கணவனோட வாழ்க்கை நடத்துவார்னு இருந்ததாம்.. அதெல்லாம் சும்மா என்று நினைத்தார்களாம்.. திருமணமாகி இரண்டு ஆண்டுதான் ஆயிற்று. விபத்தில் இறந்துவிட்டார் என்று அப்பா சொல்லி இருக்கிறார். அன்றையிலிருந்துதான் எங்கள் வீட்டில் ஜாதகத்தில் நம்பிக்கையே வந்தது. நானும் இந்த விசயத்தில் விஷப் பரிட்சை செய்ய விரும்பவில்லை ஸ்ரீதர்! போவது என் உயிர்தான். எப்படி இருந்தாலும் அந்தப் பெண், சாவது நிச்சயம். அவள் இறந்துபோனதும் உங்களது தோஷம் நிவர்த்தியாகும். அப்பா, அப்போது ஏதும் தடை சொல்லாமல் சம்மதிப்பார். அதுவரையில் நாம் எப்போதும் போல் தினமும் சந்திக்கலாம். அதற்கு அந்தப் பெண்ணும் சரியென்பாள். பெயருக்குத்தானே இந்தக் கல்யாணம்."

சுமா சொல்வதும் சரியாகப் பட்டது. ஒப்புக்கொண்டான்.

வினிதாவை அவன் சந்தித்த போது தன் நிபந்தனையைக் கூறினான்.

"வினிதா! இந்தத் திருமணத்தில் எனக்கு விருப்பமில்லை. எனக்கு இந்த ஜாதகம்.. தோஷம்.. இதிலெல்லாம் நம்பிக்கை இல்லை. நான் காதலிப்பது சுமாவை, அவளைத்தான் மணக்க இருந்தேன். தோஷம் அது இது

என்று குழப்பிவிட்டதால் இந்தத் திருமண ஏற்பாடு. வேறு வழியில்லையே என்றுதான் ஒப்புக்கொண்டேன். அதற்காக உன் மீது அன்போ, காதலோ காட்டுவேன் என்று எதிர்பார்க்காதே. இன்னொன்றையும் சொல்லிவிடுகிறேன். நானும் என் காதலியும் தினமும் சந்தித்துப் பேசுவோம். மனைவி என்ற உரிமையை எடுத்துக்கொண்டு அதைத் தடுத்து நிறுத்த நீ முயற்சிக்கக் கூடாது.''

புன்னகைத்தாள் அவள்.

''மனைவி என்ற உரிமையா.. நானா.. அதை எத்தனை நாளுக்கு என்னால் காட்ட முடியும்? ஸ்ரீதர்.. உங்களைச் சந்திக்க வந்தது உங்களுடைய விருப்பத்தை அறியத்தான். நீங்கள் விருப்பப்பட்டு சம்மதித்தீர்களா? இல்லை கட்டாயத்திற்கு ஒப்புக்கொண்டீர்களா என்று தெரிந்து கொள்ள விரும்பினேன். கட்டாயக் கல்யாணம் தேவையில்லை. ஆனால், என் எண்ணம் இதுதான். இறப்பதற்கு முன் ஏதாவது நல்ல காரியம் செய்து விட்டுப் போக வேண்டும். என்னை மணப்பதால் உங்களுக்கு நல்லது ஆகும் என்றால், அதற்கு நான் ஒப்புக்கொள்கிறேன். எப்படியும் இறக்கப்போவது நிச்சயம்... தோஷ நிவர்த்தியாய் இருக்கட்டுமே. என் மரணம் இன்னொருத்தரின் வாழ்க்கைக்குப் பயன்பட்டால் அதைவிடப் புண்ணியம் வேறு எதுவுமில்லை. நீங்களும் சுமாவும் சேர்ந்து வாழ வேண்டும். அதற்குப் பாலமாக நான் இருப்பேன். என்னை நீங்க நம்பலாம்.''

அவளுடைய ஒவ்வொரு வார்த்தையும் அவனை ஊசியாய்க் குத்தியது.

'என் காதல்.. என் வாழ்வு... என் மகிழ்ச்சி.. இதைத் தவிர வேறு எதுவும் நினைத்துப் பார்க்காமல் பேசினேனே....



இவள் இறக்கப்போகும் வேளையிலும் யாரோ இருவரின் நல்வாழ்விற்கு உதவியாய் இருக்க நினைக்கிறாள்!'

அவன் மனதில், அவள் உயர்ந்து நின்றாள்.

''ஆனால், ஒரு விசயம் ஸ்ரீதர்..நாம் ரெண்டு பேரும் மனம் விலகி இருப்பதை என் அப்பா - அம்மா தெரிந்து கொள்ள வேண்டாம். அவர்கள் முன் அன்புடன் நடந்து கொள்ள வேண்டும்'' வேண்டுகோளாய்க் கேட்டுக்கொண்டாள்.

தான் போட்ட நிபந்தனை முன் இது என்ன? சுண்டைக்காய்தான்.... சம்மதித்தான்.

திருமணமும் மிக எளிமையாய் நடந்து முடிந்தது.



## 8

தன் மகளுக்கும் திருமணமாகிவிட்டது என்ற நினைப்பில் இரண்டு சுற்று பருத்துப் போனார்கள் கௌசல்யாவும், நடராஜனும்.

நல்ல இடமாய் அமைந்ததில் இரட்டிப்பு மகிழ்ச்சி. அன்பான மாமனார், மாமியார், அருமையான கணவன்.

இன்னும் வேறு என்ன வேண்டும்?

புகுந்த வீட்டிற்கு மகளை அனுப்பும் போது இருவரும் கலங்கிப் போனது உண்மை. பெண்ணைப் பெற்ற எல்லாப் பெற்றோர்களும் அப்படித்தானே..

ஆனால், வினிதா விசயத்தில் கொஞ்சம் கூடுதல்தான்.. நாட்களை எண்ணிக்கொண்டிருக்கும் மகளின் அருகில் இருக்க முடியாமல் போனதே.

ராஜகோபால்தான் தேற்றினார். "என்ன இது.. பைத்தியம் போல.. எங்கே அனுப்புறீங்க? என் வீட்டுக்குத்தானே. நீ எப்படியோ அதேமாதிரி நானும். அவளுக்கு இன்னொரு அப்பா. சுசிலாவைச் சொல்லவே வேண்டாம்.. உள்ளங் கையில் வைத்துப் பார்த்துக்கொள்வாள். அதிலும் வெளி யூரா? உள்ளூர்தானே. நினைத்தால் வந்துவிடலாம். அதுவும் உங்க வீடுன்னு நினைத்துக் கொள்ளுங்க."

அப்படியே நடராஜனும் கௌசல்யாவும் அடிக்கடி வந்து மகளைப் பார்த்தார்கள்.

ராஜகோபாலும், நடராஜனை நண்பனாக நினைத்து அரட்டை அடித்தாரே தவிர, சம்பந்தியாய் நினைத்தும் பார்க்கவில்லை.

அதேபோல வினிதா, தன் தாய் வீட்டுக்குப் போவதை யும் அவர்கள் யாரும் தடை செய்யவில்லை.

வினிதாவின் நிலைமையைப் புரிந்துக்கொண்டவர்கள். அதனால் அவளது விருப்பங்களை மதித்தனர். மென்மை யாய் நடத்தினார்கள்.

ஸ்ரீதரின் தாய் சுசிலா, வினிதாவை மகளாகவே பார்த்தாள்.

உண்மையைச் சொல்லப்போனால், சுசிலாவிற்குச் சுமாவை விட வினிதாவைத்தான் மிகவும் பிடித்திருந்தது.

சுசிலா, ஒரு பார்வையில் யாரையும் துல்லியமாய் எடை போடும் திறமையுடையவள். சுமாவோட அழகு, திறமை, நாகரிகம் எல்லாம் அமையப் பெற்றவள்தான்.



ஆனால், அவளுக்கு 'தான்' என்ற [illegible]வம். அதிக மாகவே இருந்ததைக் [illegible] என்று அவளுடைய சுயநலம். 'ஒரு பெண் இறந்த பின்பு உனக்கு மனைவி யாகிறேன்' என்று ஸ்ரீதரிடம் சொன்னாளே...

அவள், மருமகளாக வந்திருந்தால் நிச்சயம் தன் மகனை, தன்னருகே அண்ட விடமாட்டாள்.

வினிதா அப்படியில்லை. வெகுளி, குழந்தை மனம். சின்னச் சின்ன விசயத்திலும் திருப்தி அடையும் சுபாவம்.

ஸ்ரீதரின் சுற்றம் தனக்கும் சுற்றம் என்று பழகிய விதமும் பிடித்திருந்தது.

வினிதாவைத் தனக்கு மருமகளாய்க் கொண்டு வந்து சேர்த்ததற்காகக் கடவுளுக்கு நன்றி கூறினார்கள்.

அதேசமயம் தன் மகன் ஏதோ கடனுக்கு தாலிகட்டியது போல மனைவியுடன் சரியாகப் பேசிப் பழகாமல் இருந்தது உறுத்தலாய் இருந்தது.

கணவனின் பாராமுகம் எதிர்பார்த்ததுதான். வினிதா, அதைப் பொருட்படுத்தாமல் இருந்தாள்.

"சுமாவைச் சந்தித்தீர்களா.. நாம் பேசிக்கொண்டதைச் சொன்னீர்கள்தானே" என்று கேட்டாள்.

தினமும் சுமாவைச் சந்தித்துவிட்டுதான் வருகிறான் என்று தெரிந்தது.

'இருக்கட்டுமே. சுமாதானே நிரந்தரம்' என்று நினைத்துக் கொண்டாள்.

இங்கே மூவரும் நாட்களை எண்ணிக்கொண்டிருக் கிறோம்.

23
22
4
3
30



சுமா, ஸ்ரீதரை அடைய நாட்களை எண்ணுகிறாள்.

ஸ்ரீதரும் சுமாவை எண்ணி நாட்களை எண்ணுகிறான்.

நான்...? இறுதி நாளை நினைத்து நாட்களை எண்ணுகிறேன்.

அன்றைக்கு நீண்டநேரம் கழித்து வந்தான், அவன். வெளியே சாப்பிட்டு விட்டதாய்ச் சொன்னான். சுமாவுடன் என்று சொல்லாமலே தெரிந்தது. படுத்தவுடன் தூங்கிப் போனான்.

வினிதாவுக்கு அதில் வருத்தம்தான்... ஒப்பந்தப்படி கணவன் - மனைவி என்ற உறவு வேண்டாம்தான். அதற்காக உம்மண்ணா மூஞ்சியாய் இருக்க வேண்டாமே.. ஒப்பந்தத்தில் அது இல்லையே...

தானே வலியப்போய் பேசினாலும் ஒற்றைச் சொல்தான் பதிலாய் வருகிறது.

ஏன்... நல்ல நண்பர்களாய் இருக்க முடியாதா? ஏதோ அத்தையும் மாமாவும் பாசத்துடன் பழகுவதால் இங்கு பொழுது போகிறது. இல்லாவிட்டால், இங்கு வாழ்க்கையே நரகமாகிப் போயிருக்கும்.

கொஞ்ச நாட்களாய் எட்டிப் பார்க்காத தலைவலி, அன்றைக்கு வந்துவிட்டது. அழையாத விருந்தாளியைப் போல.

பற்களைக் கடித்துகொண்டு பொறுத்துக்கொள்ள முயன்றாள்.

தலையினுள் யாரோ கடப்பாரையால் இடிப்பது போல அத்தனை வலி. தாங்கமுடியாமல் விசும்பி அழுதாள்.



''அம்மா...'' அம்மாவின் துணை இப்போது தேவைப்பட்டது. அன்பு - அரவணைப்பு, அவளுக்கு வேண்டியிருந்தது.

''அம்மா..'' மீண்டும் முனகல்.

விழித்துப் பார்த்தான், ஸ்ரீதர்.

''என்ன வினிதா.. என்னாச்சு?''

''தலைவலி.. தாங்கமுடியலையே..''

அவனுக்கு பயம் வந்துவிட்டது.

''எப்பவும் வருமா? இல்லை.. இப்போதுதானா?''

''எப்போதாவது வரும். கொஞ்ச நாளாய் இல்லாமல் இருந்தது. யம்மா...'' தலையை அழுத்திப் பிடித்துக் கொண்டாள்.

''மாத்திரை போட்டியா?''

''ஆமா.''

'இப்போது என்ன செய்வது? தலையை அழுத்திவிட வேண்டுமா' புரியாமல் விழித்தான்.

''என்னைக் கொஞ்சம் கட்டிப் பிடிக்கிறீங்களா? வலி அதிகமாயிட்டா பயம் வந்துடும்... என் அம்மாதான் என்னைக் கட்டிப்பிடித்து தைரியம் சொல்லுவாங்க. உடனே பயமும் போயிடும்.''

குழந்தை போல அவள் கெஞ்சுவது கண்டும் மனம் நெகிழ்ந்து போனான்.


அவளைத் தன் மார்பின் மீது சாய்த்துக் கொண்டான். தன் கரத்தால் அவளை அணைத்துக்கொண்டான்.

அவள், தன் முகத்தை அவனது நெஞ்சின் மீது புதைத்துக் கொண்டாள்.

மீண்டும் வலியின் அலை.... ''அம்மா'' என முனகினாள்.

அரவணைப்பைக் கொஞ்சம் இறுக்கினான். அவனையும் அறியாமல் அவளது நெற்றியில் முத்தமிட்டான்.

மயக்கமா...? இல்லை கலக்கமா..? எது என்று தெரியாத நிலையில் அப்படியே உறங்கிப்போனாள், வினிதா.



9

சூரியனின் மஞ்சள் கரங்கள் ரகசியமாய் அறையினுள் நுழைந்து அவளை உசுப்பின.

வினிதா, கண்விழித்தாள்.

கணவனின் அரவணைப்பில் இன்னும் இருப்பதை உணர்ந்ததும் மனதினுள் படபடப்பு! பரபரப்பு!!

இரவில் நடந்தது மனத்திரையில் மறுபடியும் ஒளிபரப்பானது.

'ச்சே... என்ன நினைத்திருப்பான்? வலியென்று நாடகமாடி.. அடக் கடவுளே...'

அவன் கரங்களிலிருந்து தன்னை அவசரமாய் விடுவித்துக் கொண்டாள்.

அந்த அறைக்குள் இருக்கப் பிடிக்காமல் வெளிவந்தாள்.



அவசரமாய்க் குளித்துவிட்டு அத்தையிடம் வந்தாள். ''அத்தை.. நான் நான்கு நாள் அம்மா வீட்டில் இருந்துவிட்டு வர்றேனே'' என்றாள். அனுமதி கிடைத்தது.

'அவ என்ன ஆசைப்படுறாளோ அப்படியே செய்யட்டும். நீ எதுவும் மறுத்துச் சொல்லாதே' மனைவிக்கு ராஜகோபாலின் உத்தரவு இதுதான்.

திடீரென்று வினிதா வந்து நிற்பது கண்டு அனைவருக்கும் வியப்பு!

''இதென்ன வினிதா... சொல்லாமல் கொள்ளாமல் வந்து நிற்கிறே? ஒரு போன் பண்ணியிருக்கக் கூடாதா என்ன? கோகுலை அனுப்பி வைத்திருப்பேனே'' அப்பா சொன்னார்.

''இந்தப் பொடிசு எனக்குத் துணையாக்கும்?''

''சாண்பிள்ளையானாலும் நான் ஆண்பிள்ளை அக்கா.''

''மீசை வரட்டும்.. அப்புறம் ஒத்துக்கிறேன்.''

''அம்மா'' என்றவள், தாயாரைப் பார்த்தாள். ''எனக்குத் தலைவலி வந்தது. நீ கிட்ட இல்லையேன்னு ஏங்கிப் போனேன்.. அதான் உன்னைப் பார்க்க வந்துட்டேன்'' சொல்லும்போது, ஸ்ரீதரின் அணைப்பில் கிடந்த நினைவும் வந்து குறுக்கிட, வெட்கம் பிடுங்கித் தின்றது.

'ச்சே... என்ன நினைத்துக்கொண்டானோ.. அணைத்துக் கொள்ளும்படி சொன்னது நான்தான்... பெரியதாய் மனைவி என்ற உரிமையைக் காட்ட மாட்டேன் என்று சொன்னவள், தன் கையணைப்பிற்குத் தவித்து அழைக்கிறாளே என்று நினைத்துக் கொள்ள மாட்டானா?' உடம்பெல்லாம் கூசிப்போனது.

''என்ன குழந்தைம்மா... கட்டிக்கிட்டவன் பக்கத்தில் இருக்கிறப்போ அம்மா நினைப்பு வந்ததாக்கும் சமத்து தான்.''

அம்மாவின் கேலிக் குரலில் நடந்ததை ஒதுக்கி வைத்தாள்.

''அதுசரி.. அவ சாப்பிட்டாளான்னு கேளு. வளவளன்னு பேசிக்கிட்டு இருக்காதே'' நடராஜன் சொன்னார்.

அவர் எங்கோ புறப்படத் தயாராய் இருப்பதைப் பார்த்த வினிதா, ''என்னப்பா.. நான் வந்திருக்கேன்.. இப்போ வெளியே போகணுமா?'' என்று சிணுங்கினாள்.

அவளது தலையைத் தடவிக் கொடுத்தவர், ''இல்லைம்மா.. போகணும். நாளை லீவு சொல்லிட்டு வந்துடுறேன்.. என்ன? நாளைக்கு நாம் எல்லோரும் சினிமாவுக்குப் போகலாம். பிறகு ஓட்டலில் சாப்பாடு.. சரிதானே'' என்று சொல்லிவிட்டு நடந்தார்.

''என்னம்மா சாப்பிட்டே?'' கௌசல்யா, வாஞ்சையுடன் கேட்டாள்.

''இட்லிம்மா.''

''சரி.. உனக்குப் பிடித்ததாய் பண்றேன். என்ன வேணும்னு சொல்.''

''பிஞ்சுக் கத்தரிக்காய் பொரியல்... பாகற்காய் காரக் குழம்பு... எலுமிச்சை ரசம்.. மீதி நாளைக்கு.''

''நொடியில் பண்ணித் தர்றேன் என் கண்ணம்மா.''

தாய், அடுக்களையுள் நுழைந்தாள். அவளைத் தொடர்ந்து சென்றாள், வினிதா.



''அம்மா.. உன் சாப்பாட்டைச் சாப்பிட்டு ரொம்ப நாளானது போல இருக்கு. அத்தையும் நல்லா சமைக்கிறாங்கதான். இருந்தும் நீ செய்றதே தனிதான்.''

''ஐஸ் வச்சது போதும்'' என்று கௌசல்யா சொன்னாலும், முகம் பெருமையில் மலர்ந்து போனது.

''உண்மைதான் சொல்றேம்மா.''

''என்ன டீ வினி, கல்யாணம் ஆகியும் நீ மாறவே இல்லையே..''

''நான் அதே வினிதானேம்மா... கூடுதலா தாலியும் மெட்டியும். அவ்வளவுதான்'' மனதில் கணவன் மீது இழையாய் அன்பு இருக்கிறது.. அதை அம்மாவிடம் சொல்லவில்லை.

தம்பி, தங்கையுடன் எப்போதும் போல கொட்டம் அடித்தாள். தொலைக்காட்சி பார்த்தாள். அவளுக்குப் பிடித்த பாடல்களைச் சத்தமாய் வைத்துக் கேட்டு ரசித்தாள்.

அப்பாவுடன் சதுரங்கம் ஆடி, வழக்கம் போலத் தோற்றுப் போனாள்.

இரவில், குழந்தையாய் தாயை அணைத்துக்கொண்டு தூங்கினாள்.

மறுநாள், நடராஜன், வாக்கு தந்தபடி அனைவரையும் வெளியே அழைத்துச் சென்றார்.

புதிய படத்திற்கு டிக்கெட் கிடைக்காமல் ஏமாற்றத்துடன் வேறு பழைய படத்திற்குச் சென்றனர்.

ஓட்டலில் சாப்பிட்டு விட்டு கடற்கரை... கோவில் என்று சுற்றிவிட்டு களைப்புடன் திரும்பினார்கள்.

மூன்றாம் நாள் அவளுக்கு கணவனின் நினைப்பு சட்டென்று வந்தது. தான் திருமணமானவள் என்ற நினைப்பும், அப்போதுதான் எழுந்தது.

'இரண்டு நாளாய் அங்கு இல்லையே... தவித்திருப்பானா?' என்று நினைத்தாள்.

'ஆமாம்.. அன்பான மனைவி இல்லாமல் துடித்திருப்பான்!' என்று கேள்விக்குப் பதிலையும் அவளே சொல்லிக்கொண்டாள்.

'இரண்டு நாளும் சுதந்திரமாக இருந்திருப்பான். சுமாவைச் சந்தித்துவிட்டு நிதானமாய் வந்திருப்பான். அந்த மகிழ்ச்சியில் என் நினைப்பு எங்கே வந்திருக்கும்? இருக்கட்டுமே.. என்றைக்கு இருந்தாலும் பிரிய வேண்டியவள்தானே நான்?'

'இப்போது என்ன செய்துகொண்டிருப்பான்.. சுமாவைச் சந்திக்கத் தவிப்புடன் காத்துக்கொண்டிருப்பான்' மனதுக்குள் நினைத்தாள்.

''வாங்க மாப்பிள்ளை'' அப்பாதான் அழைக்கிறார்.

'யாரை...ஸ்ரீதர்?' திகைத்தாள்.

'இங்கே எங்கே வந்திருக்கிறார்...ஏன்?'

உள்ளே வந்த அவனை வியப்புடன் பார்த்தாள். அவளைப் பார்த்துப் புன்னகைத்தான். அவளுள் பரவசம் பூத்தது.

'இதென்ன புதுமை! மனைவியைத் தேடி வந்ததுமின்றி மந்தகாசப் புன்னகை வேறா!'

''அதென்ன.. அப்படி பார்க்கிறாய் வினிதா? நீ இங்கு வந்துவிட்டால் நான் வரக்கூடாதா என்ன? நான் இந்த வீட்டு மாப்பிள்ளையாக்கும்.''



அவனுடைய பேச்சு, அவளை இன்னும் திகைக்க வைத்தது.

உண்மையான கணவன்கூட இப்படி அன்புடன், ஏக்கத்துடன் பேசியிருப்பானா என்பது சந்தேகம்.

'ஓ.. தான் கேட்டுக்கொண்டபடியே தன் பெற்றோர் முன் அன்புடன் நடந்துகொள்கிறான்' புரிந்துகொண்டவள், சுதாரித்துக்கொண்டாள்.

சரிக்குச் சமமாய் வாயாடினாள்.

தனிமையில் அவளிடம் ''இவ்வளவு வாயாடி என்று தெரியாமல் போனதே'' என்று கேலி செய்தான்.

ஸ்ரீதர், அனைவருடனும் கலகலப்பாய்ப் பழகினான். அதுவும் வியப்புதான்.. தன்னிடமே முகம் கொடுத்துப் பேசாதவன், தன் வீட்டுக்கு வந்து இப்படி இருக்கிறான் என்றால்.. தன் கண்களையே அவளால் நம்பமுடியவில்லைதான்.

அவனுக்கு உபசாரம் தடபுடலாய் நடந்துகொண்டிருந்தது. நடராஜனும் கௌசல்யாவும் மாப்பிள்ளையை விழுந்து விழுந்து உபசரித்தார்கள். அவனது இயல்பாய்ப் பழகும் குணம், அவர்களை மிகவும் கவர்ந்தது.

நடராஜனிடம் அரசியலை அலசினான்.

கௌசல்யாவிடம் தான் போன ஊர்களில் இருக்கும் முக்கிய புகழ்பெற்ற கோவில்களின் புள்ளிவிவரங்களை எடுத்துரைத்தான்.

சந்தியாவின் படிப்பை விசாரித்து அவளுக்குத் தெரியாமல் இருந்ததை விளக்கினான்.

கோகுல் ஆர்வத்துடன் கேட்ட கேள்விகளுக்கு (விளை யாட்டில்தான்) விரல்நுனி பதில்களைத் தந்தான்.

கண்கள் விரிய பார்த்துக்கொண்டிருந்தாள், அவள்.

நாணயத்தின் மறுபக்கமாய் - தனக்கே தெரியாமல் இருந்த கணவனின் குணாதிசயத்தை அன்று தான் புரிந்துகொண்டாள். நெகிழ்ந்து போனாள்.

அடேயப்பா! தன் கணவன் இத்தனை அறிவாளியா! அவனுடைய வார்த்தை ஒவ்வொன்றும் தேர்ந்து எடுத்துப் பேசப்படுவது போல இருந்தது.

ஸ்ரீதர் சென்றபின்பு...

''நம் மாப்பிள்ளை மகா புத்திசாலி. பாரேன். எனக்கே தெரியாத விசயங்களையெல்லாம் சொல்றார்.''

அப்பாவின் முகத்தில் தெரிந்த பெருமையைக் கண்டு வினிதாவின் மனம் குளிர்ந்தது.

அதேசமயம் 'அது சரியப்பா... எத்தனை நாளைக்கு அவர் உங்க மாப்பிள்ளை... பிறகு?' மனதினுள் கேட்டுக் கொண்டாள்.

அந்த நினைப்பில் இதயம் வலித்தது.

'கூடாது. கணவன் என்ற பந்தம் தற்காலிகமாக மட்டுமே இருக்கட்டும். அவர் மீது அன்போ காதலோ துளிர்க்க வேண்டாம்...'

பெற்றவர்களைப் பிரிந்து செல்வது வேதனை.. உடன் பிறந்தவர்களைப் பிரிந்து செல்வதும் வேதனைதான்... அதோடு இன்னொன்றும் சேர்த்துக்கொள்ள வேண்டாம்.



இந்தத் திருமணம் ஒரு ஒப்பந்தம். அதன்படியே சேர்ந்து இருந்துவிட்டுப் போய்விட வேண்டும்... மனதில் எந்தவிதச் சலனமும் வேண்டாம்! அப்படித்தான் எண்ணினாள், வினிதா. ஆனால் மனம் கேட்க வேண்டுமே!

மறுநாளும் வந்த ஸ்ரீதர், அவளை அழைத்துக்கொண்டு புறப்பட்டான்.

''ஆமாம்... இரண்டு நாளாய் என்னுடன் இருந்திருக் கிறீர்களே... சுமாவைச் சந்திக்கவில்லையா?'' என்று கணவ னிடம் கேட்டாள்.

''ஏன்.. உன்னுடன் வருவது உனக்குப் பிடிக்கவில்லையா..?'' பட்டென்று கேட்டான், அவன்.

''அதில்லை.. சுமாவைச் சந்திக்க நான் தடையாய் இருக்கக் கூடாது என்றுதான்..''

''எப்போது அவளைச் சந்திக்க வேண்டும் என்று எனக்குத் தெரியும்..''

''சரிதான்... உங்கள் விசயத்தில் தலையிட நான் யார்?'' முணுமுணுப்புடன் சொன்னாள், அவள்.

தாய்வீட்டில் மகிழ்ச்சியாய்க் கழித்துவிட்டு வெளியே கால் வைத்தவுடன் கணவனுடன் சொற்போர் நடத்தும் தெம்பில்லை. உதடுகள் துடிக்க... பற்களால் அழுத்திக் கொண்டு நடந்தாள்.

அவளின் மவுனம் அவனை உறுத்தியதோ என்னவோ? ''வினிதா.. என் மனைவியான உன்னை அன்பாகக் கவனிக்கவேண்டியது என் கடமையில்லையா.. சுமாவைச் சந்திப்பதிலேயே குறியாக இருந்துவிட்டால் உன்னைக்

கவனிப்பது யார்...? ஏதோ ஒரு கோபத்தில் கடுமையாய்ப் பேசிட்டேன்... மன்னிச்சிடும்மா..''

'இதென்ன... திடீர் கரிசனம்! எதனால்? குற்ற உணர்வு குறுகுறுப்பதாலா?' அவள் விழித்தாள்.

''வினிதா!''

கிருஷ்ணாவின் குரல் கேட்டுத் திரும்பினாள்.

அங்கே அவனேதான்!

''வினிதா... உனக்குத் திருமணம் ஆகிவிட்டதாமே! கேள்விப் பட்டேன்'' அவன் குரலில் ஏக்கம் தெரிந்தது.

''ஆமாம்.. கிருஷ்ணா..! இவர்தான் என் கணவர். பெயர் ஸ்ரீதர்!'' என்றவள், ஸ்ரீதரிடம் திரும்பி, ''இவர் கிருஷ்ணா.. என் சிநேகிதர்..''

அதைக்கேட்ட கிருஷ்ணா, குழப்பத்துடன் பார்த்தான்.

''வினிதா.. அவருக்கு.. உன்..''

''தெரியும்.. தெரிந்துதான் திருமணம் செய்துகொண்டார். நான் வருகிறேன் கிருஷ்ணா.. போகலாமா ஸ்ரீதர்?'' கணவனின் கரம் பற்றி நடந்தாள்.

அவளையே கண்கொட்டாமல் பார்த்துக்கொண்டிருந் தான், கிருஷ்ணா.

எந்த விதத்தில் இவனை விடத் தாழ்ந்து போனோம் என்ற ஆராய்ச்சியில் இறங்கியது மனம்.

அன்று இரவில் -

''ஏன் வினிதா..! கிருஷ்ணா உன்னைக் கல்யாணம் செய்துகொள்ள விரும்பினாரா?''



திடீரென்று கிருஷ்ணாவின் பெயரைச் சொன்னதும் அவள் அதிர்ந்தாள்... 'எதற்குக் கேட்கிறான்? ஒரு வேளை தலைக்குள் நண்டு பிறாண்டுகிறதோ...'

'களுக்'கென்று சிரித்தாள்.

எதற்கு இப்போ சிரிப்பு என்பது போல அவளைப் பார்த்தான்.

''நான் கேட்டதற்குப் பதில் சொல்லலியே..''

''உண்மையைச் சொல்லட்டுமா...? பொய் சொல் லட்டுமா?''கேட்டுவிட்டு நாக்கைக் கடித்துக்கொண்டாள்.

'ச்சே.. இது என்ன விளையாட்டு.. உண்மையைச் சொல்...'

''கிருஷ்ணாவும் நானும் ஒருவரையொருவர் நேசித் தோம். என் நோய் எனக்கு எமன் என்று தெரிந்ததும் உண்மையை அவரிடம் சொன்னேன். எனக்காகக் காத் திருப்பதில் அர்த்தமே இல்லை என்றேன். ஆனால், அவர் என்னையே மணப்பதாய் உறுதியுடன் சொன்னார். தன்னால் காதலை மறந்து வாழமுடியாது என்றார்.''

''அமரக் காதல்தான்'' குரலில் ஏளனம் தெரியக் கூறினான்.

'சுர்' என்று ஏறியது அவளுக்கு.

''ஏன் இருக்கக்கூடாதா? சுமாவின் மேல் உங்களுக்கு அமரக்காதல் இல்லையா?''

''சரி...'' சரண் அடைவது போல் கரங்களை உயர்த்திச் சொன்னான்.

''பிறகு?''

"அவரது பெற்றோர் வந்து இந்தத் திருமணத்தால் தன் மகனின் எதிர்காலம் பாழாகிவிடும். திருமணம் நடக்காமல் இருப்பது என் கையில்தான் இருக்கிறது என்றார்கள்!"

"அதனால்தான் என்னைக் கட்டிக் கொள்ளச் சம்மதித்தாயாக்கும்.. ஒரே கல்லில் இரட்டை மாங்காய்.."

"என்ன அது?" கண்கள் அகன்று விரிய... அதில் வியப்பு கலக்கக் கேட்டாள்.

"ஒன்று கிருஷ்ணாவை விலக்க முடிந்தது."

"உம்.. இன்னொன்று.."

"என் போன்ற நல்லவன் ஒருவனைக் கணவனாகப் பெற முடிந்ததுதான்."

"அடடா.. இது புலியா.. இல்லை பூனையா...?" கிண்டலாய்க் கேட்டாள்.

"இரண்டும்தான்.."

"பூனை சில சமயம் புல் தின்னுமாம்.. ஆனால் புலி தின்னாதே.."

"ச்சே.. தின்னும்படியாகிவிட்டது" என்றவன், திரும்பிப் படுத்துக்கொண்டான்.

அவனது முதுகைப் பார்த்தபடி படுத்திருந்தாள், வினிதா.

'தன்னை அன்புடன் அணைத்தவனா..? தன் வீட்டில் பாசத்துடன் பழகியவனா..?'

'இல்லை அந்த ஸ்ரீதர் வேறு..'

'இவன் கல் மனிதன்.. இவன் இதயமும் கல்தான்..'



அவளுக்கு அழுகை வரும்போல இருந்தது. ஸ்ரீதரின் உண்மை அன்பு தனக்குக் கிடைக்காதோ.. கடைசிவரை இவனது வெறுப்பைச் சுமந்துகொண்டுதான் போகப் போறேனோ... நினைக்கவும் தாளவில்லை.

'கடவுளே.. எனக்கும் நீண்ட ஆயுளைத் தந்திருக்கக் கூடாதா?" கலங்கினாள்.

பாசத்தைப் பொழியும் தாய், தந்தையரைக் கொடுத்தாய். அன்பான தங்கை, தம்பியைத் தந்தாய். பரிவுடன் பழகும் அத்தையையும் மாமாவையும் காட்டினாய்.

இத்தனையும் கருணை காட்டிய நீ, கணவனின் அன்பைப் பெறுவதற்கு என் ஆயுளை நீடித்திருக்கக்கூடாதா.. இதில் மட்டும் ஏன் உனக்குக் கல் மனசு?' மனசுக்குள் மறுகினாள்.

கணவன், திரும்பிப் படுத்திருப்பது தெரிந்தது.

பெரிய கட்டில்... இருவரும் தள்ளிப் படுத்துக்கொள்வது வழக்கம்.

முதலில் இது கஷ்டமாய்த்தான் இருந்தது. எப்படி அவனுடன் படுப்பது?

ஆனால், ஸ்ரீதர்தான் சொன்னான். 'ஒரே கட்டிலில், படுத்துக்கொள்ளலாம்.. இடைவெளி இருந்தால் போதும்' என்று. இப்போது பழக்கமாகிவிட்டதால் உறுத்தலும் நீங்கியது. மனதில் கட்டுப்பாடு இருந்தால் போதுமே என்று அவள் நினைத்தபோதுதான் அவளது அழகு இடையில் அன்புப் பாரமாய் அவன் கை விழுந்தது.


தூக்கத்தில் போட்டிருக்கிறான்!

அவன் கரத்தின் வெம்மை அவளையும் அறியாமல் மின்னல்களாய் உள்ளே பரவிச் சென்றது. இதுவரை அறியாத விநோத உணர்வு!

ஏதோ உண்மையாகவே கணவன் மனைவியாய்ப் படுத்திருப்பது போல் தோன்றியது.

அதில் ஆனந்தம் பொங்கி எழுந்தது. அவன் தூக்கத்தில் 'சுமா' என்று முனகி அவளது கழுத்து வளைவில் முகம் புதைத்துத் தூங்கியபோது... அப்படியே கிறங்கிப் போனது மனசு.

உள்ளே தீயாய்த் தகித்தது. வேதனை. அது எதற்கு? என்று புரியவில்லை!



## 10

திருமணமாகி இரண்டு மாதம் ஆகிவிட்டதா?

வினிதாவால் அதை நம்ப முடியவில்லை. ஒவ்வொரு நாளும் தன் வாழ்க்கையெனும் நாள்காட்டியில் ஒரு தாள் கிழிக்கப் பட்டதை உணர்ந்தாள். அந்த இரண்டு மாதத்தில் அந்த வீடும் அங்கிருக்கும் முகங்களும் பழகிப் போயின.

ஏதோ ஆண்டுக் கணக்கில் அங்கு வாழ்ந்ததுபோல உணர்வு. தன் நோயை நினைத்து வெதும்பாமல் அதை மறந்து, தன்னால் முடிந்த வேலைகளைச் செய்தாள்.



கணவனின் தேவைகளை அறிந்து கவனித்தாள். வீட்டுக்கு வரும் விருந்தினர்களிடம் முகம் மலர்ந்து பழகினாள். அதை கண்டு சுசிலாவின் உள்ளம், குளிர்ந்து போனது.

'எந்தப் பிறவியின் புண்ணியமோ.. இப்படியொரு மருமகள் வந்திருக்கிறாள். இவளுக்கு ஆண்டவன் பூரண ஆயுளை தந்திருக்கக்கூடாதா?' மனதினுள் வேதனைப் பட்டாள். வினிதாவை நன்றாகக் கவனித்துக்கொள்ள வேண்டும் என்று விரும்பினாள். மகனிடம், அவளோடு சினிமா.. பூங்கா என்று போய்வரச் சொல்வாள்.

ஒரு நாள் ராஜகோபாலன், ஸ்ரீதரிடம் ''நீ, சுமாவை விரும்புகிறாய் என்று தெரியும். அதே நேரத்தில் கொஞ்ச காலத்துக்கு உன் மனைவியாய் வாழ வந்திருக்கும் வினிதாவைக் கைவிடாதேப்பா.. அவள் நினைத்திருந்தால் திருமணமே வேண்டாம்னு இருந்திருக்கலாம். ஆனால் உனக்காக அதைத் தியாகம் செய்திருக்கிறாள். கொஞ்ச காலம்தான் ஸ்ரீதர்.. சுமா அதற்குள் எங்கும் ஓடிவிடப் போவதில்லை. அவளைச் சந்திக்கவே வேணாம்னு சொல்லலை.. குறைத்துக்கொள் என்கிறேன். உனக்குக் கழுத்தை நீட்டிய இவளையும் கொஞ்சம் கவனிப்பா... இவளுக்கும் ஆசைகள் இருக்கும். கடைசி காலம் வரை மகிழ்ச்சியா இருக்கட்டும்.. அது உன் கையில்தான் இருக்கு..''

அந்த வார்த்தைகளின் தாக்கம் அவனது கண்களைத் திறந்தன.

அவளை அழைத்துக்கொண்டு வெளியே திரைப்படம்... கடற்கரை என்று போனான்.

அவளது விருப்பப்படியே இருவரும் கோவில்களுக்குச் சென்று வந்தனர்.

சில சமயம் வினிதாவின் தாய் வீட்டிற்குச் சென்று பொழுது போக்குவதும் உண்டு.

வினிதாவிற்கு மனம் நிறைந்திருந்தது என்றாலும்.. அவன் சுமாவைச் சந்திக்க இயலாமல் போகிறதே என்று வருந்தினாள்.

என்னதான் இருந்தாலும் ஸ்ரீதர், சுமாவுக்கு உரியவன். தற்காலிகமாகத்தான் தனக்குக் கணவன்.. தான் கண் மூடியபின்பு அவளுக்கு முழு சொந்தமாகிவிடுவான்.

என்னால் அவர்களிடையே கோபமோ.. தகராறோ எழக் கூடாது. இருவரையும் சேர்த்து வைக்கவேண்டியது என் கடமை.. இருவரும் சந்திக்க முடியாமல் நந்தியாய் இருக்கக்கூடாது!

சமீபமாக அவன் சுமாவைச் சந்திக்கப் போவதில்லை என்று தெரிந்தது. 'பாவம்.. என்ன வேதனைப்படுகிறாளோ' என்று பரிதாபப்பட்டாள்.

பெண் மனம், பெண்ணிற்காக வருத்தப்பட்டது.

ஒரு நாள் திடீர் சந்திப்பு. சுமா, எதிர்ப்பட்டாள்.

வினிதாவை அறிமுகப்படுத்தினான்.

சுமா, எரிச்சலுடன் பார்த்தாள். 'நான் இருக்க வேண்டிய இடத்தில் இருக்கிறாள்.. அதிருஷ்டக்காரி' என்று பொறாமைப் பட்டாள்.

'நான் போனதும் என் இடத்தைப் பிடிக்க இருப்பவள். ஸ்ரீதர் இதயத்தில் இடம் பிடித்தவள்...' ஏக்கத்துடன் பார்த்தாள், வினிதா.



சுமா, கேட்டாள். "என்ன ஸ்ரீதர்... வரவர என்னைப் பார்க்க வருவதே இல்லை.. வீட்டில் ஏதாவது கட்டுப்பாடா?"

அவளது வார்த்தைகளில் லேசாய் ஊசி முனை தெரிந்ததை உணர்ந்தான், ஸ்ரீதர்.

திரும்பி ஒருதடவை மனைவியைப் பார்த்துவிட்டு, "இதென்ன பேச்சு சுமா..?" என்றான்.

இடைமறித்தாள், வினிதா.. "ஸ்ரீதர், நீங்கள் இருவரும் பேசி விட்டு வாருங்கள்... நான் அங்கே காத்திருக்கிறேன்" என்று சொன்னவள், சிறிது தூரம் தள்ளிப் போய் நின்று கொண்டாள்.

"என்ன சுமா இது.. இப்படியா அவள் மனம் நோகும்படி பேசுவாய்..?" என்று கடிந்துகொண்டவனை வியப்புடன் நோக்கினாள், சுமா.

"அட..! என்றையிலிருந்து இந்தக் கரிசனம்... சரி ஸ்ரீதர்... ஏதோ நோய் என்றீர்கள். பார்த்தால் அப்படித் தெரிய வில்லை. பனங்கிழங்கு மாதிரியல்லவா இருக்கிறாள்! சில மாதங்களில் இறக்கப் போகிறவளைப் போல் பட வில்லையே... ஒருவேளை உங்களை ஏமாற்றிக் கட்டி வைத்துவிட்டார்களா என்ன?"

அவளது பேச்சு அவனுக்கு எரிச்சலூட்டியது.

"எதுக்காக அவர்கள் ஏமாற்ற வேண்டும்... தோஷம் என்னிடம்தானே.. எல்லோரும் உன்னைப் போலன்னு நினைத்து விட்டாயா? இல்லே எல்லாப் பெண்களுமே சுமாவைப் போல தயங்கி ஒதுங்கிப் போய்விடுவார்களா..?"

"நீங்க என்னைத் தப்பா புரிந்துகொண்டு பேசுகிறீர்கள் ஸ்ரீதர்...! என் நிலைமையை எப்படி சொல்வேன்..? உங்களையே நினைத்து.."

''நாளைக்குப் பேசிக்கொள்ளலாம் சுமா... இங்கு நின்று பேசுவது சரியில்லை.. பார்... வினிதா வேறு தனியாக நிற்கிறாள் பாவம்..'' சொல்லிவிட்டுத் திரும்பினான்.

''நாளை எத்தனை மணிக்கு ஸ்ரீதர்...? எப்போதும் சந்திக்கிற இடம்தானே..!'' விடாப்பிடியாய் கேட்டாள்.

''ஆம்... ஐந்தரை மணிக்கு... '' அவசரமாய் வார்த்தைகளை உதிர்த்துவிட்டு நடந்தான்.

மனைவி தனியாய் நிற்கும் உறுத்தல், அவனது நடையை விரைவாக்கியது.

இவன் வருவது அறியாமல் அவள் இங்கும் அங்கும் பார்வையைச் சிதறவிட்டு வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தாள்.

அவனது கண்கள் அவள் மீதே இருந்தன. பாதை தவறிய குழந்தையைப் போல அவள் தெரிந்தாள்.

அவன் மனம் நெகிழ்ந்தது.

'உண்மையில் இவள் பரிதாபத்துக்கு உரியவள். ஒவ்வொரு அடியாய் வைத்து நெருங்கிக் கொண்டிருக்கும் எமனை எதிர்பார்த்திருக்கும் பேதைப் பெண்! எதிர்பாராமல் திடீர் என்று இறப்பது எத்தனையோ மேல்... இறக்கப் போவது விரைவில் என்று தெரிந்த பின் அதனை எதிர் நோக்கிக் காத்திருப்பது போல் நரகவேதனை வேறேதும் இல்லை..'

''கிழங்கு மாதிரி இருக்கிறாள்..'' இவளா சாகப் போகிறாள் என்பது போல சுமா கூறியது நினைவுக்கு வர.. அவள் மீது கோபம் வந்தது.



வினிதா எப்போது காலியாவாள் என்று காத்துக்கொண்டு இருப்பது போல் அல்லவா பேசுகிறாள். ச்சே! இவளும் ஒரு பெண்ணா?

அவன் முகம் இறுகிக் கிடப்பதைப் பார்த்து பயந்து போனாள், வினிதா.

தாடையின் அசைவு.. பற்களைக் கடிக்கிறான் என்று தெரிந்தது. 'யார் மீது கோபம்.. என் மீதா..?'

'இன்னும் எத்தனை நாளுக்கு உயிருடன் இருந்து தொலைந்து எங்கள் உயிரை வதைக்கப்போகிறாள்' என்ற கோபமோ?

அது, இவள் கையில் இல்லையே! மனதினுள் குமைந்தாள். 'நான் தயார்தான்.. அங்கிருந்து அழைப்பு வரவில்லையே..!' கவலைப்பட்டாள்.

மனம் என்பது விசித்திரமானது. வெவ்வேறு சிந்தனைகளைக் கொண்டது.

ஒருமுறை நீண்டநாள் வாழ வேண்டும் என்று நினைக்கும், வினிதாவின் மனம்.

இன்னொரு சமயம் அதே மனம் ஸ்ரீதரின் பொறுமையைச் சோதிக்காமல் போய்ச் சேர்ந்துவிடலாமே என்று நினைத்து மறுகும்..

அவன் முகம், இறுகிப் போனால் அதை அவளால் தாங்க முடியாது. 'அவன் எப்போதும் சிரித்த முகமாகவே இருக்க வேண்டும்.. தன் தாய் வீட்டில் இருந்தானே! அதைப் போல...' நினைத்தாள்.

கணவனை ஓரக்கண்ணால் பார்த்தாள். 'உம்'மென்றிருந்தான்.

அவளும் பேச மனம் வராமல் ஜன்னலுக்கு வெளியே பார்த்துக் கொண்டிருந்தாள்.

வெளியுலகம் மகிழ்ச்சியாய் இருப்பது தெரிந்தது. காதலியை மெல்ல உரசிக்கொண்டு நடக்கும் வாலிபன்.. குழந்தையின் கைப்பிடித்து நடக்கும் தம்பதியினர்... பட்டாம்பூச்சிகளாய் மாணவ - மாணவிகள்... அனைவர் முகத்திலும் நிறைந்த மகிழ்ச்சி.

"அம்மா.. என் பிறந்த நாள் எப்போம்மா.." குழந்தையின் குரல், அவளைத் திருப்பியது.

"அடுத்த மாதம்டா... கண்ணா.." தன் குழந்தையைக் கொஞ்சியபடி தாய் சொன்னாள்.

"பெரிய்ய்ய... கேக் வாங்கலாமாம்மா.. என்னோட படிக்கிறவங்களை எல்லாம் கூப்பிடட்டுமா.." குழந்தையின் குரலில் ஆர்வம்.

"ஓ.. செய்வோமே.. என் செல்லக்குட்டிக்கு நல்ல புது துணி வாங்கிடுவோமா.." குனிந்து கன்னத்தில் முத்தமிடும் தாயின் முகத்தில் எத்தனை ஆனந்தம்!

உலகமே அந்தச் சின்ன செய்கையினுள் அடங்கிக் கிடப்பது போல பெருமை!

பெருமூச்சுவிட்டாள், வினிதா.

'குழந்தையாகவே இருந்துவிட்டால் நிம்மதிதான். அவர்களின் பிரபஞ்சம் ரொம்ப சின்னது.. தேவைகள் ரொம்ப ரொம்ப குறைவு.. கவலை என்பதே தெரியாத வயசு!



'சின்ன பெண்ணாக இருந்தபோது நானும் இப்படித்தான் அம்மா - அப்பாவை நச்சரித்து இருப்பேன்' யோசனையில் ஆழ்ந்தவள், சட்டென்று நினைவு வர, விழித்தாள்.

'இன்றைக்கு என்ன தேதி.. இருபத்தொன்று! நாளை என் பிறந்த நாள்! என் வாழ்க்கையின் கடைசி பிறந்த நாள்!'

'பல்லாண்டு வாழ்க...' என்று இனி என்னை வாழ்த்த முடியாது...

பிறந்த நாளைக் கொண்டாடும் ஒவ்வொருவருக்கும் அடுத்த பிறந்த நாள் உண்டா.. இல்லையா என்று நிச்சயம் தெரியாது. ஆனால், தனக்கு நிச்சயம் தெரியும்... கிடையாது என்று.

என் முதல் பிறந்த நாளை, பெற்றோர்கள் விமரிசையாய்க் கொண்டாடி இருப்பார்கள்.

அதுபோல கடைசி பிறந்த நாளையும் கொண்டாட வேண்டும்.

தாய் வீட்டிற்குச் சென்றுவிட வேண்டும். பிறந்த நாளை அவர்களுடன்தான் கழிக்க வேண்டும்.

அம்மா அவளை உட்கார வைத்து நெற்றியில் குங்குமம் இட்டு, தலையில் எண்ணெய் வைத்து நீராட்டுவாள். அப்பா, புது உடை வாங்கி அதைத் தட்டில் வைத்துத் தருவார். அன்றைக்கு வடை பாயசத்துடன் விருந்து. அப்புறம் ஆட்டம் பாட்டம்தான்.. நல்ல சி.டி. என்று கிடைத்தால் அதைப் போட்டு பார்ப்பார்கள்.. மாலையில் கோவிலுக்குப் போய் வினிதா பெயரில் அர்ச்சனை செய்வார்கள். தங்கையும், தம்பியும் தாங்கள் வைத்திருக்கும் பிறந்த நாள் பரிசை ரகசியமாக வைத்திருந்து தருவார்கள்.

அதை வாங்கும் போது.. அந்த ஆனந்தமே அலாதிதான். இத்தனையையும் இந்தப் பிறந்த நாளில் இழப்பதா? முடியாது...


அத்தையும், மாமாவும் அன்பைப் பொழிவது உண்மை தான்... அது, பெற்றவர்களின் பாசத்திற்கு இணையாகுமா?

இல்லை... ஸ்ரீதர்தான் பிறந்த நாள் வாழ்த்து கூறுவானா..?

என் பிறந்த நாளைப் பற்றி அவனுக்குத் தெரியவும் தெரியாதே... அப்படியே தெரிந்திருந்தாலும் அதைப்பற்றி அவனுக்கு என்ன கவலை வந்தது. அவனுக்குச் சுமா இருந்தால் போதும்.

நினைக்கும்போதே துக்கம் அடைத்தது. 'எதற்காக இப்படி தவிக்கிறேன்? அவன் அன்புக்காகவா.. அப்படியென்றால் அவன் மீது தன்னையும் அறியாமல் காதல் வந்துவிட்டதா..? எப்போது? எப்படி?

'ஆம்.. அன்று இரவு அன்பாய் அணைத்தானே... உடலும் உள்ளமும் சிலிர்த்துப் போனதே.. 'சுமா' என்றதும் மனம் வலித்துத் துடித்ததே.. அதுதான், காதலா.. அப்படித்தான் இருக்குமா...' என்று நினைத்தவள், திகைத்துப் போனாள்.



## 11

அன்றைய நாள் வினிதாவின் கடைசி பிறந்த நாள் என்ற வேதனையை மறைத்துக்கொண்டு அனைவரும் மகிழ்ச்சியாக இருந்தனர்.



உள்மனம் ஊமையாய் அழுதுகொண்டிருந்தது. அதை வெளிக்காட்டாமல் கௌசல்யா, வளைய வந்தாள்.

வழக்கம் போல தலைக்கு 'ஷாம்பூ' போட்டு குளித்து ஆடை மாற்றி, பூவும் பொட்டும் வைத்து விளக்கேற்றி கண்மூடி வேண்டினாள். 'தெய்வமே.. அடுத்த பிறவின்னு எனக்கு ஒண்ணு இருந்தால் இதே அப்பா - அம்மாவுக்கு மகளாய்ப் பிறக்க வேண்டும். இதே தங்கை, தம்பிகளை மீண்டும் பெறவேண்டும். இதே கணவனை அடைந்து நீண்டநாள் வாழவேண்டும்.'

பின்புதான் உணர்ந்தாள். 'ஸ்ரீதர் தனக்குக் கணவன் என்று நினைக்கிறதே உள்ளம்.. ஏன் கிருஷ்ணாவை நினைக்கவில்லை?'

'கிருஷ்ணா மீது ஏற்பட்டது காதல் இல்லையா?'

'தாலி கட்டியதால் ஒரு பெண்ணிற்கு இயற்கையாக வந்துவிடும் அன்பும் நேசமும் தனக்கு வந்ததா? இப்போது கிருஷ்ணாவைப் பிரிகிறோமே என்று நினைத்து வருத்தம் வரவில்லை.. ஏன் கிருஷ்ணாவின் நினைப்பே இல்லை?'

ஸ்ரீதரை பிரிவதுதான் துன்பமாக இருக்கிறது. 'எந்த சக்தி தன் மனதைக் காந்தமாய் இழுத்து ஸ்ரீதரிடம் சேர்த்தது?' நினைத்தாலும் புரியவில்லை.

ஸ்ரீதரை மணக்கும்போது ஒருவனுக்கு உதவப்போகிறோம், அவ்வளவுதான். தன் வாழ்வின் முடிவு, இருவர் வாழ்க்கைக்கு உதயமாய் இருக்கட்டுமே என்றுதான் ஒப்புக்கொண்டாள்.

அது, இவ்வளவு தூரம் தன்னுள் மாற்றத்தை ஏற்படுத்தும் என்று அவள் நினைத்துப் பார்க்கவில்லை.

இதோ... இப்போதும் பாசத்தைப் பொழியும் பெற்றோர். 'அக்கா' என்று உருகும் உடன் பிறந்தவர்கள் என்று சேர்ந்திருக்கும் இந்த மகிழ்ச்சியான வேளையில் ஸ்ரீதரும் அருகில் இருக்கக் கூடாதா? என்ற ஏக்கத்தைத் தவிர்க்க முடியவில்லை.

அந்த ஏக்கத்தில் அவள் முகத்தில் வாட்டம் தெரிந்தது.

அதைக் கவனித்தாள், தாய். ''மாப்பிள்ளை வந்தாலும் வரலாம்'' என்றாள்.

'இந்த அம்மா, சரியான பைத்தியம்... மாப்பிள்ளையை எதிர்பார்த்து நிற்கிறாள். அவர் எங்கே வரப்போகிறார்? அதுவும் சுமாவிடம் சந்திப்பதாய்ச் சொன்னபிறகு... அவளோடு மகிழ்ச்சியில் ஆகாயத்தில் பறந்துகொண்டிருப்பவருக்கு என் நினைவு வருமா என்ன?'

அப்பா வாங்கித் தந்த கிளிப்பச்சைக் கரையிட்ட பட்டுச் சேலை உடுத்தி இருந்தாள். சேலைக்குப் பொருந்தும் இரவிக்கை... தலை நிறையப் பூவுடன் கண்ணாடியில் தன்னைப் பார்த்த போது 'இத்தனை அழகா நான்!' என்ற பெருமிதம் ஏற்பட்டது.

'இந்த அழகு, ஸ்ரீதரின் கண்களுக்குப் படவில்லையே... வண்ண மயிலாய் இருந்து என்ன பயன்? சுமாவைப் பார்த்து ரசித்தவனுக்கு நான் வான்கோழியாய் அல்லவா தெரிகிறேன்!'

பெருமூச்சுவிட்டாள். நெஞ்சத்தின் தகிப்பில் நாசி வழியே புகை வராத குறைதான்.



'இந்த இளமையும் அழகும் வீணாய் மண்ணுக்குப் போய்ச் சேரப்போகின்றன. போய்த் தொலையட்டுமே' என்று மனம் விரக்தியுடன் முணுமுணுத்தது.

மதியம் அனைவரும் சாப்பிடும் வேளையில் திடீரென்று ஸ்ரீதர் வந்து சேர்ந்தான்.

அனைவரும் ஆர்ப்பாட்டத்துடன் வரவேற்றார்கள். "வாங்க மாப்பிள்ளை.. ஏன் தாமதம்? நல்லவேளையாய் இன்னும் சாப்பிடத் தொடங்கலை. கௌசல்யா! மாப்பிள்ளைக்கும் சேர்த்து இலை போடு'' தடபுடலாய் மாப்பிள்ளையை அப்பா வரவேற்பதைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அவனைப் பார்த்தபோது மின்னல் அடிக்கும் நேரம் இதயத்தில் வேலை நிறுத்தம் செய்துவிட்டு பின் இயங்கியதை அவளால் உணர முடிந்தது. 'ஏன் தாமதம்?' என்று அப்பா கேட்டதைப் பார்த்தால், ஓ...! அப்பாதான் அழைத்திருக்கிறார். இல்லாவிட்டால் வருவாரா?

ஸ்ரீதரும் உடன் அமர்ந்து சாப்பிட்டான். அவன் சரளமாய்ப் பேசுவது கண்டு, 'பரவாயில்லை... இறுக்கம் கொஞ்சம் தளர்ந்திருக்கிறது' என்று எண்ணிக் கொண்டாள்.

தனியாய் அறையில் இருந்தபோது அவன் அவளது உள்ளங்கையைப் பிடித்து அதில் சின்ன நகைப் பெட்டியை வைத்தான்.

பிரித்துப் பார்த்தவள் முகத்தில் வியப்பு. முத்துகளுக்கு மத்தியில் சிவப்புக் கற்கள் ஒளிவீசும் அழகான காதணிகள்!

கேள்விக்குறியாய்ப் பார்த்தாள். ''என் பிறந்த நாள்... உங்களுக்கு எப்படி... அப்பா போன் பண்ணினாரா?''

''அதற்கு முன்பே தெரியும். போன தடவை இங்கு வந்தபோது பேச்சுவாக்கில் உன் அம்மா சொன்னது அப்போதே மனசுக்குள் குறித்துக் கொண்டேன். உன் பிறந்த நாளை நீயும் நானுமாய் கொண்டாட வேண்டும்னு இருந்தேன். இதை உனக்குக் கொடுத்து ஆச்சரியப்படுத்த வேண்டும் என்றெல்லாம் நினைத்திருந்தேன். ஆனால், நீ உன் வீட்டினருடன் இருக்க ஆசைப்பட்டதால் அந்த ஆசையை ஏன் கெடுக்க வேண்டும் என்று இருந்து விட்டேன். என்ன... சினிமா... ஓட்டலில் நல்ல சாப்பாடு... ஜாலியா ஒரு ரவுண்டு... எல்லாவற்றையும் தவறவிட்டுட்டே... அவ்வளவு தான்'' சொல்லிவிட்டு சிரித்தான், அவன்.

அந்தச் சிரிப்பில் மயங்கி நின்றாள், அவள்.

வெண் பற்கள் தெரிய... கண்கள் லேசாய் இடுங்க சிரிக்கும்போது இன்னும் அழகாய்த் தெரிந்தான். எப்போதும் இப்படிச் சிரிப்புடன் இருக்கக் கூடாதா? ஸ்ரீதர் இப்படி சிரித்துப் பேசுவது அபூர்வம்தான்... ஒருவேளை தன்னிடத்தில் மட்டுமா அப்படி...?

தன் பிறந்த நாளை மறக்காமல் பரிசுடன் வந்தான் என்ற மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்துகொண்டு தாயிடம் சென்றாள். கணவன் தந்த பரிசைக் காட்டினாள். ரொம்பவும் அழகாய் இருப்பதாய்ச் சொன்னாள் அம்மா.

''போட்டுக்கோம்மா. ஆசையா வாங்கி வந்திருக்கிறார்'' என்றாள்.

கணவன் முன் வந்து நின்று முகத்தை அசைத்துக் காட்டினாள். 'போட்டுட்டேன்... பாருங்க' என்பது போல.

''ரொம்ப அழகா இருக்கு. உனக்குப் பிடிச்சிருக்கா?''



''நீங்க வாங்கித் தந்த முதல் பரிசு ஆயிற்றே... பிடிக்காமல் இருக்குமா? இந்தப் பிறந்த நாளை மறக்கவே முடியாது... கடைசி பிறந்த நாளும் மனதிற்கு நிறைவாய் அமைந்து விட்டது.''

சட்டென்று அவளது வாயைப் பொத்தினான், அவன்.

''வேண்டாம்... இந்த மாதிரி பேசி இன்றைய மகிழ்ச்சியைக் கெடுத்துக் கொள்ளாதே, வினிதா! எல்லாவற்றையும் மறந்து விட்டு சிரித்த முகத்தோடு இருக்க வேண்டும் நீ! அதுதான் எனக்கும்... எல்லோருக்கும் வேண்டும்.''

அவனது குரலில் தெரிந்த கரகரப்பு... உண்மையா... இல்லை பிரமையா! அவனது வார்த்தைகளில் தெரிந்த அக்கறை, அவள் மனதை இதமாய் வருடித் தந்தது.

என் பிறந்த நாளைக் கௌரவித்திருக்கிறான்... சுமாவின் சந்திப்பைவிட என் பிறந்த நாள்தான் முக்கியம் என்று வந்ததே போதும்... இந்த நாள் பொன்னாள்தான்.

சுமாவைப் பார்க்க விடாமல் தான் தடையாய் இருப்பது லேசாய் உறுத்தினாலும், அதைத் தள்ளி வைத்தாள். 'இன்றைக்கு என் ஸ்ரீதர், எனக்கு மட்டும்தான்' என்று நினைத்துக் கொண்டாள்.

'என் ஸ்ரீதர் என்று எந்த உரிமையில் நினைத்தேன்? என்றையிலிருந்து என் ஸ்ரீதரானான்?' யோசித்தாள். அவளுக்கே தெரியவில்லை.

ஆனால், ஒன்று மட்டும் நிச்சயம். இதுநாள் வரை இருந்த வினிதா, இப்போது இல்லை. பல நாள் விரும்பிப் பழகிய கிருஷ்ணாவைப் பிரியவும் துணிந்த வினிதா, இப்போது ஸ்ரீதரைப் பிரிய முடியாமல் தவிக்கிறாள்.

அன்று இரவு ஸ்ரீதர் அங்கேயே தங்கினான். அதுவும் அவளுக்கு ஆச்சரியமே.

''தங்கிவிட்டுப் போகலாம் மாப்பிள்ளை'' என்றதும் தங்கி விட்டானே... மறுப்பு ஏதும் சொல்லாமல்... என்ன ஆயிற்று ஸ்ரீதருக்கு!

அறையின் உள்ளே நுழைந்து கதவைத் தாழிட்டபோது ஏதோ முதலிரவு அறைக்குள் அடியெடுத்து வைக்கும் புது மணப் பெண்ணின் படபடப்பு... பெற்றோருக்குச் சந்தேகம் வராமல் கதவை மூடியே ஆக வேண்டும்.

அவன் எதையோ படித்துக் கொண்டிருப்பதைக் கண்டு எதுவும் பேசாமல் படுக்கையின் ஓரமாய்ப் படுத்துக் கொண்டாள்.

'இந்தப் புத்தகத்தை படிப்பதற்கா இங்கு தங்கினான்? இதை அவன் வீட்டிலேயே படித்திருக்கலாமே' சலிப்புடன் நினைத்தாள்.

'ஒருவேளை ஆசையுடன் தங்கி விட்டோமே என்ற குற்ற உணர்வு தைக்கிறதோ என்னவோ?'

'அதுசரி... அதற்காகப் பேசவும் கூடாது என்ற சட்டமா? பத்து மணிதான் ஆகிறது. ஆட்டோ பிடித்துச் சென்று விடலாமே... இஷ்டம் இல்லாமல் ஏன் இங்கு தங்க வேண்டும்? யாரும் இங்கு வற்புறுத்தவில்லை.'

மனதில் கோபம் எழ, அது அழுகையாய் வடிகால் தேடியது.

எதற்குமே அழாதவள் அப்போது அழுதாள். சூடான கண்ணீர் தளும்பி, நாசி வழியே வழிந்து தலையணையை நனைத்தது.



எப்போது உறங்கினோம் என்று அவளுக்கே தெரியாது.

நடுராத்திரியில் திடீரென்று தலையினுள் வண்டு குடைந்தது போல் வலி வர தூக்கம் தொலைந்து போய் விட்டது. எழுந்து அலமாரியில் தயாராய் இருந்த மாத்திரையை எடுத்துப் போட்டுக் கொண்டாள். வலியின் வேதனையைத் தாள முடியாமல் விம்மினாள். எழுந்து தன் தாயிடம் போய்விடலாம் என்று நினைத்தபோது ஸ்ரீதரின் கரங்கள், அவளை இழுத்து அணைத்துக் கொண்டன.

''ஏன்...? அதே வலியா... என் மேல் சாய்ந்துகொள்'' பரிவுடன் சொன்னான்.

அவளும் சாய்ந்துகொண்டாள். அன்றைக்கும் இப்படித்தான் அணைத்தான். இன்றும் அவன் அரவணைப்பில் இருக்கும்போது 'வேறு எதுவும் வேண்டாம். இப்படியே உயிர் போனாலும் பரவாயில்லை' என்று தோன்றியது.

திடீரென்று வந்தது போலவே மறைந்து போனது வலி. ஒரு வேளை மாத்திரையின் சக்தியினாலா... தெரியவில்லை.

''வலி குறைந்து விட்டதா வினிதா?''

''உம்...'' தலையசைத்தாள்.

அவன் விலகிப் படுப்பான் என்று எதிர்பார்த்தாள். அவன் அணைப்பை விலக்காமல் அப்படியே இருந்தான்.

தூங்கிவிட்டானா என்று கண்களை உயர்த்திப் பார்த்தாள். இல்லை... எங்கேயோ வெறித்துக் கொண்டிருந்த கண்கள், அவள் கண்களைச் சந்தித்தன.

கண்கள் வழியாகவும் மின்சாரம் பாயுமா என்ன? உடம்பு அதிர்ந்தது... இதயம் வேகமாய்த் துடிப்பது தெரிந்தது...


இதயத் துடிப்பின் சத்தம் 'லப்டப்' என்று கேட்டது. 'அவனுடையதா... இல்லை தன்னுடையதா?'

அவளது கண்களில் என்ன கண்டானோ... அவன் முகம் அவளை நோக்கி குனிந்தது.

சுட்டு விரலால் அவள் முகத்தை நிமிர்த்தினான்.

அவளது உள்ளத்தின் படபடப்பு இன்னும் அதிகமானது. எதையோ எதிர்பார்ப்பவள் போல கண்களை மூடிக் கொண்டு காத்திருந்தாள்.

அது வீண் போகவில்லை. அவன் அழுத்தமாய் முத்தமிட்டான்.



## 12

சுமா, கோபத்தின் உச்சியில் இருந்தாள். வருகிறேன் என்றவன், ஒரு மணி நேரம் கழித்தும் வரவில்லையே... என்ன ஆயிற்று ஸ்ரீதருக்கு?

பெயருக்குத்தான் இந்தத் திருமணம் என்றவர், மாறி விட்டாரா...

தொடக்கத்தில் நாள் தவறாமல் சந்திக்க வந்தவராயிற்றே. சந்தித்த பின்பு வீட்டுக்குப் போகவும் பிடிக்காமல் தன்னைச் சுற்றி வந்தவர்...

வார்த்தைக்கு வார்த்தை 'எப்போதும் நாம் சேர்ந்து வாழப் போகிறோம் என்று காத்துக் கொண்டிருக்கிறேன்... நீ இருக்க



வேண்டிய இடத்தில் அந்தப் பெண் இருக்கிறாளே' என்று மனம் புழுங்கி வெடித்தவர்...

'நம் திருமணம் நடந்திருந்தால் நாம் தேனிலவில் இருந்திருப்போம்... ச்சே... அத்தனையும் கானல் நீராகி விட்டது' என்று புலம்பித் தீர்த்தவர்...

இப்போது என்ன ஆயிற்று?

என்னைப் பார்க்காமல் அவரால் ஒரு நொடியும் இருக்க முடியாது என்று நினைத்தது பொய்யாகிறதோ...

'நாளை எண்ணிக் கொண்டிருக்கிறேன் சுமா... அந்தப் பெண் எப்போது போய்ச் சேருவாள்... எப்போது நீ எனக்கு மனைவியாவாய் என்று காத்திருக்கிறேன்' என்றெல்லாம் சொன்னது விடுகதையாகி விடுமா என்ன...

இரண்டு மாதமாய்ச் சந்திப்புகள் குறைந்து வருவதை உணர்ந்தாள்.

ஒருவேளை தன்னைத் தவிர்க்கப் பார்க்கிறானோ என்ற சந்தேகமும் எழுந்தது.

அதுதான் அவளைக் கோபத்தின் உச்சிக்குத் தள்ளியது. பொறுமை இழந்து புறப்பட்டாள். அப்போது அவன் வந்தான்.

'உன்னைக் காக்க வச்சுட்டேனா' என்று சொன்னானா என்றால் அதுவும் இல்லை... காயத்தில் காரம் பட்டது போல அவளுக்கு எரிச்சல் வந்தது. அந்த எரிச்சலில் கேட்டாள் - "என்ன ராஜாவுக்கு என் ஞாபகமே வரவில்லையாக்கும்..."

"சுமா... நானே களைத்துப் போய் வந்திருக்கிறேன். எதுக்கு இந்தக் கிண்டல் பேச்சு?" என்றான்.

உண்மையில் அவன் சோர்ந்திருந்தான்.

கோபம் வடிய "என்ன ஸ்ரீதர்... உங்க மனை... வினிதா வுக்கு ஏதேனும்..." என்று கேட்டாள்.

தன் வாயால் வினிதாவை மனைவி என்று குறிப்பிட அவளுக்குப் பிடிக்கவில்லை.

"அவளுக்குக் கொஞ்சம் உடம்பு முடியவில்லை... டாக்டரிடம் அழைத்துப் போக வேண்டியிருந்தது. ஆனால், டாக்டர் ஊரில் இல்லை. நாளை வருகிறாராம். அவளை அழைத்துப் போய் வீட்டில் விட்டுட்டு இங்கு வந்தேன். அதனால்தான் இந்தச் சோர்வு... வர வேண்டாம் என்றுதான் இருந்தேன். என் மனைவிதான், 'சுமா காத்திருப்பாங்க... போய்ப் பாருங்க' என்றாள். அதனால்தான் வந்தேன்."

போதாதா? சுமாவுக்குள் பேய் புகுந்து கொண்டது. அது ஆவேசமாய் ஆட்டம் போட்டது. கஷ்டப்பட்டு அடக்கினாள். வினிதா சொல்லி இவர் வந்தாராக்கும்... அதுவும் 'என் மனைவி' என்று வேறு அழுத்திச் சொல்கிறார்.

ஆக 'அந்தப் பெண்' 'வினிதா' இப்போது 'என் மனைவி'யாகி விட்டதாக்கும்?

கோபத்தையும் எரிச்சலையும் காட்டும் நேரம் இது இல்லை என்று புரிந்தது.

"ஏன் ஸ்ரீதர்... ஒருவேளை... இறுதி நேரம் வந்து விட்டதோ?" கேட்டு விட்டாள்.

"வேண்டாம் சுமா... அந்த மாதிரி பேசாதே. கேட்கவே கஷ்டமாக இருக்கு. என் கண் எதிரே அழகாய் ஓடியாடித் திரிந்தவள் இறக்கப் போவதை நினைக்கவும் பிடிக்க வில்லை." தலையைப் பிடித்துக் கொண்டு சொன்னான், அவன். அவனது குரல் தழுதழுத்தது.



பற்களைக் கடித்தாள், சுமா. "உண்மையும் அதுதானே ஸ்ரீதர். நிதர்சனத்தை தைரியமாய் எதிர்கொள்பவன் புத்திசாலி என்று சொன்னவராயிற்றே நீங்கள். எல்லாம் இப்போது மறந்து போய்விட்டதா என்ன?"

"இந்த மாதிரி சமயத்தில் எப்படிப்பட்ட தைரியசாலியும் கோழையாகி விடுவான், சுமா. அனுபவித்த பின்புதான் புரிகிறது. என்னால் உன்னை முன்போல் அடிக்கடி சந்திக்க முடியாது, சுமா. அவள் இருக்கும் நிலையில் அவள் அருகில் இருக்க வேண்டியது என் கடமை. எப்போது நேரம் கிடைக்குமோ அப்போது உன்னைச் சந்திக்க வருகிறேன்... ஆபீசுக்கு போன் பண்ணாதே. நான் லீவு எடுத்திருக்கிறேன்" என்றவன், புறப்பட்டு விட்டான்.

அவனை ஏதேதோ கேட்டுவிடத் துடித்த நாக்கை கஷ்டப்பட்டு அடக்கி வைத்தாள்.

நிச்சயம் அவனிடத்தில் மாற்றம் இருக்கிறது. அவனுக்கே தெரியாத மாற்றம்.

கொஞ்ச நாட்களாய் 'வினிதாவிற்கு இது பிடிக்கும்', 'வினிதா இப்படி சொன்னாள்' என்றுதான் அதிகமாய் சொல்கிறார்.

கொஞ்ச காலம்தான்... பேசிவிட்டுப் போகட்டும் என்று பொறுத்துக் கொண்டாள்.

இப்போது வினிதாவுக்காக உருகவே தொடங்கி விட்டாரே...


அவளைத் திரும்பியும் பார்க்காமல் அவன் போய் விட்டான்.

தான் எதையோ இழந்து கொண்டிருக்கிறோம் என்று அவளின் உள்மனம் உணர்ந்தது... உணர்த்தியது.

எதை...? ஸ்ரீதரை... அவனது காதலை... அவனோடு வாழ இருந்த வாழ்க்கையை... கனவு கண்ட எதிர்காலத்தை....

மொத்தமாய் அனைத்தையுமே இழப்பதாய்த் தெரிந்தது.

ஸ்ரீதர் கிடைப்பானா? என்ற கேள்வி எழுந்து கொக்கியாய் அவள் இதயத்தை இழுத்தது.



## 13

ஏனோ தெரியவில்லை... கொஞ்ச நாளாய் வினிதா சோர்ந்து இருப்பதாய் ஸ்ரீதருக்குத் தெரிந்தது.

அடிக்கடி சுருண்டு படுத்துக்கொள்ளும் அவளை மருத்துவரிடம் அழைத்துச் சென்றான். "பயப்படும்படியாய் எதுவும் இல்லையே டாக்டர்?" என்று கேட்டான்.

"பயப்பட ஒண்ணுமில்லை. நீங்கள் சொல்லும் சோர்வு... வேறு மாதிரி தெரிகிறது. எதற்கும் இந்தப் பரிசோதனை செய்து பார்ப்போம்" என்று எழுதித் தந்தார்.

சிறுநீர் பரிசோதனை முடிந்தது. முடிவைப் பார்த்துவிட்டு அந்தச் செய்தியை சொன்னார்.

அதைக் கேட்டுவிட்டு அதிர்ந்து போய் "டாக்டர்..." என்று கூவினான், ஸ்ரீதர்.

"பயப்பட வேண்டாம் ஸ்ரீதர். இந்த ஸ்கேனில் மூளைக் கட்டி வளராமல் இருப்பது தெரிகிறது. இன்னொரு நல்ல செய்தி. அமெரிக்காவில் இருந்து நிபுணர் ஒருத்தர்



வருகிறார். அவரிடம் பேசிப் பார்க்கலாம். அவர் நம்பிக்கை தெரிவித்தால் விட்டு விடலாம்... இல்லாவிட்டால் கருவைக் கலைத்து விடலாம்."

மருத்துவரின் வார்த்தைகள், சஞ்சீவினிக் குளிகைகளாய் பலத்தைத் தந்தது.

அதே சமயம் தலைமை மருத்துவர், நம்பிக்கை இல்லாமல் கைவிரித்து விட்டால் என்ன செய்வது என்ற பயமும் எழுந்தது.

அந்த உயிரைக் கலைப்பது எப்படி... அது என் குழந்தை... என் ரத்தம்... அதைக் கலைக்க வேண்டுமா? உடம்பின் ஒவ்வொரு அணுவும் பதறியது.

தட்டிக் கொடுத்தார், மருத்துவர். "கடவுளை நம்புங்க ஸ்ரீதர்" என்றார்.

அவனும் கடவுள் மீது பாரத்தைப் போட்டான்.

வினிதா, தாயான செய்தி அனைவருக்கும் மகிழ்ச்சியைத் தந்தாலும், 'அற்ப ஆயுளை எண்ணிக் கொண்டிருக்கும் அவளால் குழந்தையைப் பெற்றெடுக்க முடியுமா? பெற்றெடுத்தாலும் அவளால் வளர்க்க முடியுமா? அவளுக்கு ஏதாவது ஆகிவிட்டால்...? தாயில்லாக் குழந்தை, பாவம் என்ன செய்யும்?'

இதையெல்லாம் நினைத்தபோது மகிழ்ச்சியைவிட சங்கடம்தான் அதிகமாக ஏற்பட்டது.

'ஒருவேளை, அவளைப் பிழைக்க வைக்க முடியும் என்று அந்த அமெரிக்க மருத்துவர் சொல்லிவிட்டால்...! கடவுளே... அந்த அற்புதத்தை நீ நடத்திக் காட்ட மாட்டாயா? இத்தகைய அதிசயத்தை நீ நடத்தினால்தானே நம்பிக்கை வரும்' மனம் வேண்டியது.

'வினிதாவா? குழந்தையா?' என்று கேள்வி எழுந்தபோது வினிதாதான் என்று முடிவு செய்தான், ஸ்ரீதர்.


அவனுக்கே வியப்பு... சில மாதங்களுக்கு முன் வினிதா இல்லாவிட்டால் சுமா கிடைப்பாள் என்று எண்ணிய தானா இப்படி நினைப்பது!

எப்போது ஏற்பட்டது இந்த மாற்றம்? சுமாவைச் சுற்றி வந்த மனம் எப்போது திசை திரும்பியது!

அவனையும் அறியாமல் மெல்ல மெல்ல உள்ளக் கதவு திறந்திருக்கிறது. தன் மென்மையான பேச்சால், அன்பான பார்வையால் தன்னைக் கட்டி இழுத்திருக்கிறாள், வினிதா. சுத்தமாய்ச் சுமாவின் நினைவு தொலைந்து போய்விட்டது. தன் மனதில் மட்டுமல்ல, நினைவிலும் வினிதாவின் ஆக்கிரமிப்புதான் இருக்கிறது என்பதை உணர்ந்தபோது, அவனுக்கே வியப்பிலும் வியப்பாக இருந்தது.

'எப்படி வந்தது இந்த மாற்றம்? எனக்கே தெரியாமல் என் மனைவி மீது காதல் துளிர்த்து விடுகிறதே!' மகிழ்ச்சியுடன் நினைத்துப் பார்த்தான்.

இந்நிலையில்தான் அமெரிக்க மருத்துவரை அவன் சந்தித்துப் பேசினான்.



## 14

**தா**ய்மையில்தான் ஒரு பெண் முழுமையடைகிறாள் என்பது சத்தியமான வார்த்தை.



தாயாகி இருக்கும்போதுதான் பெண் தன் பிறவியின் பலனை அடைந்துவிட்ட திருப்தியைப் பெறுகிறாள். வயிற்றுச் சுமையைச் சுகமாய் நினைத்துச் சுமக்கிறாள். மகிழ்கிறாள். வாழ்வின் எல்லைக்கோடே தாய்மைதான் என்று நினைக்கிறாள். பூரிக்கிறாள்.

அதே நிலைதான் வினிதாவிற்கு. தனக்குத் திருமணமே சாத்தியமில்லை என்று நினைத்தவளுக்கு இப்போது குழந்தைச் சுமக்கும் பேறு கிடைத்து விட்டது. இது, அதிசயம்தான். சாகக் கிடந்தவளுக்குக் குழந்தை!

மேடிட்ட தன் வயிற்றை மெல்ல தடவிப் பார்த்தபோது உள்ளே குழந்தை குதிப்பது போல சிலிர்ப்பு.

தன் குழந்தை... தன் நினைவாய் விட்டுச் செல்லப் போகும் குழந்தை... ஸ்ரீதருக்குத் தரும் அன்புக் காணிக்கை... காதல் பரிசு!

'பரிசா... இல்லை பாரமா? இப்போது மகிழும் ஸ்ரீதர், பின்னால் குழந்தையை வைத்துக் கொண்டு தவிப்பானோ?'

'அதுசரி... சுமா, மறுதாயாக இருக்க சம்மதிப்பாளா?'

'இந்த விஷயத்தில் சுமாவின் கருத்தைக் கேட்க வேண்டும்... அவளைச் சந்தித்துப் பேச வேண்டும்... ஸ்ரீதரை ஏற்றுக் கொள்பவள் இந்தக் குழந்தையையும் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்... ஏற்றுக் கொள்வாளா?' எனக் கவலைப்பட்டவளுக்கு ஸ்ரீதர் அடிக்கடி தைரியம் சொன்னான்.

"வினிதா... டாக்டர் சொல்வது போல நல்லதையே நினைப்போம். இன்னும் நான்கு மாதம்தான். குழந்தையை ஆபரேஷன் செய்து எடுத்து விடுவதால் உனக்கு வலி

தெரியாது. அதற்குப் பிறகு - இப்போ புதுசா ஏதோ சிகிச்சை பெயர் சொல்கிறார்கள். அதில் கட்டிக் கரைந்து விடலாம் என்று நம்பிக்கையோடு சொல்கிறார் டாக்டர்... நம்பிக்கை தான் வாழ்க்கை வினி..."

'இருந்தும் பிழைப்பதும் சாவதும் 'மதில்மேல் பூனை' போலத்தான் என்று நினைத்துக் கொண்டாள்.

குழந்தை பிறந்துவிட்டால் வாழவேண்டும் என்ற ஆசை இன்னும் உறுதிப்படும். குழந்தைக்காக வாழ வேண்டும். அது நடக்குமா?

'ஒருவேளை தனக்கு ஏதாவது ஒன்று ஆகிவிட்டால்...' அந்த நினைப்பே அவளைத் தீயாகச் சுட்டது.

ஸ்ரீதர், நல்ல தந்தையாக இருந்து குழந்தைக்கு அன்பு காட்டுவான் என்பது உறுதி.

ஆனால்... சுமா...? ஸ்ரீதரின் அன்பைப் பங்கு போட விரும்பாவிட்டால்... குழந்தையை ஒதுக்கி விட்டால்...?

சரி... நானே நேரில் போய் கேட்டுப் பார்த்தால்... குழந்தையை ஏற்றுக் கொள்வாளா? இல்லையா என்பது தெரிந்துவிடும். குழந்தைக்குத் தாய் நீதான் என்று சொன்னால் மறுக்கவா போகிறாள்? பெண் மனம் இளகிவிடுமே!

ஏதோ ஒரு துணியில் அவளுக்கு போன் செய்தாள்; வினிதா ஸ்ரீதர், அன்றைக்கு அவளைச் சந்திக்கப் போகவில்லை என் பதை உறுதிப்படுத்திக் கொண்ட பின் போனில் பேசினாள்.

ஸ்ரீதர், வழக்கமாய் சந்திக்கும் இடம்தான்.

தாய்மை தந்த அழகு சுடர்விட... தாயாகப் போகும் பூரிப்புடன் நின்றிருந்த வினிதாவைப் பொறாமையுடன் பார்த்தாள், சுமா.



'பாவி... என் இடத்தில் இருந்துகொண்டு என் மனதை ஆட்டி வைக்கிறாயே... கண்கள் மட்டும் துப்பாக்கியாக இருந்திருந்தால்... பாவம், வினிதா என்னவாகியிருப் பாளோ?'

வினிதா தாய்மை அடைந்திருக்கும் விஷயத்தை ஸ்ரீதர் சொன்னபோது சுமா திகைத்து, கொதித்துப் போனாள்.

"ஏதோ என்னையே நினைத்துக் கொண்டிருப்பதாய் பசப்பினீங்க... ச்சே... ஆண் பிள்ளை புத்தியைக் காட்டிட் டீங்க... உங்களையே நம்பியிருக்கும் என்னை மோசம் பண்ணிட்டீங்க" முகத்தைத் திருப்பிக் கொண்டு தன் கோபத்தைக் காட்டினாள்.

ஐந்து நிமிடத்துக்குப் பின் கொஞ்சம் தணிந்தவளாய் "நடந்தது நடந்து விட்டது. உங்கள் நிலைமை புரிகிறது. ஸ்ரீதர்! அவளோட கணவனாய் இருக்க வேண்டிய கட்டாயத்தில் இப்படி நடந்து விட்டீர்கள். போகட்டும். ஆனால், என்னை மணந்த பின்பு இது எல்லாமே பழங்கனவு என்று மறந்து விட வேண்டும். என்ன?" என்றாள்.

கனவா? பழங்கனவா?

கனவு - விழித்ததும் மறந்து போகும்... இங்கு நடந்ததைக் கனவு என்று மறக்க எண்ணினாலும் நனவில் குழந்தை இருக்கிறதே... மனசினுள் நெருடல்.

இப்போதும் அந்தக் குழந்தையின் நினைப்பில் ஏதோ கசப்பை உண்டது போல அவளுக்கு முகம் மாறியது.

தன்னைக் கண்டுதான் அந்த முகமாற்றம் என்று நினைத் தாள், வினிதா. தன்னைக் காணவும் அவளுக்குப் பிடிக்க வில்லை. இருந்தும் பேசத்தானே வேண்டும்.

சுமா கேட்டாள் - "என்ன விஷயம்?"

"மன்னிக்கணும் சுமா... எதிர்பார்க்காத அனைத்தும் நடந்துடுச்சு. நீங்கள் இருவரும் எதிர்காலத்தில் சேர்ந்து நன்றாக வாழ வேண்டும் என்ற எண்ணத்துடன்தான் நான் திருமணத்திற்கு ஒப்புக் கொண்டேன். இப்படியாகும் என்று நினைக்கவில்லை. ஸ்ரீதர் என் மீது காட்டிய அன்புக்கும் பரிவுக்கும் நான் தரும் அன்புப் பரிசுதான் என் குழந்தை. சுமா! அதற்காகத்தான் உங்களைப் பார்க்க வந்தேன். எனக்கு ஏதேனும் ஆனால் என் குழந்தையைத் தாயாக இருந்து கவனிப்பீர்களா? இது என் வேண்டுகோள்,, சுமா" கெஞ்சினாள்.

எரிமலையினுள் கொதித்து வெளிவரும் தீப்பிழம்பு எந்த நீரினாலும் அணைந்து போகாது. சுமாவின் மனதினுள் எரிமலையின் தகிப்பு, வினிதாவின் கெஞ்சும் வார்த்தைகளில் அடங்கிப் போக மறுத்தது. தீக்கங்குகளைப் போல வார்த்தைகள் வெளிவந்தன.

"என்னை என்ன இளிச்சவாய்ன்னு நினைத்துக் கொண்டாயா? என் ஸ்ரீதரைப் பறித்துக் கொண்டு மெல்ல அவரை மயக்கிக் கைக்குள் போட்டுக் கொண்டதும் அல்லாமல் ஏதும் தெரியாதவளைப் போல நடிப்பு வேறா? நீ பிழைக்கப் போவதில்லை என்பது சர்வ நிச்சயம். அப்போ... உன்னுடன் உன் குழந்தையும் செத்துடட்டுமே... யாருக்கு வேணும் உன் காதல் பரிசு? நானும் ஸ்ரீதரும் வாழப் போகிற இன்ப வாழ்க்கைக்கு அது இடைஞ்சலாய்த்தான் இருக்கும். அதைவிடப் போய்த் தொலைவது மேல்" கொடூரமான வார்த்தைகள்.

"சுமா..." காதைப் பொத்திக் கொண்டு அலறினாள்.



'இவளிடமா கை ஏந்தி அன்புப் பிச்சைக் கேட்டு வந்தேன்..?'

'எந்தப் பெண்ணுக்கும் தாய்மை உணர்வு இருக்குமே... இவளுக்கு ஏன் இல்லாமல் போனது... இவள் பெண்ணே இல்லையா?'

"ச்சே... நல்லவள் என்று நினைத்து உன்னிடம் பேச வந்தேன் பார்... என்னைத்தான் சொல்ல வேண்டும். ஸ்ரீதர் உன்னை விரும்பினார் என்று நினைக்கவும் எனக்குக் கஷ்டமாக இருக்கிறது. நான் பிழைக்க வேண்டும் என்பது தெய்வத்தோட இச்சையாக இருந்தால் என்னைப் பிழைக்க வைக்கட்டும். இல்லையென்றால்..." மேலே பேச முடியாமல் கண்ணீர் மல்கத் திரும்பினாள்.

சுமா, விரல் சொடுக்கி அவளை அழைத்தாள், "இதோ பார்... எல்லோரும் நீ பிழைக்கணும்னு வேண்டினால் நான் என்ன வேண்டிக் கொள்கிறேன் தெரியுமா? சீக்கிரம் நீ செத்துத் தொலையணும் என்றுதான். தெரிந்துகொள்.. என் வேண்டுதல் பலிக்கத்தான் போகிறது" அவள் முகம் அவலட்சணமாய் மாறியது.

வெடித்து வந்த விம்மலை அடக்கிக் கொண்டு நடந்தாள். அங்கிருந்து ஓடிவிட வேண்டும் என்று ஆசைப்பட்டாலும், அது அவளால் முடியாத செயலாக இருந்தது.

'நான் முட்டாள். இதயமே இல்லாதவளிடம் போய் அன்பைக் காட்டு என்று கேட்க வந்தேனே...' மனதின் சோர்வில் நடையும் தளர்ந்து போனது. பத்தடி போய் இருக்க மாட்டாள். அவள் தோளைத் தொட்டு இழுத்தது, ஒரு கரம்.

ஸ்ரீதர்!

"நீங்களா!" வியப்புடன் வினவினாள், அவள்.


"இங்கே எதற்காக வந்தாய் வினிதா... அதுவும் தன்னந் தனியாய்?"

அவனது குரலில் நெகிழ்ந்து போனாள், வினிதா.

"சுமாவைப் பார்க்க வந்தேன். பார்த்துப் பேசியாகி விட்டது. நீங்கள் வேண்டும் என்றால் இருந்து பேசிவிட்டு வாங்களேன். நான் போகிறேன்" என்றாள்.

"நீ தனியாகச் செல்ல வேண்டாம். வா போகலாம்" அவளை அணைத்தவாறே நடந்தான்.

தன்னைத் திரும்பியும் பார்க்காமல் செல்லும் ஸ்ரீதரை வெறித்துப் பார்த்தாள், சுமா.



## 15

மெட்டி மணிகள் ஒலிக்க நடந்து வந்த மனைவியைக் கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தான், ஸ்ரீதர். அவள் முகத்தில் அழகு மிளிர்ந்தது. நாளுக்கு நாள் அழகு கூடிக் கொண்டு வருவதையும் கவனித்தான்.

'இது தாய்மை தந்த சீதனமா? இல்லை அணையப் போகும் தீபமா?'

அவள் அருகில் வர, அவளது கரங்களைப் பிடித்து அழகை ரசித்தான்.

கைநிறைய கண்ணாடி வளையல்கள்... பல நிறங்களில் அடுக்கி வைத்தது போல.



அன்றைக்குத்தான் அவளுக்கு வளைகாப்பு. இருவரின் பெற்றோரும் சேர்ந்து விமரிசையாய் நடத்தினார்கள். நிறைமாத கர்ப்பிணி என்று அனைவரும் கண்ணும் கருத்துமாய் இருந்தார்கள்.

ஸ்ரீதர், எல்லா வேலைகளையும் ஒதுக்கிவிட்டு அவளுடனேயே பொழுதைக் கழித்தான். அலுவலகத்தை மட்டுமல்ல, சுமாவையும் மறந்தான். வினிதா! அவள்தான் எண்ணத்தில் முழுமையாய் நிறைந்திருந்தாள்.

எல்லா கர்ப்பிணிப் பெண்களைப் போல வினிதாவும் தன் கணவன் அருகில் இருக்க விரும்பினாள். அவன், பக்கத்தில் இருந்ததால் ஏதோ பலம் வந்தது போல உணர்வு.

அவள் ஆசைப்பட்டதையெல்லாம் அவன் வாங்கித் தந்தான். அவள் கேட்காவிட்டாலும், கேட்டுத் தெரிந்து வாங்கி வந்து கொடுத்தான்.

நடராஜனும் கௌசல்யாவும் தன் மகளுக்கு என்னென்ன பிடிக்கும் என்று ஒரு பட்டியல் போட்டு அவனிடம் தந்திருந்தார்கள்.

வினிதா, தானாக விரும்பி அவனிடம் எதுவும் கேட்டதில்லை. தொடக்கத்தில் கணவன் - மனைவி என்ற போர்வையில் நாடகம் நடத்தியபோது அவள் அவனிடம் எதையும் கேட்கக் கூசிப் போனாள். ஸ்ரீதரை தன் கணவனாய் நினைத்துப் பார்க்க இயலாதபோது அவனிடம் எப்படி கேட்க முடியும்?

இந்த ஊமை நாடகத்தில் திரை எப்போது வேண்டுமானாலும் விழலாம்... அதுவரை சேர்ந்திருக்க வேண்டும். அவ்வளவுதான்...

மெல்ல மெல்ல இருவருக்கும் இடையே இருந்த பள்ளம் மறையத் தொடங்கி இருவரும் மனதாலும் உடலாலும் நெருங்கி விட்ட பின்பும் கூட அவள் எதுவும் கேட்டதில்லை.

'ஏதாவது கேட்டு வாங்கிக் கொள்ள மாட்டாளா?' என்றுகூட நினைத்தான், ஸ்ரீதர்.

'நீங்கள் என்னோடு இருந்தால், போதும். எல்லாமே கிடைத்த மாதிரிதான்' என்று சொல்லிவிடும் மனைவியை வினோதமாய்ப் பார்த்தான்.

இவளுக்கு என்று தனியாக ஆசை எதுவும் இல்லையா? மனைவியென்றால் நச்சரிப்பார்களாமே... இவள் மட்டும் ஏன் அப்படி இல்லை? எதுவுமே வேண்டாம் என்று நினைக்கிறாளே... சாவை நினைத்து மனதில் விரக்தியா?

உண்மையில் அவள் மனதில் எந்தவிதக் குறையும் இல்லை.

கிடைத்தது சொற்ப வாழ்க்கை. அதில் எல்லாமே அருமையாய் அமைந்து விட்டது, அவள் அதிருஷ்டம். அன்பான பெற்றோர்கள்... கண்ணுக்குக் கண்ணான கணவன்... இன்னொரு தாய் - தந்தையாய்ப் பாசம் காட்டும் அத்தையும் மாமாவும்... உயிருக்கு உயிரான உடன் பிறப்புகள்... போதுமே. வேறு என்ன வேண்டும்? மனம் நிறைந்த வாழ்க்கையாய் அமைந்து விட்டது.

அன்பு எல்லா உருவத்திலும் வந்து சேர்ந்து விட்டது. இதோ வயிற்றில் துள்ளும் குழந்தையும் தான்... நிச்சயம் இந்த அம்மாவை ஒரு நாள் அன்போடு நினைத்துக் கொள்ளும்...




குழந்தையை வருடுவது போன்ற நினைப்புடன் வயிற்றை அன்போடு தடவிக் கொடுத்தாள். தாயின் கரம் பட்டது உணர்ந்ததோ... அந்தச் சிலிர்ப்பில் உதைத்து எம்பியது.

''அம்மா!'' கூவினாள், அவள்.

இடுப்பில் மின்னல் வெட்டியது போல இருந்தது.

இதுதான் வலியா? அம்மாடி!



16

**வி**னிதாவிற்கு மெல்ல உணர்வு திரும்பிக் கொண்டு இருந்தது. ஏதோ தன்னுள் இருந்த பெருஞ்சுமை குறைந்து போய் உடல் லேசானது போல உணர்வு.

மேடிட்ட வயிறு இப்போது ஒட்டிப் போயிருந்தது... வயிற்றுப் பகுதியில் 'சுருக்' வலி...

குழந்தை பிறந்து விட்டதா? ஆணா? பெண்ணா? அருகில் அமர்ந்திருந்த தாயை அழைத்தாள்.

''அம்மா...''

''என்னம்மா... முழிச்சிட்டியா?'' மகளின் நெற்றியை வாஞ்சையுடன் தடவினாள், கௌசல்யா.

''ஆண் குழந்தையா? பெண்ணா?''

''பெண் குழந்தை... எதுவானால் என்னம்மா?''

''இல்லேம்மா... தெரிந்து கொள்ளத்தான் கேட்டேன். குழந்தையைக் காட்டும்மா.''

''இரும்மா... நர்ஸ் எடுத்துட்டுப் போயிருக்கா...'' சொல்லிக் கொண்டிருக்கும்போதே நர்ஸ் ஒருத்தி, பூக்குவியலாய்க் குழந்தையைக் கொண்டு வந்தாள். கௌசல்யா, சிசுவை வாங்கித் தன் மகளுக்குக் காட்டினாள். தாயாகி விட்ட அந்த மகளும் தன் மகளை ஆசையாய்ப் பார்த்தாள்.

'அழகு என்றால் கொள்ளை அழகு! இது என் குழந்தை! என் மகள் இவள்!' பெருமிதத்துடன் பார்த்துக் கொண்டிருந்தாள். பசும்பாலில் குங்குமப் பூவைக் குழைத்து வைத்த நிறம்... சின்ன வட்ட முகம்... கருமையாய் அடர்த்தியாய் கேசம்... சிப்பியாய் மூடியிருந்த கண்கள்... ரொம்ப சின்ன மூக்கு...சிவப்பாய்ச் சின்னதாய் உதடுகள்... பஞ்சைத் தொட்டது போல மிருதுவான உடல்... வாழைப்பூவை பிரித்தால் தெரியும் பூங்கொத்து போல விரல்கள்... பட்டுப் பாதங்கள்...

இந்தச் சின்ன அழகிய சிட்டுப் பெண் என் குழந்தை! ஸ்ரீதரின் குழந்தை! ஸ்ரீதர், குழந்தையைப் பார்க்கவில்லையா?

''அம்மா! அவர், குழந்தையைப் பார்த்தாரா?'' என்று கேட்டாள்.

''இங்கேயே நகராமல் இருந்தாரும்மா... உனக்கு நல்லபடியாய்க் குழந்தை பிறந்த பின்புதான் இங்கிருந்து போனார். தூக்கமில்லை... சாப்பாடும் இல்லை... பழியாக இங்கேதான் கிடந்தார்... அப்பாதான் காபியாவது சாப்பிடட்டும் என்று வாங்கி வந்து குடிக்க வைத்தார். எல்லாம் இந்தக் குட்டி பண்ணிய வேலை... எல்லோரையும்



தூங்க விடாமல் சிவராத்திரியா செய்துட்டா. இவ அப்பா, மகளைப் பார்த்துட்டுத்தான் நகர்ந்தாருன்னா பார்த்துக் கோயேன். சரி, நீ ஏதாவது குடிக்கிறியா?''

''வேண்டாம்மா.''

அவள் சொல்லும்போது ஸ்ரீதர் வந்து எதிரே நின்றான். பெருமையுடன் அவனைப் பார்த்துப் புன்னகைத்தாள். ஏதோ சாதனைப் படைத்த வீராங்கனையைப் போல்.

''உங்க பெண்ணைப் பார்த்தீர்களா ஸ்ரீதர்!''

''நம்ம பெண்... ரொம்ப அழகு... உன்னைப் போல வினிதா. இல்ல... குட்டி வினிதா!''

குழந்தையைக் கையில் எடுத்துக் கொண்டு மார்புடன் அணைத்துக் கொண்டான். அரை விழி சொப்பனத்தில் சிரித்த மகளைக் கண்டு ஒரே பூரிப்பு!

''வினி... சிரிக்கிறாள் பாரேன்... அப்பான்னு தெரிந்து விட்டது என் குட்டிக்கு!'' மனைவியிடம் நீட்டினான்.

''என்னடா செல்லம்... அப்பாகிட்டே போனியா... அவரைப் பார்த்துச் சிரித்தாயா... என் குட்டி செல்லம்...''

கணவன் - மனைவி இடையில் வந்த சின்ன ஜீவன், உறவுப் பாலமாய் நின்று இரு உள்ளங்களையும் இணைத்து நெருக்கத்தை ஏற்படுத்தியது. அவர்களது வாழ்க்கையை அற்புத சொர்க்கமாக்கியது.

இருவரையும் தனியே விட்டுச் சென்ற தாய், திரும்பி வந்தாள்.

''வினிதா... ஆபரேஷன் ஆன உடம்பும்மா... ஓய்வு எடுத்துக்கணும்... பேசாமல் தூங்கும்மா'' என்றவள்,

ஸ்ரீதரிடம் "மாப்பிள்ளை... டாக்டர் மருந்துச் சீட்டு கொடுத்திருக்கிறார். வாங்கி வரணும்" என்றாள்.

குழந்தையை மாமியாரிடம் கொடுத்துவிட்டு மருந்துச் சீட்டை வாங்கிக் கொண்டு சென்றான், ஸ்ரீதர்.

குழந்தையைத் தொட்டிலில் படுக்க வைத்துவிட்டு மகள் அருகில் வந்தாள், கௌசல்யா.

"தூங்கும்மா வினிதா... பச்ச உடம்பு.. இப்படி கண்முழிச்சிப் பேசக்கூடாது.."

"தூக்கம் வரலையேம்மா.."

"வரும். கண்களை மூடு."

ஒரு குழந்தைக்குத் தாயாகிவிட்ட தன் மகளைக் குழந்தையாய் நினைத்து அதட்டினாள், கௌசல்யா.

தாய் சொன்னது போல சிறிது நேரத்தில் உறங்கிவிட்டாள், வினிதா.,

குழந்தை பிறந்து இருபது நாள் ஓடிவிட்டன.

ஒருவேளை, குழந்தையோடு நேரத்தைக் கழிப்பதால் நாட்கள் பறப்பது போல் தெரிகிறதோ!

குழந்தையின் சிரிப்பில் தன் நோயைச் சுத்தமாய் மறந்து போனாள்.

தலைவலியும் எப்போதும் போல வந்து போனது. தாகம்.. தூக்கம்.. பசி போல மண்டை வலியும் ஒன்றாகி விட்டது.

குழந்தை வளர வளர உயிர் வாழவேண்டும் என்ற ஆசையும் சேர்ந்து வளர்ந்தது.



குழந்தை, சுமாவிடம் போகக்கூடாது. குழந்தை மீது அவளுடைய நிழலும் படக்கூடாது என்ற வைராக்கியமும் எழுந்தது.

குழந்தை சிரிக்கத் தொடங்கியது. தாயின் முகம் பார்த்து உதட்டைக் குவித்தது. குப்புற விழுந்து மூக்கை நசுக்கிக் கொண்டாள். பொருள்களை பிடித்து இழுத்து உடைத்தாள்.

ஸ்ரீதர், அலுவலகத்துக்குப் புறப்படுவது அறிந்து கொண்டு அவனிடம் தாவி தாய்க்கு 'டாடா' காட்டினாள். பார்த்துப் பார்த்து வினிதா உள்ளம் பூரித்துப் போனாள்.

குழந்தையைத் தூக்கிகொண்டு அடிக்கடி தாயின் வீட்டிற்குச் சென்றாள். அதுவும் காரணமாகத்தான்.

குழந்தை தன் வீட்டோடு ஒன்ற வேண்டும்... தன் வீட்டினருடன் பழக வேண்டும்.. அப்போதுதான் தனக்கு நிம்மதி.. இறந்தபின்பு தன் ஆத்மாவும் சாந்தியடையும்.

சுமாவிடம் இருந்து தன் குழந்தையைக் காப்பாற்ற இதுதான் வழியென்று நினைத்து அதைச் செயல்படுத்தினாள்.

ஸ்ரீதரும் பெரும்பாலும் குழந்தையுடனே, நேரத்தைக் கழித்தான்.

வினிதா, தாய் வீட்டில் இருந்தால் அங்கும் வந்துவிடுவான்.

என்றைக்கு, 'குழந்தையும் செத்து தொலையட்டும்' என்றாளோ அன்றே சுமா மீது இருந்த நல்லெண்ணம், பச்சாதாபம் எல்லாமே செத்துப்போய்விட்டன.


அந்த மாதிரி கொடூர மனம் படைத்தவள், ஸ்ரீதருக்கு ஏற்றவள் இல்லை.. இருவரும் பொருந்தா மீனதுடன்

வாழ்வது நிச்சயம்.. தான் இப்போது உணர்ந்துகொண்டது போல ஒருநாள் ஸ்ரீதரும் அதை உணருவான்.. நிச்சயம் உணரவேண்டும். சுமாவின் சுயரூபத்தை ஒருநாள் அறியத்தான் போகிறான்...

குழந்தை, தன் தந்தை - தாயை நெருக்கமாய் வைத்தது போல.. சுமாவுக்கும் ஸ்ரீதருக்கும் இடையே பள்ளத்தையே உருவாக்கியிருந்தாள். தன் மகளையே சுற்றி வந்த ஸ்ரீதர்,'சுமா' என்பவள் தனக்காகக் காத்திருப்பாள் என்பதை மறந்தே போய்விட்டான். அதுவரையில் மகிழ்ச்சிதான்...

அந்த மகிழ்ச்சியுடன் அறுவை சிகிச்சைக்கு வினிதா தயாரானாள்.

அந்த நாளும் வந்து சேர்ந்தது.



17

இரவு முழுவதும் தூக்கம் வராமல் புரண்டு படுத்தான், ஸ்ரீதர்.

எப்படி தூக்கம் வரும்..? நாளை வினிதாவின் தலைவிதி தெரிந்துவிடும். வாழ்வா? சாவா? என்ற அவளின் நீண்ட நாள் கேள்விக்குப் பதிலும் கிடைத்துவிடும்..

'வாழ்வாக இருக்க வேண்டும்' என்று அவன் மனம் வேண்டியது.

'சாவாக இருந்துவிடக்கூடாதே' என்று இதயம் துடித்தது.

இந்த உணர்வுப் போராட்டத்தில் எப்படி தூக்கம் வரும்?



மருத்துவமனையில் சேருவதற்கு முன் கணவனிடம் மனம் விட்டுப் பேசினாள், வினிதா.

''ஸ்ரீதர்..! தெரியாமல் நான் ஏதாவது தவறு செய்திருக்கலாம். அப்படியிருந்தால் என்னை மன்னித்துவிடுங்கள். எனக்கு ஒரு வேளை ஏதேனும் நேர்ந்தால்...''

''வினிதா..''

''ஒரு வேளை, நேர்ந்தால்... உங்கள் விருப்பப்படியே சுமாவை மணந்துகொள்ளுங்கள்..''

''எதுக்கு இப்போ அந்தப் பேச்சு வினி..?''

''என்ன ஸ்ரீதர்..! ஏற்கனவே முடிவு செய்த விஷயம்தான்... பேசுவதில் தப்பில்லையே.. என் விருப்பத்தைச் சொல்லி விடுகிறேன்... சுமா உங்களுக்கு மனைவியானால் நம் குழந்தையை என் தாயாரிடம் விட்டுவிடுங்கள்.. செய்வீர்களா ஸ்ரீதர்...?''

''வினிதா.. நீ பிழைத்துக்கொள்வாய்..''

''சரி.. அப்படியே நம்புவோம்.. ஒருவேளை, ஏதேனும் விபரீதமாகிவிட்டால்.. அதையும் நினைக்கவேண்டாமா..? அதுதான் நீங்க எனக்கு வாக்கு கொடுக்க வேண்டும். இப்படி சொல்வதற்காக மன்னிக்கணும் ஸ்ரீதர்! சுமா, உங்களுக்கு ஆசை மனைவியாய் இருக்க முடியும். ஆனால் என் குழந்தைக்கு அன்புத் தாயாக இருப்பாள் என்பது சாத்தியமில்லை..''

அவனும் அவளுடைய திருப்திக்காக வாக்கு தந்தான்.

அதற்குப்பின்தான் வினிதாவுக்கு உறக்கம் வந்தது. ஆனால் ஸ்ரீதருக்குத் தூக்கம் போய்விட்டது.

'வினிதா ஏன் எப்படிச் சொன்னாள்..? ஒருவேளை அவளுடைய உள்ளுணர்வில் ஏதாவது தோன்றி இருக்குமோ....? அவள் பிழைத்து வருவாளா.. இல்லை...' நினைக்கவே உடலும், உள்ளமும் பதறின.

எப்போது விடியும் என்று விழித்திருந்து, விடிந்தவுடன் குழந்தையைத் தூக்கிக்கொண்டு மருத்துவமனைக்கு ஓடினான்.

வினிதா, குழந்தையைப் பார்க்க ஆசைப்படுவாள். அவள், தயாராக இருந்தாள். அறுவை சிகிச்சை அறைக்குரிய உடை அணிந்துகொண்டு.. நகைகளையெல்லாம் கழற்றி வைத்துவிட்டுக் காத்திருந்தாள்.

ஸ்ரீதர் உள்ளே வந்ததும் அவனிடம் நகைகளை ஒப்படைத்து விட்டனள்.

பின்னாலேயே ஸ்ரீதரின் பெற்றோரும், வினிதாவின் பெற்றோரும் வந்துவிட்டனர்.

கௌசல்யா, பொங்கி வந்த அழுகையை அடக்க சிரமப்பட்டாள். 'மகளுக்கு முன்னால் அழக்கூடாது.. தைரியம் சொல்லணும்.. இல்லாவிட்டால் அவளும் கலங்கிவிடுவாள்...'

நடராஜனுக்கும் நெஞ்சு வெடிப்பது போல வேதனை இருந்தபோதும் அவர் எளிதாகக் கட்டுப்படுத்திக்கொண்டார்.

மகளை வருடித் தந்துவிட்டு, ''எதுவும் பயமில்லை வினிதா... டாக்டர் சொல்லிவிட்டார்.. இதெல்லாம் இப்போ சாதாரணமாகிடுச்சு.. சீக்கிரம் முடிஞ்சிடும்..'' என்று தைரியமளித்தார்.

ஸ்டிரெச்சரில் படுக்க வைத்தார்கள்.. அவளைத் தள்ளிச் செல்லும்போது ஸ்ரீதரின் நெஞ்சை துக்கம் அடைத்தது. கூடவே அவனும் நடந்து வந்தான்.



குழந்தையைப் பார்த்துப் புன்னகைத்துவிட்டு, ''என் கண்ணம்மா.. மறுபடியும் உன்னைப் பார்ப்பேனோ இல்லையோ..'' என்றாள், வினிதா.

அவளின் கண்களில் நீர் கோர்த்து நின்றது.

ஆபரேஷன் தியேட்டர் முன் ஸ்டிரெச்சர் நின்றது.

''ஒரு நிமிடம்.. குழந்தைக்கு ஒரே ஒரு முத்தம் கொடுக்கிறேன்..'' என்றாள்.

ஸ்ரீதர், குழந்தையுடன் குனிந்தான்.

குழந்தையின் பட்டுக் கன்னத்தில் முத்தமிட்டாள்.

''வரட்டுமா ஸ்ரீதர்.. குழந்தை.. பத்திரம்...'' கண்களில் ஏக்கம் தெரிய, அவள் சொன்னாள்.

அவன் தவித்துப் போனான்.

''வினி.. வினிம்மா.. நிச்சயம் எனக்காக... என் குழந்தைக்காகத் திரும்பி வருவாய்.. ஆபரேஷன் நல்லபடியாக நடக்கும்..''

நர்ஸ் இருக்கிறாள் என்றும் பார்க்காமல், அவளது நெற்றியில் அழுத்தமாய் முத்தமிட்டான்.

ஸ்டிரெச்சர் உள்ளே போனது.

'இதயம் அடித்துக்கொள்கிறது' என்பதை அன்றைக்குத் தான் அனைவரும் நன்றாக உணர்ந்தனர்.

உள்ளே பலமாய் நடுங்கிக்கொண்டிருந்தனர்.

நிமிடங்கள் கரைந்தன. மணிகளும்தான்..

''ஸ்ரீதர்...''

அறுவை அறைக் கதவின்மேல் எரியும் சிவப்பு விளக்கையே பார்த்துக்கொண்டிருந்த ஸ்ரீதர், திடுக்கிட்டுத் திரும்பினான்.

அங்கே சுமா...

இவள் எதற்கு இங்கே வந்தாள்?

யோசித்தான்.

அவனுக்கே ஒரு மாதிரியாய் இருந்தது.

'அனைவரின் முன்னால் உரிமையுடன் அழைக்கிறாளே..'

மனம் கூசியது.

வினிதாவை மருமகளாகப் பார்த்துப் பழகி ஏற்றுக்கொண்ட ராஜகோபாலன் - சுசிலா தம்பதியர், சுமாவை மறந்தே போயினர்.

அவர்களது அன்பை எல்லாம் வாரி வழித்து முடித்துக் கொண்டாள், வினிதா.

வினிதாவை மருமகளாய்ப் பார்த்த கண்கள், இப்போது சுமாவைப் பார்த்ததும் வெறுப்பைக் கக்கின...

'என்ன பெண் இவள்..? வினிதா, வாழ்வா.. சாவா என்று போராடிக்கொண்டிருக்கும்போது, ஸ்ரீதரைச் சந்திக்க வந்துவிட்டாளே..!'

'உயிர் எப்போது போகும்.. உரிமைகொண்டாடலாம்னு வந்துவிட்டாளா?'

அவளைப் பார்த்தபோது பிணம் எப்போது விழும் என்று பிடுங்கித் தின்ன காத்திருக்கும் வல்லூறின் நினைவுதான் வந்தது.

வெளிப்படையாகவே அவளைப் பார்த்து முகம் சுழித் தனர். ''இவளுக்கு விவஸ்தையே கிடையாதா?''



அவள் காதுபட முணுமுணுத்தாள், சுசிலா.

அவள் யார்? ஏன் வந்திருக்கிறாள் என்று புரிந்துகொள்ள முடியாத நிலையில் நடராஜனும் கௌசல்யாவும் இருந்தனர்.

''வினிதாவிற்கு ஆபரேஷன் ஆகிவிட்டதா?'' என்று கேட்டாள், சுமா.

''உஷ்.. மெல்ல... இங்கு சத்தம் போடக்கூடாது வா... அங்கே போய் பேசுவோம்..''

சுமாவை அழைத்துக்கொண்டு கட்டடத்தின் ஓரமாய்ச் சென்றான், ஸ்ரீதர்.

''நீ ஏன் இங்கு வந்தாய் சுமா?'' அவனையும் அறியாமல் கேட்டுவிட்டான்.

''நன்றாக இருக்கிறது. இந்த நேரத்தில் நானும் இருக்க வேண்டாமா ஸ்ரீதர்..?''

''பரவாயில்லையே.. வினிதாவின் மேல் உனக்கும் அன்பும் இரக்கமும் வந்துவிட்டதோ..!''

''கேலியா ஸ்ரீதர்..! வினிதா மீது அன்பு... பரிதாபம் என்று நடிக்க எனக்கு வாரது. அவள் மேல் எனக்கு ஏன் அன்பு ஏற்படணும்..? அவள் என் வாழ்க்கையைப் பறித்துக் கொண்டவள்.''

''இல்லை சுமா.. நீ கொடுத்ததை அவள் எடுத்துக் கொண்டாள். அவ்வளவுதான்!''

''அப்படியே இருக்கட்டும். நான் இருக்க வேண்டிய இடத்தில் அவள் இருக்கிறாள்.. நான் மட்டுமில்லை.. எந்தப் பெண்ணும் இதைத் தாங்கிக்கொள்ளமாட்டாள்..''

''பின் எதற்காக வந்தாய்..?''

அவள் ஏதும் பேசாமல் எங்கேயோ வெறித்தாள்.

"நீதான் வெளிப்படையாகப் பேசுவாயே... சொல்லேன்.."

"எனக்கென்ன தயக்கம்.. அவள் வாழ்க்கையின் முடிவில் என் வாழ்க்கையின் தொடக்கம் இருக்கிறது. நீங்களும் ஒரு காலத்தில் இதைத்தான் வேண்டி, இதற்காகத்தான் காத்துக்கொண்டிருந்தீங்க.. இந்த நல்ல தருணத்தில் இருவரும் சேர்ந்து இருக்கலாமே என்றுதான் வந்தேன்..."

"....."

"ஒண்ணு சொல்றேன் ஸ்ரீதர்."

"சொல்" அவனது தாடை இறுகி நின்றது.

"வினிதா பிழைப்பது என்பது நடக்காத ஒன்று."

"அப்படியா.. ஏன்?"

"ஏன்னா, இதுநாள் வரை நான் அதைத்தானே வேண்டுகிறேன்."

அவள் பேசி முடிக்கட்டும் என்று அவன் மௌனம் காத்தான்.

அதைத் தவறாக எடுத்துக்கொண்டு குதூகலத்துடன் தொடர்ந்தாள்,சுமா.

"ஸ்ரீதர்! அவள் போய்விட்டால் குழந்தையை அவளுடைய பெற்றவர்களிடம் விட்டுவிடுங்கள். எனக்கு இன்னொருத்தி குழந்தைக்குத் தாயாக இருக்க துளியும் விருப்பமில்லை."

"ஒருவேளை அவள் பிழைத்துவிட்டால்.." நிதானமாகக் கேட்டான்.

அவள் விழித்தாள்.

"சொல் சுமா.. வினிதா பிழைத்து வந்தால் என்ன செய்யலாம்?"



"அவள் பிழைக்க மாட்டாள்.. பிழைக்கக் கூடாது.."

"பளார்.."

கன்னத்தில் இடி இறங்கியது போல உணர்ந்தாள், சுமா.

"என் மனைவி பிழைக்கக்கூடாது என்று சொல்ல நீ யார்? வெளியே போடி.."


"ஸ்ரீதர்.. நான்.."

"எதுவும் பேசாதே.. என் வேண்டுதலில் அவள் பிழைப்பாள். அவள் பிழைக்காவிட்டால் அவளின் நினைவே துணை.. குழந்தையை அவளோட ஞாபகார்த்தமாய் வளர்த்து ஆளாக்குவதில் என் காலத்தைக் கழித்துவிடுவேன்.,.. அது போதும் எனக்கு.. நீ பேசாமல் போய்விடு.."

அவளைத் திரும்பியும் பார்க்காமல் நடந்தான்.

'தெய்வமே.. இதுவரையில் எனக்கு என்று எதுவும் வேண்டியதில்லை. இதோ இப்போது வேண்டுகிறேன். என் வினிதாவை எனக்குக் கொடுத்துவிடு... என் மனைவிக்கு உயிர்ப்பிச்சை தா.. எனக்காக.. என் குழந்தைக்காக' மனதினுள் மனமுருகி வேண்டினான்.

ஆபரேஷன் தியேட்டரை நெருங்கினான். அறையின் கதவு திறந்தது.



# 18

**பா**ற்கடலில் இருந்து வெளிப்பட்டது மட்டும்தான் அமிர்தமா? யார் சொன்னது? இதோ மருத்துவரின் வாயிலிருந்து வந்த வார்த்தைகளும் அமிர்தம்தான்.

ஆம்... அத்தனை உள்ளங்களையும் குளிர்வித்தது. ஸ்ரீதரின் நம்பிக்கைக்கு உயிர் கொடுத்தது - வினிதா பிழைத்துவிட்டாள்! இனி அவளது உயிருக்கு ஆபத்தில்லை.

கண்ணீர் மல்க கையெடுத்து கும்பிட்டனர், பெற்றவர்கள். அவர்களின் கண்களுக்கு மருத்துவர் தெய்வமாகத் தெரிந்தார்.

எமனுடன் போராடி மீண்டு வந்த மகளைப் பார்த்து மகிழ்ச்சிப் பெருக்கில் திக்குமுக்காடிப் போனார்கள். 'இனி நம் மகளுக்கு மரண பயம் இல்லை.. நீண்ட ஆயுசு அவளுக்கு' நினைத்தார்கள்.

அது போதும்! கண்களைத் துடைத்துக் கொண்டனர். மானசீகமாய் கடவுளுக்குக் கோடி நன்றி கூறினார்கள். தம் மருமகள் இனி சாசுவதமாய் தம்முடன் இருக்கப் போகிறாள் என்ற நினைப்பில் அகமும் முகமும் மலர்ந்துபோனார்கள், சுசிலாவும், ராஜகோபாலனும்.

அதெல்லாம் போகட்டும்.. பிள்ளையின் ஜாதகத்தைக் குறைக் கூறினார்களே சுமா வீட்டினர். ஜாதக தோஷம் என்று அவர்கள் பிதற்றியதெல்லாம் பொய்யாகிப் போனதில் இரட்டிப்பு மகிழ்ச்சி.

எப்படியோ வினிதா மறுபிறவி எடுத்தது போல பிழைத்து விட்டாள். மகன் வாழ்க்கையும் தப்பித்தது.

மனசுக்குள் நிம்மதிப் பெருமூச்சு.

எதுவுமே மனிதனின் கையில் இல்லை. ஆண்டவனின் சித்தம் எப்படியோ அப்படித்தான் நடக்கும் என்பது கண்கூடாய் தெரிந்தது. உண்மையில் இது அற்புதம்தான்! கடவுள் செய்த அற்புதம்!



பிழைப்பது அரிது என்று உறுதியாய் சொன்ன மருத்துவரே வியக்கும்படி பிழைத்துவிட்டாள், வினிதா. நினைத்து நினைத்து மனம் வியந்தது. ஸ்ரீதரோ.. சொல்லவே வேண்டாம். மனமும் மெய்யும் சிலிர்த்துப் போயின.

'இனி வினிதா என் இதயத்து ராணியாய்.. என் இல்லத்து அரசியாய்.. என் குடும்ப விளக்காய்.. என் குழந்தைக்குத் தாயாய் இருக்கப் போகிறாள்' பூரிப்பில் மனம் விம்மியது.

அந்த ஆனந்தத்தில் சுமாவின் நினைவு சுத்தமாய் மறைந்து போனது.

அவனது மனம் என்னும் தடாகத்தில் முழுவதுமாய் பூத்திருக்கும் தாமரையாய் வினிதாவே நிறைந்திருந்தாள். அவளை விட்டு விலகவும் மனமில்லாமல் அருகிலேயே இருந்தான்.

''மாப்பிள்ளை.. நாங்க பார்த்துக்கிறோம். நீங்க போய் ஓய்வெடுங்கள்'' கவுசல்யா சொல்லவும்...

''சரிடா.. உன் பொண்டாட்டிதான். அதுக்காக இப்படியா? யாரையும் கிட்ட விடாமல் இங்கேயே உட்கார்ந்துகொண்டு... அசடு... போ. போய் உன் வேலையைக் கவனி. குழந்தைக்கு நீ அவசியம். அம்மா நினைப்பில் அவ ஏங்கக்கூடாது பார்'' ராஜகோபாலனும் மகனைக் கேலி செய்து பேச..

''வேணாம் மாமா.. குழந்தையை நான் கவனிக்கிறேன். அவ என்கிட்ட சமர்த்தா இருப்பா'' சந்தியா சொன்னாள்.

''அட.. நீ என்னம்மா.. அப்படியாவது இங்கிருந்து நகரட்டும்னு சொன்னால்.. காரியத்தைக் கெடுத்திடுவே போலிருக்கே. இவனை விட்டால் இங்கேயே தவம் செய்யத் தொடங்கிவிடுவான். அதான்..''

"சரி.. நான் புறப்படுறேன்ப்பா.. வினியைக் கவனமா பார்த்துக்கொள்ளுங்கள் அத்தை.. மறுபடியும் வந்து பார்க்கிறேன்."

"சரிடா.. புறப்படு."

"அப்பா.. ஏதாவது வேணும்னா எனக்கு போன் பண்ணுங்க."

"சரி.. நீ கிளம்பு."

ஏதோ ஒரு தவிப்புடன் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த தன் மனைவியைப் பார்த்தான்.

"வலின்னு வினி முனகினால் உடனே டாக்டரை அழைத்து ஊசி போடச் சொல்லுங்க.. வலி தாங்கமாட்டா.. பாவம்.."

"அதெல்லாம் பெத்தவங்களுக்குத் தெரியும்டா.. நீ புறப்படு."

"சரி. வர்றேன்.. சொன்னது நினைவில் இருக்கட்டும். 'டிரிப்ஸ்' தீர்றதுக்கு முன்னால் நர்சை அழைத்து மாத்தச் சொல்லுங்க அத்தை."

"அடடா.. இது சரிப்படாது. நானே இவனை அழைத்துக் கொண்டுபோய் விட்டு வர்றேன்.. இப்ப கிளம்பறியா? இல்லே... உன்னை தரதரன்னு இழுத்துக்கொண்டு போகட்டுமா?"

அசட்டுச் சிரிப்புடன் அவன் வெளியேறுவதைப் பார்த்து அனைவரும் சிரித்தனர்.

எப்படி இருந்தவன் எப்படி மாறிவிட்டான்? அதில் அனைவருக்கும் ஆச்சரியமே...

விதியே என்று வினிதாவின் கழுத்தில் தாலிகட்டியவன்... சுமாவையே நினைத்து உருகியவன்.. 'பெயருக்குத்தான் நீ என் மனைவி' என்று வீராப்பாகப் பேசியவன்... இப்போது என்னவென்றால் 'வினி... வினி..' என்று குட்டி போட்ட பூனையாய் சுற்றிச் சுற்றி வருகிறான் என்றால்... தாம்பத்திய வாழ்க்கைக்கு அத்தனை சக்தி இருக்கிறது என்றுதானே அர்த்தம்.



எண்ணமெல்லாம் வினிதாவே நிறைந்திருக்க அந்த நினைப்பு தந்த புன்னகையுடன் மாடிப் படிகளில் அவன் இறங்கும்போது அவனைத் தாண்டி 'தபதப'வென்று ஓடினார்கள் சிலர்.

பின்னால் இரண்டு மருத்துவமனை ஊழியர்கள் 'ஸ்ட்ரெச்சரை' தள்ளிக்கொண்டு விரைந்தார்கள்.

அவர்களிடம் பரபரப்பு.. முகத்தில் பரிதவிப்பு.. ஆபத்தான நிலையில் நோயாளி வந்திருக்க வேண்டும்.. அதுதான் இந்தப் பரபரப்பு என்று நினைத்தான்.

கீழ்தளம் இறங்கி வந்தபோது கூட்டமாய் நின்று பேசிக்கொண்டிருந்தனர். "கண் முன்னே விபத்துப்பா.. கண்றாவியைப் பார்க்க முடியலே... வயசுப்பொண்ணு.. பாவம்.. ரோட்டைக் கடக்கிறப்போ வேகமா வந்த காரு மோதிட்டது.. உசிரு இருக்கே இல்லையோ தெரியலே.."

"அட பாவமே.. யார் பெத்த பெண்ணோ?"

வெளியே வந்து சாலையை எட்டிப் பார்த்தான், ஸ்ரீதர்.

மக்கள் திரள், சாலையை மொய்த்திருந்தது. வண்டிகள் சாதாரணமாய் உரசினாலே சேர்ந்துவிடும் கூட்டம்... ஒரு உயிரையே அடித்துப் போட்டிருக்கிறது என்றால் கேட்க வேண்டுமா என்ன?

"தள்ளுங்கப்பா... தள்ளுங்க.."

கொஞ்சம் தூரத்தில் ஸ்ட்ரெச்சரைத் தள்ளிக்கொண்டு வரும் மருத்துவமனை ஊழியர்களின் கூவலில் கூட்டம் கொஞ்சம் விலகிக்கொண்டது. பிடுங்கி எறிந்த கீரைச் செடியாய் ஸ்ட்ரெச்சரில் துவண்டிருந்த பெண்ணின் உடம்பில் ரத்த கிளறியாய் காயங்கள்.

எங்கே அடிபட்டுள்ளது என்று அனுமானிக்க முடியாமல் அங்கங்கே சிவப்பு திட்டுகள்.. தலையில் வேறு அடிபட்டிருக்க வேண்டும்.. இரத்தம் வழிந்திருந்தது.. அது உறைந்துபோய் விகாரமாய் தெரிந்தது.

ஒரு பார்வை பார்த்துவிட்டு சகிக்காமல் பார்வையைத் திருப்பிக்கொண்டான். முகமே தெரியாதவாறு இரத்தம்.. கோரம்.. குங்குமத்தைக் குழப்பித் தீட்டியது போல.

'இந்தப் பெண் பிழைப்பாளா? பிழைக்கணும்' - நினைத்தான்.

ஒரு உயிரின் விலை எத்தகையது என்பதை அனுபவத்தால் அறிந்துகொண்ட ஸ்ரீதரின் மனம், அந்தப் பெண்ணுக்காக வேண்டிக்கொண்டது.

மனதில் வேதனைப் புழு அரிக்க, அங்கே இருக்கவும் பிடிக்காமல் திரும்பினான். உள்ளம் கனக்க காலெடுத்து வைத்தவனைக் காவலரின் வார்த்தைகள் இழுத்து நிறுத்தின.

''பேரு சுமா.. அவங்க கைப்பையில் அடையாள அட்டையைப் பார்த்துவிட்டுதான் இந்த விலாசத்துக்கு போன் பண்றோம். விபத்தில் அடிபட்டு ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டு இருக்காங்க.. விலாசம் குறிச்சுக்குங்க... அடி பலமா பட்டிருக்கு..''

ஸ்ரீதர் காதில் விழுந்ததை நம்ப மறுத்தான்.




சுமாவா... அவள்தானா?

இருக்காது... இந்த ஊரில் ஒரு சுமாதானா.. வேறு யாராவது இருக்கலாம்... ஆனால், இங்கே வந்தது அவள்தானோ?

மனம் படபடத்தது.

போலீசிடம் கேட்டு சுமாவேதான் எனத் தெரிந்ததும் முகம் வெளுத்தது.

தலை 'கிர்' என்று சுற்ற அப்படியே தலையைப் பிடித்துக்கொண்டு அமர்ந்தான்.



19

**''எ**ன்னடா.. இன்னும் இங்கேயாவா இருக்கே? சரியாப் போச்சு போ.. உன் பொண்டாட்டி 'டிஸ்சார்ஜ்' ஆகிற வரைக்கும் நகருவதா உத்தேசம் இல்லையாக்கும்.. பேசாம அவ அறையிலேயே... டேய் ஸ்ரீதர்.. என்ன ஆச்சு? ஏன் இப்படி பேயறைந்த மாதிரி இருக்கே.. உடம்புக்கு ஏதாவது..?'' ராஜகோபாலன், மகன் அருகே அமர்ந்து கொண்டு கேட்டார்.

தந்தையைச் சிவந்த கண்களால் ஏறிட்டான், மகன்.

''என்னடா சமாச்சாரம்.. எதற்கு இப்படி இடி விழுந்த மாதிரி கலங்கிப் போய் உட்கார்ந்திருக்கே?''

''அப்பா.. சுமா விபத்தில் சிக்கி ஆபத்தான நிலையில் இங்கே கொண்டு வந்திருக்கிறாங்க..''

மகளை உற்றுப் பார்த்தார், ராஜகோபாலன். "ஸ்ரீதர், நீ உண்மையை ஒளிக்காமல் சொல்... சுமாவை இன்னும் நேசிக்கிறாயா? நல்லா யோசிச்சு பதில் சொல்.."

"இப்ப எதுக்குப்பா இந்தக் கேள்வியெல்லாம்."

"நான் தெரிஞ்சுக்கணும்டா.... அவள் மேல் உனக்குக் காதல் மாறாமல் இருக்கான்னு தெரியணும். ஏன்னா ஒரே சமயத்தில் இரண்டு பெண்களை நேசிக்கிறது தப்பு.."

'இல்லை' என்பது போல தலையசைத்தான், ஸ்ரீதர்.

"நல்லது.. இப்படி நீ உட்கார்ந்து இருப்பதைப் பார்த்து சந்தேகம் வந்துச்சு. உன் பதிலைக் கேட்டதும்தான் நிம்மதி வந்தது."

"அதில்லேப்பா.. குற்ற உணர்வு என்னை முள்ளாக் குத்திக்கொண்டு இருக்குப்பா... அவகிட்டே கொஞ்சம் கடுமையா பேசிட்டேன். ஒருவேளை அவளுக்கு ஏதாவது ஆகிவிட்டால் அதுக்கு நானே காரணம்னு காலம் முழுக்க மனசாட்சி குத்துமேப்பா.."

"என்னடா இது..? பொம்பளை மாதிரி புலம்பிக்கிட்டு நீ 'டென்ஷன்'ல ஏதோ பேசியிருக்கலாம். அதனால்தான் இப்படி ஆச்சுன்னு நினைக்கிறது மடத்தனம்... யாரும் எதுக்கும் காரணம் இல்லை.. எது நடக்கணும்னு இருக்கோ அது நடந்தே தீரும்.. எழுந்திரு... என்ன செய்யலாம்னு யோசி.. நம்மால் ஏதாவது ஒத்தாசை பண்ணமுடியுமான்னு பாரு.. அவங்க வீட்டிலிருந்து யாரும் வந்தாங்களா..? வா.. முதலில் போய் விசாரிக்கலாம். அவளோட நிலைமை என்னன்னு தெரிந்துகொண்டு, அப்புறம் மேற்கொண்டு என்ன செய்யலாம்னு பார்ப்போம்.."



தந்தை தைரியம் சொல்ல, எழுந்து அவருடன் சென்றான்.

அவசர சிகிச்சைப் பிரிவை நோக்கிச் சென்றனர்.

"சுமாவின் நிலை, கவலைக்கிடம். இருபத்து நான்கு மணி நேரம் கழிந்தால்தான் சொல்ல முடியும்..." என்றார், மருத்துவர்.

ஸ்ரீதருக்கு நெஞ்சு வலித்தது.

'சுமா.. நீ பிழைக்க வேண்டும்.. காலமெல்லாம் வேதனையில் புழுங்கும்படி என்னை வைத்துவிடாதே சுமா.. உன்னைக் கடுமையாய் பேசினேன்... கன்னத்தில் அறைந்தேன். அதற்கு எனக்கு என்ன உரிமை இருக்கிறது... நான் உன்னிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும்.. உன் வாயால் 'மன்னித்து விட்டேன்' என்று கூறுவதைக் கேட்டால்தான் எனக்கு நிம்மதி.. தயவு செய்து கண்விழி சுமா..' தவிப்புடன் மனம் வேண்டியது. உள்ளுக்குள் புழுங்கித் தவித்தான், ஸ்ரீதர்.

சுமாவின் பெற்றோருக்கு ராஜகோபாலன், ஆறுதல் கூறினார். இருந்தும் அவர்களின் வயிற்றில் கொழுந்துவிட்டு எரியும் நெருப்பு தணிய மறுத்தது. பெற்று வளர்த்த உறவுகள் ஆயிற்றே!

"அப்பா.. நான் இங்கேயே இவர்களுக்கு உதவியா இருக்கிறேனே.. பாவம்.. இவர்களுக்கும் யாரும் துணை இல்லை... இந்த உதவிகூட நான் செய்யாவிட்டால் நான் மனுசனே இல்லப்பா.. வாங்க.. முதல்ல இவர்களுக்கு ஏதாவது சாப்பிட வாங்கி வரலாம்.. சாப்பிட்டார்களோ? இல்லையோ?" ஸ்ரீதர் சொல்ல..

அவனது தோளைத் தட்டிப் பேசினார், தந்தை.

''இது எனக்குப் பெருமையா இருக்குடா... இந்தக் காலத்தில், தப்பே செய்தாலும் 'நான் செய்யலையே'ன்னு நழுவுகிற மனிதர்கள் தான் அதிகம். தப்பு செய்தேன் என்று ஒத்துகொண்டு அதற்குப் பரிகாரம் தேடப் பார்க்கிறே பார்.. அது முக்கியம்.. இந்தா பிளாஸ்க்.. சூடா காபி வாங்கி வா.. அவர்களுக்கு சாப்பாடு இறங்குதோ என்னவோ.. காபியாவது குடிக்கட்டும். கொஞ்சம் தெம்பு வரும். உன் வினியைப் பற்றிக் கவலைப் படாதே.. எல்லாம் நாங்க பார்த்துக்கிறோம்.. நீ இவர்களுக்கு ஒத்தாசையா இருந்து சுமாவைக் கவனி..''

தன் மனநிலையைப் புரிந்துகொண்டு இதமாய்ப் பேசிய தந்தையை வாஞ்சையுடன் பார்த்தான், ஸ்ரீதர்.

இப்போது அவன் மனதில் இருந்த பாரம் வெகுவாய் குறைந்திருந்தது.

கொஞ்சமும் நகராமல்... பொறுமை இழக்காமல்... கடிகார முட்கள் மெல்ல நொண்டியடிப்பதைச் சகித்துக் கொண்டு... அசையாமல் அமர்ந்திருப்பது என்பது கஷ்டமான விசயம்தான். இருந்தும் செய்தான், ஸ்ரீதர்!

'எந்தத் தவறுக்கும் பரிகாரம் அவசியம்... தான் செய்த பெரிய தப்பிற்கு இது பிராயச்சித்தமாய் இருக்கட்டும்...' நினைத்தான்.

'வினிதா இதைப் புரிந்துகொள்வாள்... அவள் நல்லவள்... மென்மையானவள்... நிச்சயம் பாராட்டுவாள்...' நம்பினான்.

நிமிடங்கள் ஆமையாய் ஊர்ந்து... மணி நேரமும் நத்தையாய் நகர்ந்து... ஒரு வழியாய் இருபத்து நான்கு மணி



நேரம் கழிந்தது. 'டாக்டர் வருவாரா?' என்ற ஆவல்... 'என்ன சொல்வாரோ?' என்ற பயம்... மூச்சை இழுத்துப் பிடித்துக் கொண்டு காத்திருந்தனர்.


மருத்துவரும் வந்தார். அவர் சொன்ன செய்தி அவர்களது நெஞ்சில் பால் வார்த்தது.

சுமா, அபாய நிலையைத் தாண்டி விட்டாள்...

இழுத்து வைத்திருந்த மூச்சு... நிம்மதிப் பெருமூச்சாய் வெளிவந்தது.

ஆனால்... அடுத்ததாய் வந்த செய்தி அவர்களை அதிர்ச்சியுறச் செய்தது.

''அய்யோ... டாக்டர்...'' என்று பெற்றவர்கள் அலற... ஸ்ரீதர் உறைந்து நின்றான்.



## 20

மனிதனின் வாழ்க்கை என்பது நாவல்...! பல அத்தியாயங்களைக் கொண்டது. எப்போது எது நடக்கும் என்றோ... எந்த நேரத்தில் எத்தகைய திருப்பம் வரும் என்றோ யாரும் ஊகிக்க முடியாத மர்மக் கதை மாதிரி பல முடிச்சுகள்... பல திருப்பங்கள்... பல இரகசியங்கள்... பல அதிர்ச்சிகள் இருக்கும்.

மகிழ்ச்சியில் திளைக்கச் செய்வதும்... வேதனையில் துடிக்கச் செய்வதும்... அழுகையில் புரளச் செய்வதும்...

சிரிப்பில் குலுங்கச் செய்வதும்... நம்பிக்கையில் வாழச் செய்வதும்... ஏமாற்றத்தில் வாடச் செய்வதும்... எல்லாமே வாழ்வில் கை வந்த கலை!

மேலே இருந்து ஆட்டி வைக்கும் சூத்ரதாரியின் பொம்மலாட்டமே மனிதனின் வாழ்க்கை... அவனது கையசைவில் ஆடும் பொம்மைகள் நாம்... அதிசயங்களை நடத்துபவனும் அவனே... அதிர்ச்சிகளைத் தருபவனும் அவனே...

வினிதாவுக்கு நடந்தது அதிசயம் என்றால், சுமாவுக்கு ஏற்பட்டது அதிர்ச்சி.

தலையில் பலமாய் அடிபட்டதால் கண் நரம்புகளின் செல்கள் பாதிக்கப்பட்டு சுமாவுக்குக் கண் பார்வையே போய் விட்டதாம்.

'அய்யோ' என்று அலறிய சுமாவின் பெற்றவர்கள் இந்த மட்டும் தன் செல்ல மகள் உயிர் பிழைத்தாளே... அது போதும் என்று மனம் தெளிந்தார்கள். குருட்டு வாழ்க்கையாக இருக்கட்டும்... கண் முன் உயிருடன் வளைய வந்தால் அதுவே போதும் என்று பெற்ற மனம் மகிழ்ந்தது.

இது, இரு கோடுகள் தத்துவம்தான்.

உயிருக்கு ஆபத்து என்ற பெரிய கோடு, கண்களின் பார்வை இழப்பைச் சிறிய கோடாக்கி விட்டது.

**வி**ழித்ததும் எங்கும் கருமையாய் இருட்டு கண்டு தடுமாறிய சுமா, தனக்கு ஏற்பட்ட பாதிப்பை அறிந்ததும் 'ஓ'வென்று அலறினாள்.

'நான் குருடியா... என் வாழ்க்கை இருளடைந்து போனதா... இனி இந்த உலகத்தைக் காண முடியாதா... என்னைப் பெற்றவர்களின் அன்பு முகத்தைப் பார்க்க முடியாதா... இந்தப் பிரபஞ்சத்தில் இருக்கும் அழகையெல்லாம் ரசிக்க, தரிசிக்க முடியாதா... என் ஸ்ரீதரை... பார்க்க முடியாதா? இதைவிட நான் செத்திருக்கலாமே! ஏன் உயிர் பிழைத்தேன்...?' பார்வையில்லாத கண்கள் கலங்கின.



ஸ்ரீதரின் நெருக்கமும் ஆறுதல் வார்த்தைகளும்தான் அவளைத் தேற்றின.

சுமாவுக்குப் பணிவிடை செய்வதில் ஆர்வம் காட்டிய ஸ்ரீதருக்கு வினிதாவை ஒதுக்குகிறோம் என்றும் தோன்றவில்லை...

சுமாவுக்கு உதவ வேண்டும்... இந்த நிலையில் சுமாவை நிராதரவாய் விடக்கூடாது... வயதான அவளுடைய பெற்றோருக்கு உறுதுணையாய் இருப்பதுதான் செய்யக் கூடிய ஒரே பரிகாரம். அந்த எண்ணத்தில்தான் சுமாவுடனேயே இருந்தான்.

அவள் தாய் நெகிழ்ந்து போய் கண்ணீர் விட்டாள்.

சுமாவுக்கு உணவு வாங்கி வந்து தருவான். கை வீக்கம் குறைந்திருந்தாலும், வலி இன்னும் இருந்ததால் உணவை எடுத்து வாயில் வைக்க முடியாமல் அவதிப்பட்டாள், சுமா. தட்டில் இருக்கும் உணவைத் தட்டுத் தடுமாறி எடுத்து வாயில் போட முயன்று முடியாமல் அவதிப்படுவதைக் கண்டு பரிதாபப்பட்டவன், தானே ஊட்டி விட்டான்.

கண் பார்வை இல்லாத காரணத்தால் தட்டில் இருப்பதில் எதைச் சாப்பிடுகிறோம் என்று தெரியாமல் அவள் உண்பதைக் காணப் பரிதாபமாய் இருந்தது.

கண்கள் எத்தனை அவசியம்! அவற்றை இழந்தால் அனைத்துமே இழந்தது மாதிரிதான்... சுமா மேல் இரக்கம் சுரந்தது.

'ஸ்ரீதர் தினமும் தன்னருகே இருந்து கவனித்துக் கொள்வதை எண்ணி சுமாவின் மனதில் நன்றி பிறந்தது. இதே மருத்துவமனையில் அவன் நோயாளிகளாய் இருக்கிறாள்... இருந்தும் தன்னைக் கவனிக்கிறான் என்றால்...'

அதைக் காதல் என்று எண்ணி ஏமாறத் தயாரில்லை, அவள்...!

தன் மீது அவனுக்கு இருந்த காதல் என்றோ செத்து விட்டது என்று அவளும் புரிந்து கொண்டாள்.

என்றைக்கு அவள் தன் கன்னத்தில் அறைந்தானோ அன்றே அவளது ஆணவம்... அகங்காரம் அடியோடு ஒழிந்து போனது.

'உனக்கும் எனக்கும் என்ன சம்பந்தம்... போ வெளியே' என்று கை நீட்டியபோதே அவன் மீது இருந்த உரிமை பறி போனதை உணர்ந்தாள்.

இனி அவன் யாரோ? நான் யாரோ? அவனுக்கும் எனக்கும் சொந்த பந்தமில்லை! என்று நினைத்தபோது, வாழ்வே சூன்யமாகத் தெரிந்தது.

தன் மடமையால் அவனை இழந்தோம் என்று நினைத்து அவள் நிராசையுடன் நடந்தபோதுதான் விபத்து நடந்தது.

அந்த விபத்து அவளுடைய கண் பார்வையை மட்டும் களவாடிச் செல்லவில்லை. அவளுடைய கோப தாபங்களையும்தான்...!

பழைய சுமா செத்து, புதிய பிறவி எடுத்தாள்.

கண்கள் குருடானதும்கூட தனக்குக் கிடைத்த தண்டனை என்று நினைத்துக் கொண்டாள்.



'எப்படியெல்லாம் வினிதாவை விஷ வார்த்தைகளால் நோகச் செய்தேன்! எப்படித் துடித்திருப்பாள் அவள்!

பெண்ணுக்குப் பெண் இரங்குவது இயல்பு... 'நான் ஏன் அரக்கியாய் இருந்தேன்... அதுவும் கர்ப்பிணிப் பெண் வேறு... என் குழந்தைக்குத் தாயாய் இருந்து கவனிப்பாயா என்று யாசகம் கேட்டு வந்தவளை என்னவெல்லாம் பேசித் துடிக்க வைத்தேன். நான் செய்த பாவத்திற்கு கடவுள் என்னை உயிருடன் விட்டு வைத்ததே அதிகம்தான்.

'செத்து ஒழி' என்று எவ்வளவு எளிதாய் சொன்னேன்! 'உன்னுடன் உன் குழந்தையும் செத்துத் தொலையட்டும்...' விஷம் தோய்ந்த வார்த்தைகள்... சே! அப்படிச் சொல்ல எனக்கு என்ன உரிமை இருக்கிறது. அதனால்தான் சாவு என்னைத் தட்டி விட்டு விட்டுச் சென்றதோ...?'

மரணத்தின் விளிம்புவரை சென்ற பின்புதான் ஒரு உயிரின் மதிப்பு எத்தகையது என்பதை உணர முடிந்தது.

'கண் கெட்ட பின்பு சூரிய வணக்கம் என்பார்களே... எனக்குக் கண் கெட்ட பின்புதான் ஞானமே வந்திருக்கிறது. புத்தருக்கு ஞானம் போதி மரத்தடியில் என்றால் எனக்குச் சாலை விபத்திலா?'

எங்கே பார்க்கிறோம் என்ற இலக்கு தெரியாமல் வெறித்தவாறே அமர்ந்திருந்த சுமாவின் பரிதாபத் தோற்றம், உள்ளே வந்த ஸ்ரீதரின் மனதில் அனுதாபத்தை உண்டு பண்ணியது.

"என்ன யோசனை?"

"ஸ்ரீதர்... நீங்களா...?"

"என்ன யோசனைன்னு கேட்டேன் சுமா..."

"ப்ச்சு... பழசுதான்... வினிதாவைச் சந்திக்கணும் ஸ்ரீதர்... அவகிட்டே மன்னிப்பு கேட்கணும்... என்னவெல்லாம் பேசினேன்... நாக்கு இருக்கிறது என்று சாட்டையாய் சுழற்றி அவள் மனதை ரணப்படுத்தி விட்டேன் ஸ்ரீதர்... எப்படியெல்லாம் வேதனைப்பட்டாளோ... சே! என் ஊனக் கண் திறந்திருந்தபோது அறிவுக் கண் மூடி இருந்தது. இப்போ அது முழித்துக் கொண்டதும் கண்களே ஊனமாகி விட்டது. நான் செய்த தப்புகள் குருட்டுக் கண்ணுக்குள் இருட்டுப் பூதமாய் நின்று பயமுறுத்துகிறது. வினிதா என்னை மன்னிப்பாளா ஸ்ரீதர்...? நான் செய்த பாவத்திற்கு வருந்தி பாவ மன்னிப்பு கேட்க காத்திருக்கிறேன்னு வினிதா கிட்டே சொல்வீங்கதானே..."

"பழசையெல்லாம் நினைத்து ஏன் நீயே உன்னை வருத்திக் கொள்கிறாய் சுமா...? நடந்தது நடந்து விட்டது. செய்தது தப்பு என்று உணர்ந்தாலே போதும்... வினிதாவுக்கு உன் மீது கோபமோ... வெறுப்போ இல்லை... இப்போ நீ மனம் திருந்திப் பேசினதை அவள் அறிந்தால் இன்னும் மகிழ்வாள்... அவளை நீ சரியா புரிந்து கொள்ளவில்லை சுமா! வினிதாவோட மனசு சுத்தத் தங்கம்... வருத்தப் படாதே சுமா... கண்டிப்பா அவகிட்டே சொல்றேன்... போதுமா... இப்போ இதைச் சாப்பிடு... சூடா பருப்பு ரசம் கலந்து சோறு கொண்டு வந்திருக்கிறேன்... வாய்க்கு சுவையா இருக்கும்... எங்கே... வாயைத் திற..." சுமாவுக்கு ஊட்டினான்.

சோற்றை விழுங்கியவள், "வேணாம் ஸ்ரீதர்" என்றாள்.

"வேணாமா... சுவையாய் இல்லையா?"



"அதில்லை... வினிதாகிட்டே நீங்கள் எதுவும் சொல்ல வேண்டாம். நேரில் நானே சொல்லணும்... அதுதான் நியாயம்... அப்போதான் என் மனசும் மகிழும்..."


அப்போது வினிதா வந்தாள்.

அறையினுள் நுழைந்த வினிதாவின் காதுகளில் சுமா பேசிய கடைசி வார்த்தைகள் மட்டுமே விழ... பந்தாய் நெருப்பு, வயிற்றினுள் சுழன்று திரும்பியது.

அழுகை வெடித்து வர... அடக்கிக் கொண்டவளாய்த் திரும்பி தன் அறையை நோக்கி ஓடினாள்.

பார்வை இல்லாமல் வெறித்துக் கொண்டிருந்த சுமாவுக்கோ... அவள் முன் அமர்ந்து ஊட்டி விட்டுக் கொண்டிருந்த ஸ்ரீதருக்கோ வினிதா வந்ததும் தெரியாது... சென்றதும் தெரியாது...

பின்னால் வரப்போகும் புயலுக்கு அறிகுறி காட்டாமல் இளம் காற்று இனிமையாய் வீசிக் கொண்டிருந்தது.



## 21

ஜன்னல் அருகில் நின்று வெளியே வெறித்துக் கொண்டிருந்தாள், வினிதா.

மின் கம்பத்தில் அமர்ந்திருந்த காகம் ஒன்று தன் வறட்டுக் குரலில் அபஸ்வரம் பாடிக் கொண்டிருந்தது.

ஒருவேளை அதற்கும் தெரிந்து விட்டதோ? தன் வாழ்க்கையிலும் பூபாளம் முடிந்து முகாரி வந்து விட்டது என்று.

இதோ பிறந்த வீட்டிற்கு வந்து இருபது நாள் ஆகிவிட்டன.

மருத்துவமனையிலிருந்து நேரே இங்கே வந்தாயிற்று. ஏன்... எதற்கு என்று அறியாமல் தவித்துக் கேட்ட கணவனிடம் எதுவும் சொல்லாமல், பெற்றவர்களுடன் இருக்க விருப்பம் என்று சொன்னாள்.

ஸ்ரீதர் மீது கோபம் இருந்தாலும் மனம் ஏனோ அவனையே நினைத்துக் கொண்டிருந்தது.

'பேதை மனம்' என்று சொல்வது இதைத்தானோ. மறக்க முயற்சித்தாலும் மகள் நினைவூட்டுகிறாளே. அப்பாவைப் போல சிரிப்பு... அப்பாவைப் போல கண்களில் குறும்பு... அப்பாவைப் போல பிடிவாதம்.

சுசிலாவுக்கும் ராஜகோபாலனுக்கும் கூட வருத்தம்தான்... இருந்தும் வினிதாவின் போக்கிலேயே விட்டுவிட்டனர்.

'இப்போதுதான் செத்துப் பிழைத்திருக்கிறாள். அவள் ஆசைப்படியே இருக்கட்டும்' என நினைத்தனர்.

இங்கே அனைவருக்கும் குதூகலம். பழைய மகிழ்ச்சி தாண்டவமாடியது...! குட்டிப் பாப்பாவின் சேட்டைகளும் விளையாட்டுகளும் வீட்டைக் கலகலக்க வைத்தன.

அனைவர் முன்னிலையில் இயல்பாய் இருக்க முயற்சித்தாலும் மனதால் ஒதுங்கியே இருந்தாள், வினிதா.

ஸ்ரீதர் இங்கு வந்தாலும் அவள் பேசாமல் ஒதுங்கினாள். தொலைபேசியில் பேசினாலும் வெறும் 'உம்' மட்டுமே!

ஸ்ரீதர் குழம்பிப் போனான். தன்னைப் பார்த்ததும் முகம் மலர்ந்து... கண்கள் மின்ன... புன்னகையுடன் பேசும் பழைய வினிதா எங்கே போனாள்?



இவள்... இந்தப் புது வினிதா, முகம் சுணங்கி... தொட்டாற் சுருங்கியாய் ஒதுங்குகிறாளே...!

ஒருவேளை... தலையில் அறுவை செய்ததன் விளைவா... சுமாவுக்குக் கண்பார்வை போனது போல இவளுக்கு... சே... இருக்காது... மற்றவர்களிடம் சுமுகமாய் இருக்கிறாளே... ஆனாலும் பழைய கலகலப்பைத்தான் காணோம்!

ஒருமுறை 'சுமா' என்று பேசத் தொடங்கியபோது காதில் விழாதது போல சென்றாள். 'உன்னிடம் பேச சுமா துடிக்கிறாள்' என்று சொன்னதும், 'என்னிடம் பேச என்ன இருக்கிறது? எல்லாம் முடிந்து விட்டது. நான்தான் இங்கே வந்துவிட்டேனே... இனி உங்கள் விருப்பப்படி இருக்கலாம். இப்ப யாரைத் திருப்திப்படுத்த இங்கே வருகிறீர்கள் என்று தெரியவில்லை. நீங்கள் வராமல் இருந்தாலும் தப்பாக நினைத்துக் கொள்ள மாட்டார்கள்...' என்று நறுக்கென்று அவள் சொல்லவும் அவன் திகைத்துப் போனான்.

எந்தப் பேய் வினிதாவைப் பிடித்து ஆட்டுகிறது? 'நீ வராதே' என்று நாசூக்காய் உணர்த்துகிறாள். அதாவது செருப்பைச் சால்வையில் சுற்றி அடிப்பது போல கவுரவப் பூச்சு!

'அது போகட்டும்... எல்லாம் முடிந்து விட்டதாமே...'

'எது? எதைச் சொல்கிறாள்?' தலையைப் பிய்த்துக் கொள்ள வேண்டும் போல் இருந்தது.

'இப்போதைக்கு எதையும் பேச வேண்டாம்' என்று அவன் புறப்பட்டான்.

எதுவும் சொல்லாமல் அவன் சென்றது கண்டு வேதனை யுற்றாள், வினிதா.

'ஆக அவருக்கு வேண்டியது கிடைத்து விட்டது. நான் ஒதுங்கி விட்டதை எத்தனை சுலபமாய் ஏற்றுக் கொண்டு விட்டார்.'

'அன்று காட்டிய அன்பு வெறும் வெளிவேஷம் போலும். ஆகா, நீ பிழைத்து வரணும் வினிம்மா!' என்று முத்தம் வேறு. யாருக்காகப் பிழைக்க வேண்டும்... எதற்காக நான் வாழணும்... எனக்கு என்று யார்?' கதறி அழ வேண்டும் போல் தோன்றியது.

நடுவே, கால்களில் கட்டு போட்டது போல குழந்தையின் அணைப்பு... பூக்கரங்கள் கால்களைச் சுற்றிப் பின்னிப் பிணைந்திருந்தன.

"என் செல்லமே.. நீ எனக்குப் போதும்டா... உனக்காக நான் வாழ வேண்டும்."

"உன் அப்பா உன்னையும் என்னையும் விட்டுவிட்டு... நிரந்தரமாய் போயாச்சுடா..."

ஸ்ரீதருக்கும் அவளுக்கும் இடையே இரும்புத்திரை விழுந்தது.

ஆற்றாமையுடன் குழந்தையை இறுக அணைத்துக் கொண்டாள்.

கண்களில் கண்ணீர் கோடிட்டது.

அன்று சுமாவின் அறையில் அவள் கண்ட காட்சி... இன்னும் நினைவில் நின்று இதயத்தை வாளால் அறுத்தது.

சுமாவின் வார்த்தைகள் சம்மட்டியாய் அறைந்தன. ஏன் போனோம் அந்த அறைக்கு...? போனதால்தானே இத்தனை வேதனையும் துன்பமும் என்று எரிச்சல் அடைந்தாலும்



போனதால்தானே உண்மையை உணர முடிந்தது என்று நினைத்தாள்.

வினிதாவை மருத்துவர், பரிசோதித்துவிட்டு மறுநாள் 'டிஸ்சார்ஜ்' ஆகி வீடு செல்லலாம் என்றதும் மனப்பறவை சிறகடித்துப் பறந்தது.

மருத்துவமனை வாசம் அலுத்துப் போயிருந்தது. ஸ்ரீதரின் வரவும் குறைந்து விட்டதால் கணவனின் அருகில் இனி இருக்கலாம் என்ற நினைப்பே இனித்தது. மருத்துவ மனையின் சூழ்நிலைக்கு ஆகாது என்பதால் குழந்தை முகத்தைப் பார்த்து நாள் கணக்காகி... மகளுக்காகத் தாய் மனம் பரபரத்தது. எப்போது விடியும்?

அப்போதுதான் கவுசல்யா வாயிலாகத் தெரிய வந்தது. 'சுமா... விபத்தில் சிக்கி அதிருஷ்ட வசமாய் உயிர் பிழைத்திருக்கிறாளாம்...'

அறிந்தவுடன் உள்ளம் பதைத்து, சுமாவைக் காணக் கிளம்பினாள். என்னதான் வெறுப்பைக் காட்டினாலும் இதே மருத்துவமனையில் இருக்கும்போது பார்க்காமல் இருப்பது மனிதத்தன்மை இல்லை. அங்கிருந்த செவிலியிடம் சொல்லி அறை எண்ணைத் தெரிந்து கொண்டு நடந்தாள்.

'சுமா எந்த நிலையில் இருக்கிறாளோ... எழுந்து நடக்கிறாளோ... இல்லை... கை கால்... சே... ஏதேதோ நினைக்கத் தோன்றுகிறது. சுமாவுக்கு எதுவும் ஆகியிருக்காது...'

அந்த தீவிர சிகிச்சைப் பிரிவினுள் நுழைந்தபோது சுமா தலையில் கட்டுடன் கட்டிலில் அமர்ந்திருப்பதைக் கண்டதும் மனக்குள் வந்த நிம்மதி அடுத்த கணமே கரைந்து போனது.

அவள் முன் இருப்பவர் ஸ்ரீதர் அல்லவா...! அவர் ஏன் இங்கு இருக்கிறார்? மனைவியைப் பார்க்க நேரமில்லை என்றால் இங்கு வர முடிகிறதா?

மனசுக்குள் தடுமாற்றம்...

அடுத்த கணமே மனம் தெளிந்தாள்...

'இருக்காது... சந்தேகம் என்பது நோய்... அவரை நான் சந்தேகப்பட்டால் அமைதியே குலைந்து விடும். பார்த்தவுடனேயே சந்தேகப்படுவதற்கு நான் சராசரி பெண் இல்லை... சுமாவைப் பார்க்க வந்திருப்பார்.'

ஆனால்... 'வாயைத் திற' என்று அவளுக்கு உணவு ஊட்டி விடுவதைச் சாதாரணமாய் ஏற்க மனம் தயங்கியது.

அது இருக்கட்டும்...

சுமாவின் பார்வை என்னை வெறிக்கிறதே... மனைவியின் எதிரே அவள் கணவன் ஊட்டிவிட உண்கிறோமே என்ற எண்ணம் இல்லாமல் என்னைப் பார்த்துக் கொண்டு...

அடுத்து சுமா பேசியதுதான் நெஞ்சைத் துளைத்தது.

'வினிதாகிட்ட நீங்கள் எதுவும் சொல்ல வேண்டாம். நேரில் வந்து நானே அதைச் சொல்லணும். அதுதான் நியாயம்... அப்போதுதான் என் மனசும் மகிழும்.'

என் காதில் விழ வேண்டும் என்றே சொல்லியிருக்க வேண்டும்! எதைச் சொல்லப் போகிறாள்...? ஸ்ரீதரை விட்டு விலகிப் போய்விடு என்றா...? அவள் சொல்வது இருக்கட்டும் ஸ்ரீதருக்கும் இதில் சம்மதமா...?

அற்ப ஆயுசு என்று நினைத்தவளுக்கு ஆயுசு கெட்டி என்று தெரிந்திருந்தால் பாவம்... இந்த முடிவுக்கு வந்திருக்க மாட்டார்கள்.




இனியும் இவர்களுக்கு இடைஞ்சலாய் இருக்க வேண்டுமா... 'சீ... போ' என்று சொல்லும்வரை காத்திருக்க வேண்டுமா... கவுரவமாய் விலகி விடுவதுதான் மரியாதை...

அதுதான் விலகி வந்து விட்டாள்.

ஸ்ரீதரை விட்டு வந்து விட்டாலும் உள்ளம் என்னவோ அவனை விட்டு வர மறுத்துவிட்டது.

அதைக் கணவன் அறியக்கூடாது என்பதற்காக தன் மனதை இறுக்கிக் கொண்டாள். தன்னைச் சுற்றிலும் சுவரை எழுப்பிக் கொண்டாள்.

வினிதாவின் இந்த மாற்றம் ஸ்ரீதரை மருள வைத்தது. அவனால் அதைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை.



## 22

கவுசல்யா, தன் மகள் வினிதாவை அழைத்துக் கொண்டு கோவிலுக்குச் சென்றாள்.

நெரிசலில் குழந்தை தாங்காது என்று சந்தியாவிடம் விட்டு விட்டு தாயும் மகளும் சென்றிருந்தனர்.

அம்மனின் சந்நிதியில் மனம் உருக வேண்டினாள், வினிதா.

'என் மனம் எதை நினைத்து ஏங்குகிறது...? தெரியவில்லையே...' தவித்தாள், அவள்.

மனம் முழுக்க அலைபாய வழியெல்லாம் சிந்தனைகள்... 'ஒருவேளை... ஸ்ரீதர் வந்திருப்பாரோ...'

'வினி... உன்னையும் குழந்தையையும் விட்டு இருக்க முடியவில்லை... வா... வீட்டுக்குப் போகலாம் என்பாரோ.'

'அழைத்தால் போய்விடலாமா...?' நினைக்கவே மனம் துள்ளியது. அப்படி நடக்க வேண்டும் என்று ஏங்கியது இதயம். எதிர்பார்ப்புடன் வீட்டினுள் நுழைந்தவர்களுக்குத் திகைப்பு! அங்கு அமர்ந்திருந்தவள், சுமா...!

'இவள் எங்கே இங்கு வந்தாள்...? அவளாக வந்தாளா...? இல்லை, ஸ்ரீதர் அனுப்பி இங்கு வந்திருக்கிறாளா...?' மனம் மீண்டும் வேதாளமாகியது.

காலடி ஓசை கேட்டுத் திரும்பிய சுமா, ''வினிதா'' என்றாள்.

''என்ன விஷயம் சுமா... வீடு தேடி வந்திருப்பதைப் பார்த்தால் ரொம்ப அவசரம் போல இருக்கிறது...''

''ஆமாம் வினிதா... உன்னைப் பார்த்துப் பேசணும்னு தான் வந்திருக்கிறேன்.''

''நீங்க என்ன சொல்ல வந்திருக்கிறீங்க என்று எனக்குத் தெரியும் சுமா...''

''ஸ்ரீதர் சொல்லிவிட்டாரா...? சொல்ல வேண்டாம் என்றேனே... இருக்கட்டும் வினிதா... என் வாயால் சொல்லணும்னுதான் வந்திருக்கிறேன்... அப்போதான் என் மனசுக்கு நிம்மதி...''

''முதலில் காபி குடியுங்க சுமா...'' என்று அவசர அவசரமாய் காபி போட்டு சுமாவின் கையில் கொடுத்தாள்.

வினிதாவிடம் மெதுவாய் சொன்னாள், சந்தியா.

''அக்கா... அவங்க வந்து அரை மணி நேரம் ஆச்சு...''



''சந்தியா... குழந்தை அழுற மாதிரி இருக்கு... போய்ப் பாரு...'' தங்கையை அங்கிருந்து அனுப்பி வைத்தாள்.

தங்கை, அவர்களின் பேச்சு எதையும் கேட்டு விடக்கூடாது என்ற பயம். ''சுமா... நீங்க இத்தனை தூரம் வந்ததும் இத்தனை நேரம் காத்திருந்ததும் வீண். ஏற்கனவே இது விஷயமாய் என் கண... ஸ்ரீதரிடம் பேசி விட்டேன். இனியும் இதைப்பற்றிப் பேச எனக்கு விருப்பம் இல்லை... நீங்கள் கிளம்பலாம்.''

''வினிதா... தயவு செஞ்சு நான் சொல்றதை...''

''என் பொறுமைக்கும் எல்லை இருக்கு... உங்க நாடகத்தை எல்லாம் பார்த்துச் சலித்துப் போய்தான் ஒதுங்கி வந்துட்டேன். நீங்களும், ஸ்ரீதரும் ஜோடி சேர இனி எந்த விதத் தடையும் இல்லை. எங்களது ஒப்பந்தம் காலாவதியாகி விட்டது... அதனால் கவலை வேண்டாம்.''

''அய்யோ... நான் அதற்கு வரலை. நான் சொல்வதைக் கேட்டுவிட்டு அப்புறம் பேசுங்க.''

நிதானமிழந்த வினிதா, பொறுமையையும் இழந்தவளாய், ''போதும்... உங்கள் வார்த்தைகளைக் கேட்டு ஊமையாய் நான் துடித்தது எல்லாம் போதும். ஸ்ரீதரின் மனைவியாய் அத்தனையையும் பொறுத்துக் கொண்டேன். இனியும் அப்படி இருக்க வேண்டும் என்று அவசியம் இல்லை. இதுவே நம் கடைசி சந்திப்பாக இருக்கட்டும்'' என்றதும் சுமா, தளர்ந்தவளாய் எழுந்தாள்.

''ஒரு நிமிசம்... ஸ்ரீதரிடம் இதைச் சொல்லி விடுங்கள்... உங்களுடைய மகிழ்ச்சிக்கு நானோ என் குழந்தையோ நிச்சயம் தடையாக இருக்க மாட்டோம். உங்களுடைய

வருங்கால வாழ்க்கைக்கு என் வாழ்த்துக்கள்'' என்று சொன்ன வினிதா, மனம் பாறையாய் கனக்க, திரும்பினாள்.

கவுசல்யா, முகத்தில் கலக்கம் தெரிய நின்றிருந்தாள்.

''என்னடீ இது... நீ பேசினது எல்லாம் என் காதிலும் விழுந்தது. ஏதோ புண்ணியத்தால் நீ பிழைத்து வந்தாயிற்று. இனி கணவனுடன் மகிழ்ச்சியா குடும்பம் நடத்துவேன்னு பார்த்தா... என்னவோ பிரிவுங்கிறே... ஒப்பந்தம்கிறே... உண்மையில் என்ன நடக்கிறது? மாப்பிள்ளை வேறு இங்கு வர்றதே இல்லை. உங்களுக்குள் என்ன ஆச்சு வினிதா? சொல்லு.''

''அம்மா... நீ வேறு என்னைப் பிடுங்காதே... நேரம் வர்றப்போ எல்லாத்தையும் நானே சொல்றேனே...''

''எதையாவது சொல்லி என் வாயை அடைத்துவிடு... உன் வாழ்க்கை மகிழ்ச்சியா இருக்க வேண்டும். வினி... அதைவிட எனக்கு...'' என்றவள் அதிர்ந்தாள். ''அய்யோ... அங்கே பாருடீ... அந்தப் பொண்ணு விழப்போறா... ஓடு...''

உண்மைதான்... தட்டுத்தடுமாறி நடந்த சுமா, கால் தடுக்கி... பிடித்துக்கொள்ள ஏதாவது கிடைக்கிறதா என்று துளாவப் போய் அருகில் இருந்த பூத்தொட்டியைத் தள்ளி தானும் விழப்போகும் நேரத்தில்... உள்ளே வந்த ஸ்ரீதர், ஓடி வந்து பிடித்து நிறுத்தினான். கரங்களின் தொடுதலில் அவனை உணர்ந்து ''ஸ்ரீதர்...'' என்றாள்.

''சுமா! ஏன் இங்கே வந்தாய்? நான்தான் தனியா வர வேண்டாம் என்றேனே. வா... வந்து உட்கார்! ஏதேனும் அடிபட்டதா பார்...'' அவளது தோளைப் பற்றி அருகில் இருந்த இருக்கையில் அமர வைத்தான்.



இத்தனையையும் பார்த்துக் கொண்டிருந்த வினிதா, சிலையாய் நின்றிருந்தாள்.

இதயத்தில் இடி விழுந்தாற்போல வலி...

மனதில் புயல் வீசியது போல கலக்கம்...

மேனியில் மின்னல் தாக்கியது போன்ற அதிர்வு...

கண்களில் மழை பொழிந்தது போல நீர்...

அப்படியே முகத்தை மூடிக் கொண்டு குலுங்கி அழுதாள்.

அழுவதா? சே... அசிங்கம் என்று நினைத்த வினிதாவுக்குக் கூட இப்போது அழுகை தேவைப்பட்டது. ஸ்ரீதர் இனி எனக்கில்லை என்ற எண்ணமே அவளுக்குள் கண்ணீரைப் பொங்கச் செய்தது. அழுதாள். ஆசை தீர, அழுதாள். அவளை இரு கரங்கள் எழுப்பி மெல்ல அழைத்துக் கொள்ளும் வரை...

கவுசல்யா, நாசூக்காய் அங்கிருந்து நகர்ந்தாள்.

'கணவன் - மனைவிக்குள் ஏதோ ஊடல் போலும். நாம் ஏன் நடுவில் நந்தியாய் இருக்க வேண்டும்?' நிறைந்த மனதுடன் தாய் சென்றாள்.

கணவனின் தோளில் முகம் சாய்ந்து விம்மினாள், வினிதா.

'இந்த தோள்கள் எனக்கு நிரந்தரம் இல்லையே...' கவலைப்பட்டாள்.

அவளது முதுகை இதமாய் வருடினான், ஸ்ரீதர். ''உன் மனதில் இருக்கும் வேதனையைச் சொன்னால்தானே

புரியும். கொஞ்ச நாளாகவே நீ நீயாக இல்லை வினி. எதையோ நினைத்து தவிக்கிறே... என்ன விஷயம்? சொல்லு."

அவனை ஏறிட்டாள். அப்போதுதான் அவனை ஆழ கவனித்தாள். கண்களைச் சுற்றிக் கருமைப்படலம்... வேதனையைச் சுமந்த கண்கள்... மழிக்கப்படாத முகம்... எதனால்...

தொட்டாற் சிணுங்கியாய் விலகினாள்.

"நாம் பிரிய வேண்டிய நேரம் வந்தாச்சு."

"ஏன்?"

"நீங்க சுமாவை மகிழ்ச்சியா மணக்கலாம்."

"நீ... என்ன சொல்றே?"

"எனக்கு... என் மகள் இருக்கிறாள்... போதும்."

"அப்போ... எனக்கு நீயும், என் குழந்தையும் வேண்டாமா வினி?"

"இல்லை ஸ்ரீதர்... ஏதேனும் ஒன்றை நீங்கள் இழக்கத்தான் வேண்டும். காதலியா? மனைவியா? அது உங்களோட முடிவு..."

"எனக்கு என் காதலியும் வேண்டும்... நீயும் வேணும் வினி..."

இதயத்தில் தீப்பந்தம் செருகினாற் போல தகிப்பு! பொறுமைத் தீயா?'

'சுமா கொடுத்து வைத்தவள்... நான்?' நிராசையில் உள்ளம் தவித்தது. கண்கள் கலங்கியிருப்பதை அவன் காணாதிருக்க பார்வையைத் தாழ்த்திக் கொண்டாள்.



அவளையே பார்த்துக் கொண்டிருந்தவன், "என் காதலியைத் தேடித்தான் இங்கே வந்தேன்... அவள்தான் கண்ணாமூச்சி காட்டுகிறாள்... எப்படியாவது அவளை அழைத்துப் போக வேண்டும் என்றுதான் காத்திருக்கிறேன். அவள் வர வேண்டுமே வினிதா" என்று சொல்லவும்,

'ஓ... சுமா இங்கு வருவது தெரிந்துதான் இங்கு வந்திருக்கிறார்?' என்று நினைத்தாள், வினிதா.

"உங்கள் காதலிதான் காத்திருக்கிறாளே... அழைத்துச் செல்லுங்கள்."

"அப்போ... புறப்படு போகலாம்."

"என்ன இது விடுகதை விளையாட்டு?"

"ஆமாம் வினி... காதலின்னு நான் சொன்னது உன்னைத்தான்! இன்னுமா என்னை நீ புரிந்துகொள்ள வில்லை? என்றைக்கோ நான் வினி தாசன் ஆகி விட்டேன். என் அசடே... வாழை மட்டை... தேவையில்லாமல் நீதான் எதையோ நினைத்துக் குழம்பிக் கொண்டிருக்கிறாய்... அது சரி... நான் விலகிப் போனப்போ விரும்பிப் பேசிய என் காதல் மனைவி, நான் விரும்பத் தொடங்கியதும் ஏன் விலகிப் போனாள்னுதான் எனக்குப் புரியாத புதிரா இருக்கிறது வினி..."

வினிதா, சுமாவைப் பார்த்தாள்.

"ஓ... சுமா விஷயமா? சுமா இப்போ மாறி விட்டாள், வினிதா. நாம ரெண்டு பேரும் மகிழ்ச்சியா இருக்க வேண்டும் என்பதுதான் அவளோட ஆசை. உன் மனம்

நோகும்படி பேசியதற்கு உன்னை நேரில் பார்த்து மன்னிப்புக் கேட்டே ஆக வேண்டும் என்று வந்திருக்கிறாள். தான் செய்த தப்புக்குத் தண்டனையா தன் கண்களைப் பறிகொடுத்து விட்டாள்."

"..........."

"ஒரு விதத்தில் அவளோட இந்தப் பரிதாப நிலைக்கு நானும் ஒரு காரணம் வினி. அன்றைக்கு உனக்கு 'ஆபரேஷன்' ஆன தினத்தில் சுமா பேசியதைச் சகித்துக் கொள்ள முடியாமல் அறைந்து விட்டேன். எந்த மனநிலையில் சென்றாளோ... பாவம், விபத்துக்குள்ளாகி விட்டாள். நான் செய்த தவறுக்கு பிராயச்சித்தமா அவளுடன் இருந்து கவனித்துக் கொண்டேன். அதனால்தான் உன்னை வந்து பார்க்க முடியாமல் போனது. இப்ப சொல்லு... நான் செய்ததில் தவறு இருக்கிறதா?"

அவன் சொல்லச் சொல்ல வினிதாவின் தலை கிறு கிறுத்தது. 'சுமாவுக்கு கண் பார்வை போய் விட்டதா? அவளையா நான் வெளியே போ என்றேன்? தட்டுத் தடுமாறி விழப் பார்த்தாளே... விழுந்து அடிபட்டிருந் தால்...? அதற்கு நான் பொறுப்பாகி இருப்பேனே... அதுதான் மருத்துவமனையில் அப்படி வெறித்தாள் போலும். நான் அதைத் தவறாய் நினைத்துக் கொண்டு... பாவம், என்னிடம் மன்னிப்பு கேட்கத் தட்டுத் தடுமாறி வந்தவளை எப்படிப் பேசி மனம் வருந்தச் செய்துவிட்டேன். எனக்கு என்ன வந்தது? ஏன் பொறுமை இழந்தேன்? கணவனை இழக்கப் போகிறோம் என்ற வேதனையாலா இப்படி நிதானமிழந்து நடந்து கொண்டேன்? சே...'



ஓடிச்சென்று சுமாவின் கரங்களைப் பற்றிக் கொண் டாள்.

"வினிதா... நீங்கள்தானே? என்னை மன்னித்து விட் டீர்கள். இல்லையா?" ஆவலுடன் கேட்டாள், சுமா.

"இல்லை சுமா... இப்போ நான்தான் உங்ககிட்ட மன்னிப்பு கேட்கிறேன். நடந்ததைத் தெரிந்து கொள்ளாமல் நீங்கள் பேசிய நல்லதையெல்லாம் கோணல் மாணலாய்ப் புரிந்து கொண்டு கடுமையாக நடந்து விட்டேன். தப்பு என்னோடதுதான் சுமா..."

"நான் பேசியதைவிடவா வினிதா? என்னவெல்லாம் பேசினேன்... உங்களுடன் குழந்தையும் சாகட்டும் என்றேனே! நினைக்கவே வெட்கமாக இருக்கிறது. ஒருவிதத்தில் நான் உங்களுக்கு நன்றி சொல்லணும் வினிதா... என்னுள் இருந்த கெட்ட குணங்கள் மாயமாகி, ஒரு புது மனுஷியாய் மாறியிருக்கிறேன் என்றால் அதற்கு நீங்கள்தான் காரணம்! ஏன் தெரியுமா? ஒரு நல்ல மனதை நோகடித்ததற்கு தண்டனையாய் என் கண் பார்வை போய் விட்டது. கண் பார்வை போன பின்புதான் இருட்டில் என்னைத் தேடிப் பார்த்தேன். குருட்டு வாழ்க்கையில்தான் எனக்கு ஞானம் கிடைத்தது. வினிதா... என் தப்பை மன்னித்து, என்னைச் சகோதரியாய் ஏற்றுக் கொள்வீர் களா?" கெஞ்சும் குரலில் சுமா கேட்டாள்.

"சகோதரியின் தப்பையெல்லாம் மனசில் வைத்துக் கொள்ள மாட்டேன், சுமா! நீங்களும் எங்களுள் ஒருத்தியாய் இனி எங்க வீட்டுக்கு வரணும்."

"வருவேன்... முயன்றால் முடியாதது இல்லை வினிதா! கண்கள் இல்லேன்னாலும் உங்கள் அன்பு, வழிகாட்டாதா? பார்த்துக் கொண்டிருங்கள். இனி என் அன்பு மழையில நீங்களும் குழந்தையும் நிறைவாய் நனைவீர்கள்."

"அப்போ கைவசம் புதுசா நாலைந்து குடைகள் இருக்க வேண்டும் என்று சொல்!" என்று ஸ்ரீதர் பரிகாசம் செய்ய...

தூக்கம் கலைந்து அழுத பேத்தியை வினிதாவிடம் கொடுக்க வந்த கவுசல்யா, கடைசி வார்த்தைகளைக் கேட்டுவிட்டு வெகுளியாய்ச் சொன்னாள் -

"குடையா... எதற்கு மாப்பிள்ளை அனாவசியமாய்? இங்கே நாலைந்து பழைய குடை கிடக்கிறது. பேசாமல் எடுத்துக் கொண்டு போங்கள்."

அனைவரும் ஏன் சிரிக்கிறார்கள் என்று தெரியாமல் கவுசல்யா திகைக்க, அழுகையை நிறுத்திவிட்டு குழந்தையும் சிரித்தது.

இனி அங்கே மகிழ்ச்சி வெள்ளம்தான்... அது எப்போதும் தொடரும்.